விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 03 வெள்ளிக்கிழமை (19.07.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 212

ராம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

## தேர்தலில் நீதி இல்லையாயின்

# ஈழப் போர் வெடிக்கும்!

## எச்சரிக்கிறது ஐ.தே.க

(கொழும்பு)

வடக்கில் தேர்தல் நீதியாகவும் நியாயமான முறையிலும் நடைபெறாது போனால், இலங்கையில் மீண்டும் ஒரு ஈழப் போர் உருவாகும் என ஐக்கிய தேசியக் கட்சி எச்சரித்துள்ளது.

அரசு அந்த நிலைமையை உருவாக்கும் வகையில் செயற்படக்கூடாது என அந்தக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் கீர்த்திஸ்ரீ மஞ்சநாயக்க தெரிவித்தார். இராஜகிரியவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## வேட்பாளர் பங்கீடு

## கூட்டமைப்பின் கூட்டம் குழப்பத்துடன் முடிந்தது

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் தெரிவுக்கான தீர்மானத்தினை எடுக்கமுடியாத நிலையில் மீண்டும் இன்று கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இலங்கை தமிழரசு கட்சியின் யாழ். மாவட்ட காரியாலயத்தில் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் கூடிய தேர்தல் நியமனக் குழுவினர்களான தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவஞானம் சிறிதரன் உட்பட வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மற்றும் சட்டத்தரணி என்.சிறிகாந்தா ஆகியோர் இரண்டாம் நாளான நேற்று மீண்டும் கலந்துரையாடினர்.

சுமார் 3 மணித்தியாலயங்கள் நடைபெற்ற இக்கலந்துரையாடலில தமிழ்த் (19ஆம் பக்கம் பார்க்க)

## கவிஞர் வாலி காலமானார்



(சென்னை)

பிரபல தமிழ் திரைப்படப் பாடலாசிரியரும் கவிஞருமான வாலி நேற்று வியாழக்கிழமை தனியார் மருத்துவமனையொன்றில் காலமானார். அவருக்கு வயது 82. அவர் சில காலம நோய்வாய்ப்பட்டிருந்தார்.

கடந்த யூன் 8ஆம் திகதியன்று வசந்தபாலனின் தெருக்கூத்து படத்திற்காக ஏ.ஆர்.ரகுமான் இசையில் பாடல் எழுதிக்கொடுத்துவிட்டு வீடு திரும்பியவர் , அன்று இரவே உடல நலக்குறைவால் சென்னை தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இடையில் அவரது உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. ஆனால் அவர் உடல்நிலையில் மீண்டும் (19ஆம் பக்கம் பார்க்க)

## ரூ.109 கோடி செலவிடப்படும்

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய உச்சிமாநாட்டை வெற்றிகரமாக நடத்த 109 கோடி ரூபாயை அரசாங்கம் செலவிடும் என தகவல் ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று தகவல் ஊடகத்துறை அமைச்சில் நடைபெற்றது.

இதில் கருத்து வெளியிடும் போதே அமைச்சர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த உச்சி மாநாடு இலங்கையில் நடத்தப்படுவதன் காரணமாக நாடு பாரிய நன்மைகளை அடைந்து கொள்ளும். நாட்டின் பொருளாதாரத் துறை பல்வேறு வகைகளிலும் அபிவிருத்தி (19ஆம் பக்கம் பார்க்க)

## கருணாநிதியை ஜெயா கண்டிப்பு



கச்சத்தீவை மீட்கக்கோரி திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர் கருணாநிதி உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளமைக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கச்சத்தீவு விவகாரத்தை கையில் எடுக்க திராவிட முன்னேற்ற கழகம், அண்ணா திராவிட முன்னேற்றகழகம்ஆகிய இரண்டுகட்சிகளுமே மும்முரம் காட்டி வருகின்றன. இந்நிலையிலேயே தமிழக முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கருணாநிதியை கடிந்து ஜெயலலிதா (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியுடன் சந்திப்பு மன்னார் ஆயர் இல்லை!

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் மன்னார் மாவட்ட முக்கியஸ்தர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு தொகுதி குருமார் மற்றும் பிரதேச அரசியல்வாதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த சந்திப்பில் மன்னார் மாவட்ட மக்களின் பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

"அரசாங்கம் தொடர்ந்து வட பிராந்தியத்தில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும். ஏனெனில் மதம், இனக்குழுமம் அல்லது பூகோள அமைவிடம் என்பவற்றைப் பொருட்படுத்தாமல் ஒவ்வொரு இலங்கையரும் ஒரே விதமான வசதிகளை அனுபவிக்க வேண்டும்" என ஜனாதிபதி இதன் போது (20ஆம் பக்கம் பார்க்க)

## நகை மோசடி செய்ததாக பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

5 கோடியே 28 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளினை மோசடி செய்தனர் என இரு பெண்களுக்கு எதிராக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மடத்தடி, குருநகரினைச் சேர்ந்த பெண்களுக்கு எதிராகவே இவ்வாறு பலரால் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த இரு பெண்களும் தங்கள் பகுதிகளைச் சேர்ந்த பெண்களிடமும் பிற இடத்தினைச் சேர்ந்த பெண்களிடமும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகவும் பவுண் ஒன்றிற்கு குறைந்த வட்டியில் பணம் தருவதாகக் கூறியும் சுமார் ஆயிரத்து 100 பவுணிற்கு மேற்பட்ட தங்க நகைகளை வாங்கியுள்ளனர்.

நகைகளைக் கொடுத்தோரும் மகிழ்ச்சி (19ஆம் பக்கம் பார்க்க)

## 5 தென்னிலங்கை கட்சிகள் வடக்கிலும் போட்டியிட முடிவு

மூன்று மாகாணசபைத் தேர்தல்களிலும் அரசை எதிர்த்துப் போட்டியிடுவதற்கு அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவதற்கான அமைப்பிலுள்ள கட்சிகளில 5 கட்சிகள் தீர்மானித்துள்ளன.

மேற்படி அமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்குத் தேர்தலில் போட்டியிடுகின்ற அதேவேளை, அதற்கு ஆதரவு வழங்க ஜனநாயக மக்கள் முன்னணியும் தீர்மானித்துள்ளது.

அத்துடன், மத்திய மாகாணத்தில் ஐ.தே.கவுடன் இணைந்து போட்டியிடுவதற்கும் ஜனநாயக மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளது.

இந்நிலையிலே அதிகாரப் பகிர்வுக்கான கூட்டில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளான அஸாத் சாலி தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி, கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தலைமையிலான நவசமசமாஜக் கட்சி, சிறிதுங்க ஜயசூரிய தலைமையிலான ஐக்கிய சோசலிசக் கட்சி, சரத் மனமேந்திர தலைமையிலான (19ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தை முகாமுக்குள் முடக்கும்வரை இந்தியா பல்குழல் தாக்குதலை நடத்தும்!

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றச்சாட்டு



வடக்கில் இராணுவத்தை முகாமகளில் முடக்கும் வரை இந்தியா இலங்கைக்கு அழுத்தங்களை கொடுக்கும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளர் மருத்துவர் வசந்த பண்டார தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

இலங்கை எதிரான இந்தியாவின் இந்த அழுத்தங்கள் பல கோணங்களில் இருக்கும் எனவும் இராணுவம் முகாம்களில் முடக்கப்படும்வரை இந்தியா இதனை நிறுத்தப் போவதில்லை.

இதற்கு பொதுநலவாய நாடுகளின் அமைப்பும் ஆதரவை வழங்கும். இந்திய - இலங்கை உடன்படிக்கையை இலங்கை இரத்துச் செய்தால் கச்சதீவை மீளப்பெறுவோம் என்ற இந்தியாவின் அச்சுறுத்தல் கருணாநிதியின் ஊடாக வெளிவந்துள்ளது.

வடக்கு (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளையார் இன்

12 மணி முதல் 3 மணிவரை மிகச் சிறந்த சைவ அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.
சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும்.

**சைவ உணவு: 150/-** **அசைவ உணவு 175/-**

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(C-4030)

## ST.JOHN'S COLLEGE. JAFFNA



The Late Mr.T.Gunaseelan

| | |
|---|---|
| Teacher | 1958 - 1971 |
| Sectional Head | 1972 - 1980 |
| Vice Principal | 1980 - 1985 |
| Principal | 1985 - 1987 |

Passed away in Canada on 16 th July.

A Service of Thanksgiving & Remembrance for his life and service will be held

**on Friday 19th July 2013, at 8 : 15 am**

at St.John the Baptist' s Church, Chundikuli

*The Principal*

(C-4053)

## தாதிய சேவையின் அர்ப்பணிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தாதிய மாணவ சேவை அர்ப்பணிப்பு விழாவும் வருடாந்த சஞ்சிகை வெளியீட்டு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் அதிபர் செல்வி வல்லிபுரநாதன் ரயூலாதேவி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் காலை 9.30 மணிக்கு முதலாம் வருட மாணவர்களில் சித்தியடைந்த மாணவர்களினை சேவைக்கு அர்ப்பணிக்கும் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

மாலை நிகழ்வாக பிற்பகல் 2 மணியளவில் தாதியர் பயிற்சிக் கல்லூரியினால் வெளியிடப்படும் சுடரொளி சஞ்சிகையின் வெளியீட்டு நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (எ-4)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
தொ.பே. : 021 321 0815,
E-mail : valampurii@yahoo.com,

## Jaffna College

### *Prize Giving 2013*

*Will be held on Friday the 19 th July at 4. pm in the Quadrangle*

**Chief Guests :**

**Aiyathurai Gnanathasan LLM (UWI)**
President's Counsel
Retd.Additional Solicitor General
Barrister & Solicitor (Tasmania)
Solicitor (N.S.W. Australia), Solicitor (England & Wales)

**Prof.Christeine Ariaranee Gnanathasan**
MBBS.M.Phil, M.D., F.R.C.P
Professor in Medicine,
Dept. of Clinical Medicine
Faculty of Medicine
University of Colombo

*All are cordially invited*

Jaffna College, Vaddukoddai.
Principal.

(C-4030)

## லண்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கான விளக்கம்

- மேலே குறிப்பிட்டுள்ள நாடுகளுக்கு செல்ல விரும்புவோர் நேரில் வரவும்
- போய் சேர்ந்த பின்பு பணம் செலுத்தலாம்
- மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்
- நிபந்தனைகளுக்கு உட்பட்டது

**முன்பதிவுகளுக்கு மட்டும் 0772568122**

(3378)

**அனி இன்டர் நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்**
**இல. 72, இலுப்பையடி சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இ. 0214921831, 0214921832**

## கருத்தரங்கு

அரசியல் விஞ்ஞானம் A/L 2013
காலம்: செவ்வாய், புதன்கிழமை (23,24)
நேரம் : 9 am - 1 pm
இடம் : உதயன் மற்ஸ் அக்கடமி, உடுவில்
அனுமதி : ரூபா 300
Contact No : 0778531910

(3396)

## COMPUTERS FOR SALE

Intel Processor-3.2GHz, Intel Mother Board, 80GB Sata HDD, 1GB DDR-II Ram, ATX Tower Casing, DVD Rom, 15" Dell LCD Monitor, 7.2 Multy Dongle, Keyboard, Mouse, Speaker... Rs : 18,650/= (1Year Warranty)

Keyboard-550, Mouse-250, H.Phone-250, 7.2M.Dongle-2950, Webcam-675, Table-2900, Casing-2650, UPS-4450, Pendrive : 4GB-850, 8GB-1100, 16GB-1750, 32GB-3600..

(C-4050)

சகலவிதமான கணனி உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் கூடிய உத்தரவாதத்துடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**North Lead Computer & Accessories-Wholesaler, # 328, Stanly Road, Jaffna**
**Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460**

## சிங்கப்பூர் வேலை அனுமதியை பெற்றுக் கொள்வதற்குரிய விளக்கம்

### (Employment Pass)

- இரண்டு வருட வேலை
- மாதாந்த சம்பளம் 1250 சிங்கப்பூர் டொலர்
- மாபில் தொழிற்சாலை
- மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்
- நிபந்தனைகளுக்கு உட்பட்டது

**முன்பதிவுகளுக்கு மட்டும் 0772568122**

107X1250=133,750/=

(3378)

**அனி இன்டர் நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்**
**இல. 72, இலுப்பையடி சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இ. 0214921831, 0214921832**

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் தங்கமயில்



அல்வாய் மேற்கு, கிளிவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் தங்கமயில் அவர்கள் 18.07.2013 வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் தெய்வயானை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம் அன்னம்மாவின் அன்பு மருமகனும், விமலராணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சுயாதா, சுதர்சினி, சாமினி, பாமினி, விமல்ராஜ், பிரியதர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மோகன்ராஜ், குணசீலன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புமிகு மாமனாரும் வாகினி, கேசிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் மகேஸ்வரி, புவனேஸ்வரி, பரமேஸ்வரி காலஞ்சென்ற கமலேஸ்வரி ஆகியோரின் அன்புமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று(19.07.2013)வெள்ளிக்கிழமை பகல் 10 மணியளவில் அவரது 'இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் தெற்கு பங்குவம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

கிளிவெட்டி,
அல்வாய் மேற்கு, அல்வாய்.

தகவல்: குடும்பத்தினர்.

(இ)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCY

*Further to the advertisement published for the Post of Stenographer Gr.II (English), amendment is given below;*

**POST-STENOGRAPHR GR. II(ENGLISH)**

*(Vacancies exist at the University of Jaffna and Vavuniya Campus of the University of Jaffna)*

Registrar
18.07.2013

(C-4043)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## இரண்டு மலைகள்

"உன்னிடம் கடுகளவு நம்பிக்கை இருந்தால் போதும் ... ஒரு பெரிய மலையையே புரட்டலாம்" என்றார் ஒரு பெரியவர்.

"அது எப்படி முடியும்?" என்று யோசிக்க ஆரம்பித்தேன்.

"நம்பிக்கை ஊட்டுவதற்காக கொஞ்சம் மிகைப்படுத்திச் சொல்கிறீர்கள்" என்றேன்.

"அப்படியில்லை, இந்தக் கதையைக் கேள்!" என்றார் அவர்.

இது ஒரு சீன தேசக் கதை. பல ஆண்டுகள் சீன ஜனாதிபதியாக இருந்த மாசேதுங் பொதுக்கூட்டங்களில் மக்களுக்கு இந்தக் கதையைத்தான் சொல்வது வழக்கம்.

சீன தேசத்தின் ஷாங்காய் மாநிலத்தில் ஒரு சிறிய கிராமம். அங்கு வயதானவர் ஒருவர் தனது இரண்டு ஆண் பிள்ளைகளுடன் வசித்து வந்தார்.

அவர்களுடைய வீட்டு வாசலின் முன் வழியை இரண்டு பெரிய மலைகள் அடைத்துக் கொண்டிருந்தன.

எப்பாடுபட்டாவது அந்த இரண்டு மலைகளையும் இடித்து தள்ளி விட முடியும் என்பது அந்தப் பெரியவருடைய நம்பிக்கை. உடனே செயலில் இறங்கினார். இரண்டு பிள்ளைகளையும் சேர்த்துக் கொண்டு கடப்பாறைகளை எடுத்து மலையை உடைக்க ஆரம்பித்தார்.

வயதான காலத்தில் அந்தப் பிள்ளைகளுடன் சேர்ந்து இவர் மலையை உடைப்பதை அந்த வழியால் செல்பவர்கள் எல்லோரும் பார்த்துக் கொண்டு போனார்கள்.

அவர்களுக்கு சிரிப்புத்தான் வந்தது.

அந்தப் பெரிவரிடம் ஒருவர் "நீங்கள் செய்யும் வேலையில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? மலை எவ்வளவு பெரியது... அதை நீங்கள் மூவரும் சேர்ந்து உடைத்துத் தள்ளி விட முடியுமா? பேசாமல் இதை விட்டுவிட்டு வேறேதாவது உருப்படியான வேலை இருந்தால் அதை செய்யுங்கள்" என்றார்.

பெரியவருக்கு ஆவேசம் வந்து விட்டது.

நாங்கள் மூவர் என்று தானே இப்படிச் சொல்கிறீர்கள்? அதனால் என்ன? நானும் என் பிள்ளைகளும் ஆரம்பித்த இந்த வேலையை முடிக்க முடியாமல் நான் இறந்து விட்டால் என் பிள்ளைகளே இந்த வேலையைத் தொடர்ந்து செய்வார்கள்.

அவர்களும் இறந்து விட்டால் என் பேரப்பிள்ளைகள் இதைத் தொடர்வார்கள்.

இப்படி வாழையடி வாழையாக இந்த வேலை தொடரும். ஒரு கட்டத்தில் இந்த இரண்டு மலைகளும் தரைமட்டமாகும். ஆனால் ஒன்று இது ஒரு அங்குலம் கூட வளரப்போவதில்லை. நாங்கள் உடைக்க உடைக்க குறைந்து கொண்டே வரும்.

என்றாவது ஒருநாள் என் வாரிசுகள் இந்த மலையை தரைமட்டமாக்குவார்கள். வாசல் வழியை நன்றாக அமைத்து விடுவார்கள். அந்த நம்பிக்கை எனக்குண்டு என்று சொல்லி விட்டு தொடர்ந்து மலையை உடைக்க ஆரம்பித்தார்.

இவருக்கு போய் புத்திசொல்ல ஆரம்பித்தோமே என்று புலம்பிக் கொண்டே வந்தவர்களும் போய்விட்டார்கள்.

மலை உடைக்கும் வேலை இரவு பகலாக தொடர்ந்து நடந்தது. இவர்கள் படும்பாட்டைப் பார்த்த கடவுள் இவர்களுக்கு உதவி செய்ய நினைத்தார்.

அவர்களுடைய உழைப்பையும்– உழைப்பின் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையையும் இரண்டு தேவதைகள் ஆக்கினார்.

ஒருநாள் இரவோடிரவாக அந்த இரு மலைகளையும் அகற்றும்படி உத்தரவிட்டார்.

ஒருநாள் காலையில் எழும்பி பார்த்தார்கள். மலை இருந்த இடம் காலியாக இருந்தது.

பெரியவரும் அவருடைய பிள்ளைகளும் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்களாம்.

இந்த கதையின் விளக்கம் என்னவென்றால் அந்த இரண்டு மலைகளும் என்ன தெரியுமா? ஒன்று–வறுமை. இன்னொன்று– பற்றாக்குறை.

அந்த இரண்டு தேவதைகளும் யார் தெரியுமா? ஒன்று– உழைப்பு, இன்னொன்று– நம்பிக்கை.

பொதுமக்கள்தான்–கடவுள்.

திறமை–வலிமை–பொறுமை இவைதான் அந்த பெரியவரும் பிள்ளைகளும்.

உறுதியோடும் நம்பிக்கையோடும் செயற்பட்டால் எந்த விதத் தடையையும் உடைத்தெறிய முடியும் என்பது இக்கதையின் கருத்து.

ஒருவன் மது அருந்திவிட்டு வரும் வழியில் ஒரு பெரிய மலையில் தலையை முட்டிக் கொண்டு நின்றிருந்தான்.

அவ்வழியால் வந்த இன்னொருவன் "ஏன் இப்படி நிற்கின்றாய்? பேசாமல் விட்டுப் போ" என்றான்.

அதற்கு அவன் "விபரம் தெரியாமல் பேசாதே... நான் தலையை எடுத்துவிட்டால் மலை சாய்ந்து விடும்.

அது தான் நேற்றிலிருந்து இதைத் தாங்கிக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக பிரிவில் தேசிய அடையாள அட்டை வழங்குவது தொடர்பான நடமாடும் சேவை எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் தொடர்ந்து மூன்று நாட்கள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக நடைபெறவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தன் அறிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை அருளம்பலம் ஞாபகார்த்த மண்டபத்தில் ஜே/89, ஜே/90, ஜே/91, ஜே/92, ஜே/93, ஜே/94, ஜே/95, ஜே/96, ஜே/106, ஜே/107, ஜே/108, ஜே/109 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி இந் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

மறுநாள் புதன்கிழமை முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன்கோவில் கல்யாண மண்டபத்தில், ஜே/99, ஜே/115, ஜே/116, ஜே/117, ஜே/118, ஜே/119, ஜே/120, ஜே/121, ஜே/123 ஜே/124, ஜே/125, ஜே/126, ஜே/127, ஜே/128 ஆகிய கிராம சேவையாளர் பிரிவை உள்ளடக்கியதாகவும் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை திருநெல்வெலி சரஸ்வதி திருமண மண்டபத்தில் ஜே/97, ஜே/98, ஜே/100, ஜே/101, ஜே/102, ஜே/103, ஜே/104, ஜே/105, ஜே/110, ஜே/111, ஜே/112, ஜே/113, ஜே/114, ஜே/122, ஆகிய கிராமசேவகர் பிரிவை உள்ளடக்கியதாகவும் மேற்படி அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நடமாடும் சேவையூடாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் இவ்வாறு விண்ணப்பிக்கப்பட்டவர்களின் பிறப்பு மற்றும் திருமணப் பதிவுகளை மேற் கொள்ளாதோர் பதிவு செய்யப்பட வில்லை அல்லது பதிவு சேதம் என்ற சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ–5)

# செப்டெம்பர் மாதத்தில் வருகின்றாள் யாழ்தேவி?

யாழ்தேவி புகையிரதம் செப்டெம்பர் மாதம் முதல் கிளிநொச்சி வரை சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக புகையிரத திணைக்களம் கூறியுள்ளது.

வவுனியாவில் இருந்து காங்கேசன்துறை வரையுள்ள 29 புகையிரத நிலையங்கள் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

யுத்தத்தினால் அழிவடைந்த வடபகுதி புகையிரத பாதைகள் இந்திய இர்கொன் கம்பனியினூடாக மீளமைக்கப்பட்டு வருகிறது. கொழும்பில் இருந்து வவுனியா வரையே இடம்பெற்ற யாழ்தேவி புகையிரதச் சேவை தற்பொழுது ஓமந்தை வரை இடம்பெறுகிறது.

நிர்மாணப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதோடு அடுத்த வருட முடிவுக்குள் யாழ்ப்பாணம் வரை யாழ்தேவி புகையிரதம் மேலும் பயணம் செய்யவுள்ளதாக அமைச்சு கூறியது. மதவாச்சியில் இருந்து தலைமன்னார் வரையான புகையிரதப் பாதையும் துரிதமாக அமைக்கப்பட்டு வருகிறது.

தற்பொழுது புளியங்குளம், மாங்குளம், முறிகண்டி, முறிகண்டிகோயில், நாவற்குழி, பரந்தன், ஆனையிறவு, பளை, எழுதுமட்டுவாழ், மிருசுவில், கொடிகாமம், மீசாலை, சாவகச்சேரி, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், கொக்காவில், கோண்டாவில், சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பழை, காங்கேசன்துறை அடங்கலான புகையிரதப் பாதைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. (அ–2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 80-120 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 70 | 80 | 80 |
| தக்காளி | 100 | 150 | 100 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 40 |
| கோவா | 100 | 140 | 100 | 120 |
| கரட் | 120 | 100 | 120 | 160 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 250 | 200 | 200-260 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 130 | 140 |
| பாகற்காய் | 60 | 80 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 60 | 120 |
| பயற்றங்காய் | 100 | 80 | 60 | 60 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 | 140 |
| பீற்றூட் | 60 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 100 | 90 | 80 | 140 |
| முருங்கைக்காய் | 100 | 140 | 120 | 200 |
| போஞ்சி | 120 | 120 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | 20 | 30 | – | – |
| கீரை – 1 பிடி | 10 | 15-20 | 10 | 20 |
| [illegible] | 100 | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 30-35 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 90 | 80 | 120 |

# இராசி பலன்

19.07.2013
(ஆடி 03, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
ஏகாதசி முற்பகல் 10.18 மணிவரை
அனுசம் பிற்பகல் 2.09 மணிவரை
இராகுகாலம் 10.31-12.01 மணிவரை
சுபநேரம் 6.01-7.31 மணிவரை
சயன ஏகாதசி விரதம்

**மேடம்** அம்பிகை வழிபாட்டில் இன்பம் காண வேண்டிய நாள், வேலைச் சுமை கூடும், மற்றவர்களுக்காக பொறுப்புச் சொல்வதை தவிர்ப்பது நல்லது, கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை.

**இடபம்** கந்தன் வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பெண்களால் பெருமைகள் சேரலாம், பேர்சன நன்மையுண்டு.

**மிதுனம்** வியாபார விருத்தி ஏற்படலாம், ஆரோக்கியம் சீராகும், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வீட்டுப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வீர்கள்.

**கடகம்** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், சொல்லை செயலாக்கிக்காட்ட முற்படுவீர்கள், நீண்ட நாளைய ஆசைகள் நிறைவேறலாம்.

**சிங்கம்** பெருமைப்படும் வகையில் உதவிகள் கிடைக்கலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், வாகன சுகமுண்டு, சுப செய்திகள் வந்து சேரும் நாள், கல்வியில் மேன்மையுண்டு.

**கன்னி** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், தொழிலில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், முருகன் வழிபாடு முன்னேற்றம் தரும், அந்நியர் சந்திப்புண்டு.

**துலாம்** புதிய வாய்ப்புக்கள் வந்து சேரலாம், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**விருச்சிகம்** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் பகை அகலும், அரசியல்வாதிகளால் அனுகூலமுண்டு, வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**தனுசு** வழிபாட்டால் வளம் காண வேண்டிய நாள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, உறவினர் நலன் கருதி சில செலவுகள் ஏற்படலாம், அமைதிக் குறைவுகள் ஏற்படலாம்.

**மகரம்** வியக்கும் தகவல்கள் வீடு வந்து சேரலாம், வங்கியில் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கும்பம்** அன்பு நண்பர்கள் ஆதரவு தர முன் வரலாம், தடைப்பட்ட காரியங்கள் எளிதில் கைகூடும், கட்டடப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு.

**மீனம்** திறமைமிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகமூர்த்தி வித்தியாலயத்தின் கட்டாயக் கல்வி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை பாடசாலையின் கட்டாயக்கல்வி குழுவின ரால் ஆலடிக்கிராம மாணவர்களின் வரவு சீர் செய்யும் நடவடிக்கை கடந்த ஒருமாத கால மாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வித்தியாசாலை அதிபர் தி.தேவதயாளன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நடவடி




க்கையில் வலிகாம வலய முறைசாரா கல்விப் பிரிவின் திட்ட அலுவலர் ச.சிவரூபன் மற்றும் கட்டாயக் கல்வி குழுவினரும் பங்குபற்றி யிருந்தனர்.

ஆலடிக் கிராமத்தில் ஒழுங்கீனமற்ற, நீண் ட காலம் பாடசாலை செல்லாதிருந்த மாண வர்களின் விபரங்கள் திரட்டப்பட்டு வரவுகள் சீர்செய்யப்பட்டுள்ளன.

அத்தோடு பாடசாலைக்கு தற்போதும் வருகை தராதுள்ள மாணவர்களை பாடசா லைக்கு வரச் செய்வதற்கு மாற்று நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் வித்தியாலய அதிபர் மேலும் தெரிவித்து ள்ளார். (அ-9)




நன்றி:-மிரர்

# யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறை நாற்றமெடுக்கின்றது

## சடலங்களை அடக்கம் செய்யாமையே காரணம்

(யாழ்ப்பாணம்)

**உரிமை கோரப்படாத சடலங்கள் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் நீண்ட நாட்களாக உள்ளமையால் பிரேத அறை பெரும் சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படுகிறது.**

இவற்றோடு சத்திரசிகிச்சைகளின் போது அகற்றப்படும் உடல் அவயவங்களும் பிரேத அறையில் தேங்கியுள்ளதனால் துர்நாற் றமும் வீசுகின்றது என தெரிவிக்கப்படுகின்றது.

நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் உரிமை கோரப்படாத சடலமொன்று 7 தொடக்கம் 14 நாட்களுக்குள் அரச செலவில் தகனம் செய் யப்பட வேண்டும்.

ஆனால் யாழ். போதனா வைத்தியசா லையின் பிரேத அறையில் வைக்கப்பட்டு உள்ள சடலங்கள் மாதக்கணக்கில் தேங்கி கிடக்கின்றன.

சத்திர சிகிச்சைகளின் போது அகற்றப்ப டுகின்ற உடல் அவயவங்களும் பெருமளவில் பிண அறையில் தேங்கியுள்ளமையால் அவை பழுதடைந்து துர்நாற்றம் வீசுகின்றன.

தென்பகுதியில் உள்ள வைத்தியசாலை பிரேத அறைகளில் காணப்படுகின்ற உயர் வசதிகளை போன்று இங்கு காணப்படாமை யால் இதற்குள் பணிபுரியம் ஊழியர்கள் பெரும் சிரமத்துடனேயே பணியாற்றி வரு கின்றனர்.

நல்லூர்,யாழ். மத்திய பேருந்து தரிப் பிடம், யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபம், யாழ் பண்ணைப் பகுதிகளிலிருந்து கண்டெடுக் கப்பட்ட மனித சடலங்கள் இதுவரை இங்கு அடையாளம் காணப்படவில்லை.

இச்சடலங்கள் மீட்கப்பட்டு ஒருமாத காலத் திற்கும் மேலாகியுள்ள நிலையில் அவற்றை அரச செலவில் தகனம் செய்வதற்கு உரிய அதிகாரிகள் எவரும் நடவடிக்கை எடுக்கவுமி மில்லை.

முன்னா இவ்வாறு உரிமை கோரப்படாத சடல ங்கள், சத்திர் சிகிச்சைகளின் போது அகற் றப்பட்ட உடல் அவயங்கள் என்பன கொட்டடி மயானத்திலே தகனம் செய்யப்பட்டு வந்தன.

எனினும் சுகாதாரத்தை கருத்திற் கொண்டு கொட்டடி இந்து மயான நிர்வாகத்தினர் அங்கு தகனம் செய்வதற்கு மறுப்புத் தெரிவித்தனர்.

இதனையடுத்து யாழ். போதனா வைத்திய சாலையில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது வண்ணார்பண்ணை கோம் பயன் மணல் மயானத்தில் இவற்றை தகனம் செய்வதற்கு இடமொன்று ஒதுக்கி தருவதாக யாழ். மாநகர சபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா உறுதியளித்தி ருந்தார்.

எனினும் இதுவரை வண்ணார்பண்ணை, கோம்பயன் மணல் இந்து மயானத்தில் இதற்கென பிரத்தியேக இடம் அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

இதேவேளை உரிமை கோரப்படாத சட லங் களை தகனம் செய்வதற்கு சடலம் ஒன் றுக்கு 7 ஆயிரம் ரூபாவை யாழ். மாநகர சபைக்கு வைத்தியசாலை நிர்வாகம் செலுத்தி வருகின்றது என வைத்தியசாலைத் தரப்பு தெரிவிக்கின்றது.

மேலும் மாதக்கணக்கில் சடலங்கள் கிடப்பில் உள்ளதால் உயிரிழந்த ஓர் உடலுக்கு செலு த்தப்படும் மரியாதை, சமய சடங்குகள் என் பன புறக்கணிக்கணிக்கப்படுகின்றன என வும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இது விடயத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம், யாழ். மாநகர சபை, யாழ் போதனா வைத்தியசாலை அபி விருத்திக்குழு என்பன உரிய நடவடிக்கை களை விரைந்து எடுக்க வேண்டும் என கோரப்படுகின்றது. (அ-4)

# கற்கை நெறி ஆரம்பம்

இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்ப்பாண நிலையத்தினால் நடத்தப்படும் நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் 3 (2013/14) கற்கைநெறிக்கான வகுப்புக்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பௌதீகவியல்துறை விரிவுரையாளர் மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளன.

இக்கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுக மளிக்குமாறு ஒருங்கிணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகர் அறிவித்துள்ளார். (அ)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை பழைய மாணவர்கள் சங்க பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்ப கல் 3.30 மணிக்கு யா/உடுவில் முருக மூர்த்தி வித்தியாசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் தி.தேவதயாளன் தலைமையில் நடைபெற வுள்ளது.

பழைய மாணவர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (அ-ம)






மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையுடன் இணைந்து அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்தும் சுவாமி விபுலாநந்தர் விழா அண்மையில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் விழாவில் கலந்து கொண்ட மாணவிகள் மற்றும் பெரியோர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி கோரல்கள்

### இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு துறைமுகங்கள், பெருந்தெருக்கள் அமைச்சு வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழப்பாணம் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வீதிகள், புனர் நிர்மாணம் செய்வதற்கான கேள்வி கோரல் அறிவித்தல் பெருந்தெருக்கள் அமைச்சின் நிதியின் மூலம் உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்

•பின்வரும் புனர் நிர்மாண வேலைகளிற்கான மூடிய கேள்வி கோரல்களை பிரதம பொறியியலாளர், கேள்விச்சபையின் சார்பாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் பெற்றுக் கொள்வார்.

| வேலை விபரம் | கேள்வி பாதுகாப்பு பணம் | ஒப்பந்தகாரர் தரம் ICTAD |
|---|---|---|
| 1.மேற்படை அமைத்து கல்லிட்டு தாரிடல் தொண்டமானாறு-வல்லை- துன்னாலை வீதி 9.3-10.6 கி.மீ | 45,000.00 | C 7 |
| 2.செப்பனிட்டு சிறு கற்படை அமைத்தல்- கந்தசாமி கோவில் நாச்சிமார் கோவில் வீதி, அனலைதீவு, 1.5- 1.85 கி.மீ | 38,000.00 | C 7 |
| 3.செப்பனிட்டு சிறு கற்படை அமைத்தல்- கந்தசாமி கோவில் நாச்சிமார் கோவில் வீதி, அனலைதீவு, 1.85- 2.14 கி.மீ | 30,170.00 | C 7 |
| 4.பாலம் மீள் அமைத்தல் - 6/4 ஆவரங்கால்- தொண்ட மானாறு வீதி | 33,000.00 | C 7 |
| 5.பாலம் மீள் அமைத்தல்- 6/3 ஆவரங்கால்- தொண்டமானாறு வீதி | 33,000.00 | C 7 |
| 6.பாலம் மீள் அமைத்தல் - 6/2 கொக்குவில்- வட்டுக்கோட்டை வீதி | 14,900.00 | C 7 |
| 7.மதகு மீள் நிர்மாணம் - 12/7 - புத்தூர்- கந்தரோடை வீதி | 34,000.00 | C 7 |
| 8.மதகு மீள் நிர்மாணம் - 3/2 - தொண்டமானாறு-வல்லை- துன்னாலை வீதி. | 34,000.00 | C 7 |
| 9.வடிகால் அமைத்தல் - நாவாந்துறை - ஓட்டுமடம் வீதி 0.9-1.0 கி.மீ | 8,750.00 | C 7 |
| 10.புனரமைத்து தாரிடல்- கரையூர் றெக்கிளமேசன் வீதி, 0.0-0.09, 2.96-3.06 கி.மீ | 15,000.00 | C 7 |
| 11.புனரமைத்து தாரிடல்- கரையூர் றெக்கிளமேசன் வீதி, 0.5- 0.83கி.மீ | 50,000.00 | C 7 |
| 12.புனரமைத்து தாரிடல்- கரையூர் றெக்கிளமேசன் வீதி, 0.9- 0.19 கி.மீ | 15,000.00 | C 7 |
| 13.புனரமைத்து தாரிடல்- கரையூர் றெக்கிளமேசன் வீதி, 0.83- 1.16 கி.மீ | 15,000.00 | C 7 |
| 14.புனரமைத்து தாரிடல் - மாதகல்- பண்டத்தரிப்பு- சாம்பிலித்துறை வீதி, 4.5- 4.84 கி.மீ | 50,000.00 | C 7 |
| 15.புனரமைத்து தாரிடல் - மாதகல்- பண்டத்தரிப்பு- சாம்பிலித்துறை வீதி, 4.84 - 5.04 கி.மீ | 30,000.00 | C 7 |
| 16.புனரமைத்து தாரிடல் - மாதகல்- பண்டத்தரிப்பு- சாம்பிலித்துறை வீதி, 5.04 - 5.38 கி.மீ | 50,000.00 | C 7 |
| 17.புனரமைத்து தாரிடல் - மாதகல்- பண்டத்தரிப்பு சாம்பிலித்துறை வீதி, 5.38 - 5.58 கி.மீ | 30,000.00 | C 7 |

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 02.08.2013 அன்று முற்பகல் 10.00 மணியுடன் முடிவடையும். கேள்விப்பத்திரங்கள் 02.08.2013 அன்று காலை 10.30 மணிக்கு பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

கேள்விப்பத்திரங்களை தயாரிப்பதற்குரிய படிவங்களை பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்ப்பாணம், காரியாலயத்தில் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்விப்பத்திர ஆவணங்கள் 23.07.2013 தொடக்கம் 01.08.2013 பிற்பகல் 2 மணி வரை மீள் அளிக்க முடியாத வைப்புத்தொகையான 750/-+ பெறுமதி சேர் வரி 12% செலுத்திப் பெற வேண்டும்.

1)தகுதி வாய்ந்த கேள்வி கோரல்கள் கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.

2)கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ரட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணித்தல் துறையில் மேற் குறிப்பிட்ட தரத்திற்கமைய பதிவு செய்திருத்தல் வேண்டும்.

03.கேள்வி கோரல் ஆவணங்கள் பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிட முடியும்.

04.முன் கேள்வி கோரல் கூட்டம் 31.07.2013 அன்று காலை 10 மணிக்கு பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.

05.கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவு திகதியில் இருந்து 60 கலண்டர் நாள்கள் வரை செல்லுபடியாக இருக்கும். (29.09.2013)

06. மேலே குறிப்பிடப்பட்ட கேள்விப்பாதுகாப்பு பணத்தொகை அவற்றிற்குரிய பாதுகாப்பு பத்திரம் ஒவ்வொரு கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். ஏற்றுக் கொள்ளக் கூடிய பாதுகாப்பு பத்திரம் இல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

07. மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்கள் பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண காரியாலயத்தில் மேற்குறிப்பிட்ட முடிவு காலத்திற்கு (02.08.2013 மு.ப 10.00) முன் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

08. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும்.

கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

09. மேலதிக விபரங்கள் பின்வரும் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களுடன் தயவு செய்து தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும்.

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|
| பிரதம பொறியியலாளர்,<br>வீதி அபிவிருத்தி அதிகாரசபை<br>யாழ்ப்பாணம். | 021 222 2968 |

மாகாணப் பணிப்பாளர் (வ)
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம். (சி/4044)

பிரதம பொறியியலாளர்
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

# வெளிப்புறத்தில் குற்றச்சாட்டு மறுபுறத்தில் கைகுலுக்கல்

## பிரித்தானிய அரசின் இரட்டைவேடம்

(கொழும்பு)

**இலங்கை மீது மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுகளை முன்வைத்துக் கொண்டே பிரித்தானிய அரசாங்கம் இலங்கைக்கு பெருந்தொகை ஆயுதங்களை விற்பனை செய்திருப்பது மனித உரிமை ஆர்வலர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.**

பிரித்தானிய அரசாங்கத்தினால் இலங்கைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ள ஆயுதங்களின் பெறுமதி சுமார் 8 மில்லியன் பவுண்கள் என்று தெரியவந்துள்ளது.

இவற்றில் இராணுவ மற்றும் புலனாய்வு கருவிகளுக்காக 49 ஏற்றுமதி அனுமதி பத்திரங்களை வழங்கியுள்ளதாகவும் தெரிகிறது.

இலங்கைக்கு மட்டுமன்றி மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாக பிரித்தானியாவினால் குற்றம் சாட்டப்பட்ட இன்னும் பல நாடுகளுக்கும் இவ்வாறான ஆயுத விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

13.2 பில்லியன் பவுண் பெறுமதியான இராணுவ மற்றும் புலனாய்வு கருவிகளுக்கான 3 ஆயிரம் ஏற்றுமதி அனுமதி பத்திரங்களை அந்த நாடுகளுக்கு பிரித்தானியா வழங்கியுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உள்நாட்டில் அடக்கு முறைக்கு பயன்படுத்தக்கூடிய அல்லது பிராந்தியத்தில் மற்றும் உள்நாட்டு மோதல்களை தூண்டக்கூடிய பொருட்களுக்கு ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்போவதில்லை என கூறியிருந்த பிரித்தானிய அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடு பல தரப்பினரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது.

அதிலும் குறிப்பாக கடுமையான மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாக பிரித்தானியாவால் குற்றம் சாட்டப்பட்ட இலங்கைக்கு ஆயுத விற்பனை நடைபெற்றிருப்பது மனித உரிமை ஆர்வலர்களைக் கடுமை யான அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இது பிரித்தானிய அரசாங்கத்தின் மனித உரிமை தொடர்பான இரட்டைவேடத்தை அம்பலப்படுத்துவதாக மனித உரிமை ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (அ-2)


இவர்களுக்கு மணமகள் தேவை

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1982 இந்து(V)
நட்சத்திரம்: திருவாதிரை 2
உயரம்: 5'11"
கி.பா: 47 செவ் 1
தகைமை/தொழில்: BE Engineer
தொ.இ:B2019

பிறப்பு: 1976 இந்து(V)
நட்சத்திரம்: கார்த்திகை 1
கி.பா : 27 சூ,செ 4
உயரம்: 5' 8"
தகைமை/தொழில்: GAQ சமுத்தி அபிவிருத்தி உத்தியோ கத்தர்
தொ.இ:B2050

பிறப்பு: 1980 இந்து(V)
நட்சத்திரம்: புனர்பூசம் 4
உயரம்: 5' 6" செ 1
கி.பா : 34
தகைமை/தொழில்: A/L கடை உரிமையாளர்
தொ.இ:B2051

பிறப்பு: 1983 இந்து (V)
நட்சத்திரம்: அவிட்டம் 4
உயரம்: 5'5" செ 4
கி.பா : 53
தகைமை/தொழில்: BSc Engineer UK PR
தொ.இ:B2052

பிறப்பு: 1988 இந்து(V)
நட்சத்திரம்: திருவாதிரை 1
உயரம்: 5'3" செவ் 8
கி.பா : 76(1சுற்று)
தகைமை/தொழில்: சித்தமருத்துவம் (4ம் வருடம்)
தொ.இ: G2047

பிறப்பு: 1983 இந்து(V)
நட்சத்திரம்: கார்த்திகை 3
உயரம்: 5' 1"
கி.பா : 16.5 சூ.செ 5
தகைமை/தொழில்: HNDA சைவபோசனம்
தொ.இ:G2049

பிறப்பு: 1990 இந்து(V)
நட்சத்திரம்: கேட்டை 2
கி.பா : 34
உயரம்: 171cm
தகைமை/தொழில்: A/L,
தொ.இ:G2055

பிறப்பு: 1981 இந்து(Mu)
நட்சத்திரம்: உத்தராடம் 1
கி.பா : 24.75
உயரம்: 160 Cm
தகைமை/தொழில்: BFA (நுண்கலைமாணி) ஆசிரியை
தொ.இ: G2057


சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# அணு தொழில்நுட்பத்தின் நன்மைகளும் தீமைகளும்

எமது அன்றாட வேலைகளைச் செய்து முடிக்க நாம் பல்வேறு சக்தி முதல்களைப் பாவிக்கின்றோம். எரிபொருட்சக்தி, நீர் மின்சக்தி, அலைச்சக்தி, காற்றுச் சக்தி, சூரியசக்தி அணுச்சக்தி என்பன அவற்றில் முக்கியமான சக்தி முதல்களாகும். இலங்கையைப் பொறுத்தவரை இன்று பயன்படுத்தப்பட்டு வரும் முக்கிய சக்தி முதலாக எரிபொருட் சக்தியைக் குறிப்பிடலாம்.




இதற்காக பல மில்லியன் ரூபாய்களை எமது நாடு வருடாவருடம் செலவுசெய்து வருகின்றது. எனினும் இவ்வாறு பல மில்லியன்களைச் செலவழித்து தேவையான அளவு எரிபொருளை வாங்கமுடியாத நிலை எதிர்காலத்தில் தோன்றவுள்ளது.

ஏனெனில் உலகிலுள்ள எரிபொருளின் அளவு குறைந்துகொண்டு வருதலேயாகும். எனவே மாற்று சக்தி முதல்களைக் கண்டறிய வேண்டிய தேவை எமது நாட்டுக்கும் உலகுக்கும் ஏற்பட்டுள்ளது. எமது நாட்டைப் பொறுத்தவரையில் சூரியசக்தியும் அணுச்சக்தியும் மிகவும் பொருத்தமானவையாகக் காணப்படுகின்றன.

அணுசக்தியை நாம் ஆக்கத்திற்கும் அழிவுக்கும் பயன்படுத்தலாம். விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாகப் பல நூற்றுக்கணக்கான அணுவாயுதங்களை உலக வல்லரசுகள் உருவாக்கி வைத்துள்ளன. இவை எமது பூமியைப் போல் பல பூமிகளை அழிக்கக்கூடிய வல்லமையுடையன.

விஞ்ஞான வளர்ச்சியின் இன்னொரு பக்கமாக பல நாடுகள் அணு உலைகளை நிறுவி அதிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன. இவ் அணு உலைகளை நிர்மாணிக்க உயர் தொழில்நுட்பம் அவசியமாகின்றது.

இவ் அணு உலைகளில் ஏதாவது விபத்து ஏற்பட்டால் அது பாரிய அழிவை ஏற்படுத்துமென்பதால் அவற்றின் பாதுகாப்புக்கு கூடியளவு கவனஞ்செலுத்த வேண்டியுள்ளது. பூமி அதிர்ச்சி, சுனாமி போன்றவற்றால் அணு உலைகள் பாதிப்புக்குள்ளான சம்பவங்கள் அண்மையில் நடந்துள்ளன.

எனவே இவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்தலென்பது இன்றைய விஞ்ஞானிகளுக்கு பெரும் சவாலாக உருவாகியுள்ளது.

**அணுவாயுதப் பேரழிவு**

மகாபாரத யுத்தம் தொடங்கிய சமயம், தன் உறவினரைத் தானே கொல்லவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டதே என அர்ச்சுனனின் மனதில் ஓர் இனம்புரியாத கலக்கம் தோன்றியது. அக் கலக்கத்தை நீக்க கண்ணன், பகவத்கீதையை அர்ச்சுனனுக்கு உபதேசித்தார் என்பது புராணக் கதை.

அப் பகவத்கீதையில் கண்ணனால் அர்ச்சுனனுக்குச் சொல்லப்பட்ட ஓர் வேத மொழி, "உலகத்தைத் தூள்தூளாக்கும் மரண உருவெடுத்துவிட்டேன் நான்" என்பதாகும். மேற்படி வேத மொழியை மனிதன் தனது விஞ்ஞான அறிவால் உண்மையாக்கிய ஓர் சம்பவம் 16.07.1945 அன்று நிகழ்ந்தது. ஆம் அன்றுதான் அமெரிக்கா தனது முதல் அணுகுண்டுச் சோதனையை நியூமெக்சிக்கோ நகரில் Trinity எனும் இடத்தில் அமைந்திருந்த அணுகுண்டுச் சோதனைத் தளத்தில் நிகழ்த்தியது. இச் சோதனைக்குத் தலைமை தாங்கியவர்


கதிர் வீச்சுத் தாக்கம்

அணுகுண்டின் பிதா என அழைக்கப்படும் Robert Oppenheimer ஆவார்.

இவர்தான் இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட அணுகுண்டை, தன்கீழ் பல நாட்டு விஞ்ஞான வல்லுநர்களை இணைத்து அவர்களின் துணையோடு உருவாக்கியவர்.

இரண்டாம் உலகப் போரின் இறுதியில் 06. 08 .1945 ஆம் ஆண்டு ஜப்பானிய நகரமான ஹிரோசிமாவிலும் 09 . 08 .1945 ஆம் ஆண்டு இன்னுமொரு ஜப்பானிய நகரமான நாகசாகியிலும் அடுத்தடுத்து அணுகுண்டுகள் அமெரிக்காவால் போடப்பட்டு மனிதப் பேரழிவு ஏற்படுத்தப்பட்டது.

Enola Gay B-29 எனும் போர் விமானத்திலிருந்து 06.08.1945 ஆம் ஆண்டு ஏறத்தாழ காலை 8:15 மணிக்கு "Little Boy" என்றழைக்கப்படும் யுரேனியக் குண்டு ஹிரோசிமாவின் மீது 9448.8m (31000 அடி) உயரத்திலிருந்து போடப்பட்டது. இக் குண்டு 3.2004m (10.5 அடி) நீளமும், 0.762m (2.5 அடி) அகலமும், 4399. 92kg (9700 பவுண்டு) நிறையும் உடையதாயிருந்ததுடன் 15000 தொன் TNT வெடி சக்தியையும் கொண்டிருந்தது.

குண்டு போடப்பட்டு 43 செக்கன்களின் பின்னர் ஹிரோசிமாவிலிருந்து ஏறத்தாழ 579.12m (1900 அடி) உயரத்தில் Little Boy" என்றழைக்கப்பட்ட யுரேனியக் குண்டு வெடித்து பேரவலத்தை ஏற்படுத்தியது. குண்டு வெடித்துச் சில நிமிடங்களின் பின் ஒரு பேரொளிச் சிவப்புக் கோளம் தோன்றியது. அதனைத் தொடர்ந்து பாரிய பயங்கர வெடிச் சத்தம் வானைப் பிளந்து ஒரு பிரளயத்தையே உருவாக்கியது. இது நிகழும் போது அவ்விடத்திலிருந்து 17.699km (11 மைல்) தொலைவில் திரும்பிச் சென்றுகொண்டிருந்த அணுகுண்டை வீசிய Enola Gay B-29 போர் விமானத்தை அதிர்ச்சி அலைகள் தாக்கியதால் விமானம் ஆட்டங்கண்டது.

160.9kmக்கு (100 மைல்) அப்பால் விமானம் சென்றபோதும் கோள வடிவ முகில் விமானியின் கண்களுக்குத் தெரிந்தது. இப்பிரமாண்டமான முகில், காளான் வடிவில் (Mushroom Cloud) பொங்கிப் பெருகும் புகைமண்டலமாகத் தோன்றியது. இப் புகைமண்டலத்தின் நடுவே சிவப்பு நிறக் கோளவடிவில் பொருட்கள் பற்றி எரியும் கோரக் காட்சி தோன்றியது.

ஹிரோசிமாவில் வீசப்பட்ட அணுகுண்டால் ஏறத்தாழ 160,000 பேர் உயிரிழந்தனர். இவர்களில் 60,000 பேர்வரையில் குண்டுத் தாக்கத்தால் உருத்தெரியாதவாறு எரிந்துபோயினர். 130,000 ஜப்பானிய அப்பாவி மக்கள் காயமுற்றனர். அவர்களில் 43,500 பேர் படுகாயங்களுக்கு உட்பட்டனர். அணுகுண்டு வீசப்பட்டு ஐந்து வருடங்கள் முடிய மொத்தமாக மரணமடைந்தோர் எண்ணிக்கை 200,000ஐத் தாண்டியது.


முகில் காளான் (Mushroom Cloud)

ஹிரோசிமா மற்றும் நாகசாகியில் வீசப்பட்ட அணுகுண்டுகளால் 25% ஆனோர் வெப்பக் கதிர் வீச்சால் இறந்துபோயினர். 55% ஆனோர் ஏனைய அபாயத்தால் இறந்து போயினர். 18% ஆனோர் கதிரியக்கம் சம்பந்தப்பட்ட நோய்களால் இறந்து போயினர். இக் குண்டு வெடிப்பால் $10.36km^2$ பரப்பில் இருந்த 70,000 வரையிலான கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாயின. இவற்றில் தீயணைப்பு நிலையம், பொலிஸ் நிலையம், ரயில் நிலையம், தபால் நிலையம், பாடசாலைகள், மருத்துவமனைகள், மின் சக்தி நிலையங்கள் என்பனவும் அடங்கும். குண்டு வெடித்த இடத்திலிருந்து சுமார் 3962.4m (13,000 அடி) தூரத்திலிருந்த தொலைத்தொடர்புக் கம்பங்களும் எரிந்து போயின. நகரிலிருந்த 45 மருத்துவமனைகள் முற்றாகவோ அன்றிப் பகுதியாகவோ தகர்த்தெறியப்பட்டன. இம் மருத்துவமனைகளில் கடமையிலிருந்த சுமார் 200 வைத்தியர்களும் 1650 தாதியர்களும் இறந்து போயினர் அல்லது முடமாகினர்.


Fat Man என்றழைக்கப்பட்ட 22000 தொன் TNT வெடிசக்தியைக் கொண்ட

திருமதி F.செல்வலட்சுமி
**B.Sc (Hons), P.G.D.E. (Merit)**
ஆசிரியர்,
யாழ்.வேலணை மத்திய கல்லூரி

புளுட்டோனியக் (Plutonium- 239) குண்டு நாகசாகி நகரின் மீது வீசப்பட்டது. இதில் ஏறக்குறைய 70,000 பேர்வரையில் இறந்து போயினர். நாகசாகி நகரின் 33% பகுதி தரைமட்டமாக்கப்பட்டது. அணுகுண்டு வெடிப்பால் ஏற்பட்ட அதிர்வாலும் அலையாலும் வெப்பக் கதிர்ப்பாலும் உடனடியாக இறந்துபோனவர்கள் தவிர அணுக் கதிரியக்கம் தாக்கி பல்லாயிரக்கணக்கானோர் சில காலம் நரக வேதனைக்குட்பட்டு நாளாந்தம் இறந்துபோயினர்.

அணுக்குண்டு வெடிப்பால் வெப்பநிலை $10,00,000^{o}F$ (One million) வரை உயரும் என்றும் ஒளித் தீக்கோளம் 244m (800 அடி) விட்டம் விரிவடையும் என்றும் உருவாகும் முகில் காளான் 14.5km (9 மைல்) உயரத்திற்கு எழும் என்றும் அணு விஞ்ஞானிகளால் கணக்கிடப்பட்டது. குண்டு வெடிப்பால் ஏற்பட்ட அலை $321.8ms^{-1}$ வேகத்தில் வீசியதால் மனிதர்கள் தூக்கியெறியப்பட்டனர். வானத்தில் பறந்துகொண்டிருந்த பறவைகள் வானத்திலேயே எரிந்து சாம்பலாயின. நாய்கள், பூனைகள் போன்ற பிராணிகள் இருந்த இடம் கூடத் தெரியாதவாறு மறைந்துபோயின. மரங்கள் யாவும் எரிந்து நிலங்கள் பாலைவனம் போல காட்சியளித்தன. தொலைபேசிக் கம்பங்கள் மற்றும் மின்சாரக் கம்பங்கள் யாவும் எரிந்து வளைந்து காணப்பட்டன. "ஒரு பெரிய சுத்தியலால் அடிக்கப்பட்டு அதிர்ச்சி அடைந்து தூக்கி எறியப்பட்டு கொதிக்கும் எண்ணெயில் போடப்பட்டது" போல்

**Little Boy** இன் உட்புறத் தோற்றம்



உணர்ந்ததாக ஓர் இளம் ஜப்பானியப் பெண் தனது நேரடி அனுபவத்தை விபரித்தார். விமானத்தையும் ஒளிக் கோளத்தையும் நேரடியாக உற்றுநோக்கியோரின் கண்கள் குருடாயின. வெப்பம் தாளாமல் பலர் குளங்களில் குதித்தனர். ஆனால் குளமோங்களோ கொதித்துக்கொண்டிருந்தன. (தொடரும்)

## வாரத்திற்கு ஒரு புதிர்! 88

"Rader என்பதன் விரிவு யாது?

புதிர் 88 இற்கான விடைகளை 29.07 .2013 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

**திரு.அ.குகன்**
ஆசிரியர் பிரிவுA
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
ஆசிரிய கல்வியியலாளர்,
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.ஈஸ்வரமோகனிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 87 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

வெல்லப்படவில்லை

**புதிர் 87க்கான கேள்வியும் விடையும்:**
X கதிரின் மீடிறன் வீச்சு யாது?
$10^{-12}$ m தொடக்கம் $10^{-9}$ m

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல. 88

சரியான விடை:-..........................................
முழுப்பெயர்:-..........................................
முகவரி:-..........................................
தொ.பே.இல:..........................................
கையொப்பம்:..........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அதிபர் சுப்பிரமணியம் தியாகலிங்கம்
(BA, Dip.in. Edu., M.Ed)

■ விதுரன்

# யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் சாதனைக்கு வித்திட்ட அதிபர்

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் புகழ்பூத்த அதிபர் சுப்பிரமணியம் தியாகலிங்கம் அவர்கள் எதிர்வரும் 21ஆம் திகதி தனது அறுபதாவது அகவையை நிறைவுசெய்து ஓய்வு பெறுகின்றார்.

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் 26 ஆண்டுகள், ஆசிரியர், பிரதி அதிபர், அதிபர் என்ற பல்பரிமாணங்களில் கடமையாற்றிய அவரின் சேவைக்காலம் பொன் எழுத்துக்களில் பொறிக்கப்படவேண்டியது.

அகில இலங்கையில் தமிழ்மொழி மூலமான ஆரம்பப் பாடசாலைகளில் யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை முதலிடத்தைப் பெற்றிருப்பது யாழ்ப்பாண மண்ணுக்குக் கிடைத்த மிக உன்னதமான பேறு எனலாம்.

இத்தகைய பெருமைக்கு வித்திட்டவர் இப்பாடசாலையில் 26 ஆண்டுகள் கடமையாற்றிய தியாகலிங்கம் அதிபர் என்றால் அதில் எந்த மிகைப்படுத்தலும் இருக்காது.

அமைதியும் ஆழ்ந்த சிந்தனையும் நிதானமும் எவருடைய மனதையும் நோகடிக்காத உயர்ந்த பண்புடைமையும் அதிபர் தியாகலிங்கம் அவர்களின் அணிகலன்களாகும்.

சுமார் 1500 மாணவர்கள் கல்வி பயிலுகின்ற யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் அதிபராக இருப்பதென்பதற்கப்பால், எந்தவிதமான பிரச்சினைகளுமின்றி மாணவர்களை, பெற்றோர்களை, ஆசிரியர்களை ஆற்றுப்படுத்தல் என்பது மிகப்பெரும் சவாலான விடயமாகும்.

சவால் நிறைந்த அந்தப் பணியை அதிபர் தியாகலிங்கம் அவர்கள் மிகத்திறம்படச் செய்து முடித்தார். இந்தச் சாதனைக்கு அவரின் நிர்வாகத்திறன் என்பதைவிட எவரையும் மதிக்கின்ற – பாடசாலையை நேசிக்கின்ற – அதற்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த அவரின் உன்னதமான தியாகமே மூலகாரணம் எனலாம்.

காலைவேளை முதல் மாலைவரை பாடசாலையில் தன்னை அர்ப்பணித்த அவரின் சிந்தனை முழுவதும் பாடசாலையின் அபிவிருத்தி சார்ந்ததாகவே இருந்தது.

கல்விச் செயற்பாடு மட்டுமன்றி இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்கள் முழுமையாக ஈடுபடவேண்டுமென்பதில் மிகவும் உறுதியாக இருந்த அதிபர் அவர்கள் தனது இலக்கில் சாதனை படைத்தார்.

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் பெயரை அகில இலங்கை முழுவதிலும் ஒலிக்க வைத்தபெருமை அதிபர் தியாகலிங்கம் அவர்களையே சாரும். அதற்காக அவர் செய்த தியாகம் உன்னதமானது.

நாட்டின் எப்பாகத்தில் இருந்தும் யாழ்ப்பாணத்திற்குக் கல்விச் சுற்றுலா வருகின்ற மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விச் சமூகத்தினர் என அனைவரும் யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு விஜயம் செய்யாமல் சென்றதேயில்லை.

இவ்வாறு இப் பாடசாலையை தரிசித்தவர்கள் 1500 மாணவர்கள். அதிலும் ஆரம்பக் கல்வி பயிலுகின்ற மாணவர்கள். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய ரீதியில் சாதனை படைத்த பெறுபேறுகள், அவற்றின் காட்சிப்படுத்தல்கள், இணைப் பாடவிதான செயற்பாடுகளின் வெற்றிப்படைப்புகள், பௌதீக வளங்களின் உருவாக்கங்கள், சுற்றுப்புறத்தின் எழில்மிகு தோற்றங்கள் என அனைத்தையும் கண்டு வியப்புற்றுப் பிரமித்து யாழ்ப்பாணம், கல்வியின் இருப்பிடம் என்பதை தங்களுக்குள் மௌனமாக உறுதிப்படுத்திக் கொண்டனர். அதனைத் தங்கள் இடங்களில் உரக்கக்கூறி, தம் நிலையையும் விபரித்தனர்.

இத்தகைய பெருமையை யாழ்ப்பாண மண்ணுக்குப் பெற்றுத்தந்த யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபர் தியாகலிங்கம் அவர்களுக்கு யாழ்ப்பாண மண் என்றும் தனது நன்றியறிதலை தெரிவித்துக்கொள்ளும்.

26 ஆண்டுகள் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்த அதிபர் தியாகலிங்கம் அவர்களின் அன்புடைமையும் பண்புடைமையும் ஒழுக்கமுடைமையும் முயற்சியுடைமையும் யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்துக்கு ஒரு பெரும்பாடமாக அமையும் என்பது நிறுத்திட்டமான உண்மை.

# தாதிய மாணவர்களாக மேலும் 3025 பேர் இணைக்கப்படுவர்

(கொழும்பு)

தாதியர் சேவைக்கு மேலும் 3025 மாணவர்களை இணைத்துக்கொள்ள சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விபரங்கள் சுகாதார அமைச்சின் www.health.gov.lk என்ற இணைய முகவரியில் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கையில் தரமான தாதிய சேவையை வழங்கும் நோக்கில் 6 ஆயிரத்து 25 தாதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 3 ஆயிரம் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுடைய பெயர் விபரங்களும் அண்மையில் இணையத்தில் வெளியிடப்பட்டன. தற்போது நாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் 28 ஆயிரம் தாதியர்கள் கடமை புரிவதாகவும் அதனை 46 ஆயிரமாக மாற்றுவதே தமது நோக்கம் எனவும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலை கட்டமைப்பில் சிறந்த சேவையாற்றும் தாதியர்களுக்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சனல் 4 பணிப்பாளர் இலங்கைக்கு வரலாம்?

இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய மாநாட்டுக்கு வரவிரும்பும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் எவருக்கும் அரசாங்கம் தடை விதிக்காது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை மேற்கோள்காட்டி இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனால் இலங்கைக்கு கடும் சிக்கல்களை ஏற்படுத்திய ஊடகவியலாளர்களான சனல் 4 தொலைக்காட்சியின் No Fire Zone புகழ் கெல்லம மக்ரே மற்றும் முன்னாள் பி.பி.சி. ஊடகவியலாளர் பிரான்சிஸ் ஹரிசன் ஆகியோர் கொழும்பு வருவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

கெல்லம் மக்ரே கொழும்பு வருவதை அனுமதிக்கப் போவதில்லை என இலங்கையின் இராஜதந்திரி ஒருவர் அண்மையில் சவால் விட்டிருந்தார்.

எனினும் இந்த விடயத்தில் வெளிநாட்டமைச்சு தான் இறுதித் தீர்மானத்தை எடுக்கும் என்று அண்மையில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருந்தார்.

இவ்வாறான பின்புலத்தில் அதிகரிக்கும் சர்வதேச அழுத்தங்களால் அனைவருக்கும் கதவைத் திறந்துவிட வேண்டிய நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளதையே பாதுகாப்பு செயலாளரின் அறிவிப்பு வெளிப்படுத்துகிறது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தத்தை ஆரம்பத்தில் எதிர்க்காதது மக்களின் தவறே

## அஸ்கிய பீட மகாநாயக்கர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் மாகாண சபை முறைமையை முற்றாக இல்லாதொழிக்க வேண்டும் என்று மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீட மாநாயக்கர்கள் தெரிவித்தனர். அகில இலங்கை பௌத்த சம்மேளனத்தின் பிரதிநிதிகள் மாநாயக்க தேரர்களை நேற்று முன்தினம் சந்தித்த போதே அவர்கள் இதனைக் கூறியுள்ளனர்.**

இது தொடர்பாக அஸ்கிரிய பீட மாநாயக்கர் உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த தேரர் தெரிவிக்கையில்,

மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்ககப்படகூடாது. அப்படி வழங்கப்பட்டால் நாடு துண்டுதுண்டாக பிளவுபடும். இந்தப் பிரச்சினையில் இந்தியாவுக்கோ வேறு எந்த நாட்டுக்கோ இலங்கை பயப்பட வேண்டிய தேவையில்லை.

1987 ஆம் ஆண்டு இந்திய -இலங்கை இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை இரத்துச்செய்யவேண்டும். மாகாண சபை பிரச்சினைக்கு காரணமானவர் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன.

அன்று மாநாயக்கதேரர்கள் அதனை எதிர்த்தனர். அப்போது அரசியல் பலத்தை பலப்படுத்தி கொள்ள வேண்டிய தேவை காரணமாக இந்தியாவுடன் இணைந்து ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டு மாகாண சபைகளை அவர் ஏற்படுத்தினார்.

அன்று பலர் அதை எதிர்க்கவில்லை. மக்களிடம் தவறு இருக்கிறது. இன்று பிரச்சினை அதிகரித்துள்ளது. வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கொடுத்து விட்டால் மத்திய அரசிடம் என்ன அதிகாரம் இருக்கப்போகிறது. அவரவர் தமது அரசியல் பலத்தை பலப்படுத்தி கொள்ளவே இவற்றை செய்கின்றனர். நான் எந்த கட்சியுடனும் இல்லை. எந்த அரசியலும் செய்ய போவதுமில்லை.

ஆனால் மாகாண சபைகளை ஒழித்து விட்டு ஒற்றையாட்சியான நாட்டை உருவாக்க வேண்டும் என்பதை உறுதியாக தெரிவிக்கிறேன் என்றார்.

அதேவேளை மல்வத்து மாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கள தேரர் கருத்து தெரிவிக்கையில்,

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை, விருப்பு வாக்கு முறை, மாகாண சபை முறை ஆகியவற்றை முற்றாக இரத்துச் செய்ய வேண்டும். இதற்காக சகலரும் ஒன்றிணைய வேண்டும்.

மாகாணசபை முறையில் நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சட்டங்கள் இருக்குமாயின் அவற்றை நீக்க வேண்டும். நாட்டில் அரசியல் ஸ்தாபனங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகம் .

மக்களுக்கு சேவைகள் வழங்கப்படுவதில்லை. அவர்கள் தமது வேலைகளை மட்டும் செய்து கொள்கின்றனர். இதனால் மாகாண சபை முறைமையை ஒழிக்க வேண்டும் என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடு என அவர் மேலும் கூறினார். (அ-2)

# கிராம அலுவலர்களின் திறமைகளை கட்டியெழுப்பும் பயிற்சித் திட்டம்

யாழ். மாவட்டத்தில் கடமைபுரியும் கிராம அலுவலர்களின் திறமைகளைக் கட்டியெழுப்பும் பயி ற்சி திட்டம் யாழ். மாவட்ட செயலகத்தில் கடந்த 15 ஆம் திகதியிலிருந்து நடைபெற்று வரு வதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந் தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறியின் முதற்பிரிவில் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலிருந்தும் இரு கிராம அலுவலர்கள் வீதம் கலந்துகொண்டு பயிற்சி பெற்று வருவதாகவும் குறித்த பயிற்சி நெறி கொழும்பில் உள்ள இலங்கை அபிவிருத்தி நிர்வாக பயிற்சி நிறுவகத்திலிருந்து நேரடி ஒளிபரப்புமூலம் நிறுவகத்தின் திறமை வாய்ந்த வளவாளர்களால் வழங்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது போன்ற பயிற்சிகள் எதிர்வரும் காலங்களில் அனைத்து மட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் பயன்பெறும் வகையில் ஒழுங்கமைக்கப்படும் என்பதுடன், அரச உத்தியோகத்தர்கள் கொழும்பு சென்று நேர டியாக பயிற்சி பெறுவதில் ஏற்படும் சிரமங்கள் இதன் மூலம் நீக்கப்படும் எனவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார். (அ-5)

# நாம் பலவீனப்படவில்லை அரசை எதிர்த்து போட்டி

## ரணில் தெரிவிப்பு

ஐக்கிய தேசிய கட்சி பலவீனமாக உள்ளது என்பதை ஏற்க முடியாது என்று அதன் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரி வித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹெரான் குணவர்தனவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

கடந்த காலங்களில் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணிக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட குற்றவியல் பிரேரணைக்கு எதிராக செயற்படுவதில், ஐக்கிய தேசிய கட்சி முக்கிய பங்கு வகித்திருந்தது.

தற்போது கட்சி சிறந்த நிலையை அடைந்துள்ளதுடன், அரசாங்கத்தை எதிர்த்து போட்டியிடுவதற்கு தயாராகவுமுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அரசியல் தீர்வின் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டால் மாத்திரமே, அதன்பால் மக்களை ஒன்று திரட்ட முடியும் என்றும் அவர் இந்த நிகழ்வின் போது குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சந்தேகநபர்கள் அறுவருக்கும் தனித்தனியான விளக்கமறியல்

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன உட்பட ஏனைய 6 சந்தேக நபர்களை தனித்தனியாக விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் எம்.ஏ. சஹாப்தீன் உத்தரவிட் டார்.

இக் கொலை வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில், கொலை சம்பந்தமான விசாரணைகளை நடத்தி வரும் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் விடுத்த வேண்டுகோளை அடுத்து நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

வழக்கில் மூன்றாவது சந்தேக நபரான வாஸ் குணவர்தன மற்றும் அவரது மனைவியிடம் இருந்து ஏனைய சந்தேக நபர்களுக்கு மிரட்டல் விடுக்கப்படுகிறது என திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்தில் கூறினர்.

இதனால் ஏனைய சந்தேக நபர்களை அவரிடம் இருந்து பிரித்து, தனியான சிறைக் கூட்டில் அடைக்க உத்தரவிடுமாறு அந்த அதிகாரிகள் நீதிமன்றத்தைக் கேட்டுக் கொண் டனர்.

குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளின் கோரிக்கைக்கு இணங்க உத்தரவை பிறப்பித்த நீதவான், வாஸ் குணவர்தன உட்பட சந்தேக நபர்களை எதிர வரும் 19ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-2)

# முஸ்லிம்களுக்கு எதிராக ஈடுபடும் குழுக்களை கண்டுபிடியுங்கள்-அசாத்

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெறும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் அரசாங்கம் விசாரணைகளை மேற்கொண்டு தடுத்து நிறுத்தாவிட்டால் அனைத்து முஸ்லிம்களும் வீதியில் இறங்கி அரசுக்கு எதிராக போராடும் நிலையேற்படும் என கொழும்பு மாநகரசபையின் முன்னாள் பிரதிமேயர் அசாத்சாலி தெரிவித்தார்.

கொழும்பில்நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் அரசாங்கம் 12 பள்ளிவாசல்களை உடைத்துள்ளது. அந்த வகையில் அண்மையில் மகியங்கனை பள்ளிவாசல் மீதும் பன்றி இறைச்சியை வீசி தாக்குதல் நடததப்பட்டுள்ளது.

தெமட்டகொட பகுதியில் உள்ள மாடு வெட்டும் மடுவத்தில் லொறியொன்றுக்கு தீவைக்கப்பட்டுள்ளது.

இவை குறித்து அரசாங்கம் உரிய விசாரணைகளை மேற்கொண்டு இரண்டு வாரங்களில் பதிலளிக்க வேண்டும். இல்லாவிடின் அனைத்து முஸ்லிம்களும் அர சுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலையேற்படும்.

பயங்கரவாதத்தை ஒழித்த அரசாங்கத்திற்கு ஏன் முஸ்லிம்களுக்கு எதிராக ஈடுபடும் குழுக்களை கண்டுபிடித்து ஒழிக்க முடியாது ஏன் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)




சிங்கர் பிளஸ் காட்சியறை தனது புதிய கிளை ஒன்றை அண்மையில் இல.01, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் திறந்து வைத்த போது ....

(படங்கள்:-உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# பொதிகை மலை



## ஆன்மீகம் 64

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

நடு இரவு நேரம்! கடும் இருள் பூமியை இறுக போர்த்திருந்து! அந்த நேரத்தில் முற்றிய தொழுநோயாளியான- தன் கணவனை ஒரு கூடையில் வைத்து தன் தலையில் சுமந்தவாறு அவ்வழியே நடந்து வந்தாள் கற்புக்கரசியாம் நளாயினி! இருளில் தட்டு தடுமாறி தடம் கண்டு பிடிப்பதிலேயே- முழுமனதும் ஈடுபட்டவளாய் கணவனை சுமந்து வந்த அந்த கற்புக்கரசி, அங்கு கழுவில் ஏற்றப்பட்டு தியான நிலையில் இருந்த கழுமரத்தில் தவமிருந்தவரின் கால்களில் கூடைஇடிக்க அவர் தவம் கலைந்து தன் நிலையை அடைய உடல் வலிவலுவாக அவரை வாட்டியதை உணர்ந்த அவர் வலி தாளாமல் அலறினார்! இது கேட்டு திடுக்கிட்ட நளாயினி நிலை உணர்ந்து வருந்தி மன்னிப்பு கேட்டாள்! ஆனால், அசுர வலி தாளாமல் வெடித்து சிதறிய சினத்தால் ஏ பெண்ணே! இன்னும் சிறிதுநேரத்தில் உதயமாகப்போகும் உதயசூரியனை நீ காணும் போது கணவனை இழப்பாய் கைம் பெண்ணாவாய்! இது நிச்சயம் என்று சாபமிட்டார்! இது கேட்டு நளாயினி திடுக்கிட்டாள். அவளுக்கு சினம் பிறந்தது! நான் கணவனை கடவுளாக வணங்கும் கற்புக்கரசி என்பது உண்மையானால்- அந்த சூரியன் உதிக்காமலே போகட்டும்! என்று எதிர்ச் சாபமிட்டாள்! அவள் சாபத்தால் சூரியன் உதிக்கவில்லை- இருள் அகலவில்லை! அந்தக் காரணத்தால் அகிலமே அவதிப்பட்டது! அமரர் கோன் விபரமறிந்து வேதனைப்பட்டான்! மும்மூர்த்திகளும் அவன் வேண்டுகோளுக்கிணங்க நளாயினி முன் தோன்றி அவளை சபித்த முனிவரையும் சமாதானப்படுத்தி - நளாயினி கணவனுக்கு நோய் நீக்கி கழுவேறியிருந்தவரைக் காப்பாற்றி, அவர் மேல் படிந்த களங்கத்தை நீக்கி - அவர்களிட்ட சாபங்களுக்கு நிவர்த்தி அளித்தனர். இதனால் தான் அந்த முனிவரின் பெயரே ஆனி மாண்டவ்யா- என்று உலகில் புகழப்பட்டது. செய்த பாவங்களான தண்டனைகளிலிருந்து மும்மூர்த்திகளாயினும், தேவேந்திரனாயினும், தப்ப முடியாது. பிரமனின் ஐந்தாவது தலையைக் கிள்ளியெறிந்த சிவபெருமானுக்கே பிரம்ஹத்திதோஷம் ஏற்பட்டது. பித்தரானார்.சுடலையில் ருத்ரதாண்டவமாடினார்! பிரம்மனின் பேரனான இராவணேஸ்வரனைக் கொன்றதால் அந்த ராமபிரானுக்கே பிரம்ஹத்தி தோஷம் ஏற்பட்டது.



வாலியை மறைந்திருந்து கொன்றதால் அதற்கு தண்டனையாக இராமன் கிருஷ்ணாவதாரத்தில் வேடன் கை அம்பால் மாண்டார்! இது மாதிரி புராணகாலம் முதல் ஏராளமாகக் கொட்டிக்கிடக்கிறது! அதனால் தான் நம் நாட்டில் தோன்றிய எல்லா மதங்களும் பிரதானமாக கொல்லாமையை பிரதானமாக போதித்தன! காரணம் எல்லாமுமாக இருக்கின்ற அனுப்பிரம்மமான இறைவன் - எல்லா ஜீவன்களின் உயிருமாக நிறைந்து நிற்கின்றான்.சக்தியாக இயங்குகிறான்! ஆதலால் எவ்வுயிரைக் கொன்றாலும் இறைவன் - அவன் சக்தியைக் கொல்வதற்குச் சமம் என்பதால்தான்- ஜீவகாருண்யம் மக்களிடம் முக்கியமாக அறிவுறுத்தப்பட்டது! வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்ற வேதனையை வெளிப்படுத்திய வள்ளலார் கூற்றைச் சற்றே ஆராய்ந்தால் இந்த உண்மை விளங்கும். அதனால் தான் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் என்றார் பக்த பிரகலாதன். அதை நிரூபிக்கவே இறைவன் நரசிம்மமாக தூணைப் பிளந்து கொண்டு வெளிவந்து கொடியவன் இரணியனைப் பிளந்தான்! எல்லாமே பல அணுக்கள் சேர்ந்துதான் உருவானவை என்கிற தற்கால விஞ்ஞான கூற்றை என்றோ பிரகலாதன் கூற்றாக உயிரற்ற தூணிலும் இருப்பான்- துரும்பிலும் இருப்பான் என்பதை நம் முன்னோர்கள் கூறிச்சென்றிருக்கிறார்கள்.

தாவரங்களுக்கு உயிர் உண்டு என்று கண்டு உலகுக்கு அறிவித்து நோபல் பரிசு பெற்ற சர்-ஜகதீஸ் போஸ்! வெகு காலத்துக்கு முன்னரே நம் மதங்களும், மகாத்மாக்களும் அகிம்சையை போதித்தார்கள் என்பதை நோக்கும் போது இப்பூமி ஞானபூமி என்ற பெரியோர் வாக்கு எவ்வளவு உண்மையானது!

வழக்கம் போல மூலிகை சேகரிக்க சித்தர் காலடி தொடர்ந்து இம்முறை எங்கள் பயணம் கொல்லி மலையை நோக்கிப் புறப்பட்டது.

தொடரும்

# இலங்கையில் தடைசெய்யப்பட்ட உலகின் முன்னணி சஞ்சிகை- "ரைம்"

ஆசியாவில் பௌத்த மதம் வியாபித்திருந்த பல நாடுகள் இப்போது முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. குறிப்பாக ஆப்கானிஸ்தான் இங்குள்ள பௌத்த புராதனச் சின்னங்கள் பல முஸ்லிம் தீவிரவாதிகளால் அழிக்கப்பட்ட தகவல்கள் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். மியன்மாரிலும் முஸ்லிம்களின் தொகை அதிகரித்துவருவதாகக் கருதும் பௌத்த தீவிரவாதிகள் அதன் மூலம் தமக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் என அஞ்சுகின்றார்கள். அதேபோல் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து வரும் நிதி உதவிகள் தொடர்பிலான அச்சமும் இவர்களிடம் காணப்படுகின்றது.

மியன்மாரைப் பொறுத்தவரையில் அங்கு பெரிதும் சிறிதுமாக 135 இனக்குழுக்கள் உள்ளன. இவற்றுக்கிடையிலான ஒற்றுமை என்பது எப்போதும் கேள்விக்குறியாகவே இருந்துள்ளது. தற்போதைய நிலையில் முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பௌத்த இனவாதம்தான் அந்த நாட்டை இரத்தக்களரியாக்கிக் கொண்டிருக்கின்றது. முஸ்லிம்களுக்கு எதிரான பிரச்சாரம் பெருமளவுக்கு திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்படுகின்றது. முஸ்லிம்களின் சனத்தொகை அதிகளவில் பெருகிவருவதாகப் பிரச்சாரம் செய்யும் பௌத்ததுறவிகள், முஸ்லிம்கள் இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொள்வதைத் தடை செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்றார்கள். இந்தப் பிரச்சாரங்கள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் இலங்கையில் பொதுபலசேனா முன்னெடுக்கும் பிரச்சாரத்துடன் ஒத்துப்போவதாகவே அமைந்திருக்கின்றது. இதேபோன்ற சில செயற்பாடுகள் தாய்லாந்திலும் காணப்படுகின்றன.

ரைம் சஞ்சிகையின் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள மற்றொரு கருத்தும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய தொன்றாகும். மதத்தீவிரவாதிகளைப் பட்டியலிடும் போது இந்துத் தேசியவாதிகள், முஸ்லீம் தீவிரவாதிகள், அடிப்படைவாத கிறிஸ்தவர்கள்மற்றும் தீவிரவாத யூதர்கள் என்ற வகையிலான ஒரு கணிப்பீடுதான் அண்மைக்காலம் வரையில் காணப்பட்டது. இந்தப் பட்டியலில் பௌத்ததீவிரவாதம் இதுவரைகாலமும் உள்ளடக்கப்படவில்லை. புத்தரினால் தோற்றுவிக்கப்பட்ட பௌத்தமதம் அன்பு மற்றும் கருணை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவே அண்மைக்காலம் வரையில் நோக்கப்பட்டது. ஆனால், ஏனைய மத தீவிரவாதிகளை யொத்ததாகவே அவர்களுடைய செயற்பாடுகளும் அமைந்திருப்பதை மியன்மாரில் நடைபெற்ற நிகழ்வுகளும் இலங்கையில் இடம்பெறும் சம்பவங்களும் உறுதிப்படுத்துகின்றன.




2003 ஆம் ஆண்டில் முஸ்லிம்களுக்கு எதிராக படுகொலையைத் தூண்டிவிட்டவர் என்ற குற்றத்துக்காக கைதான விராது, ஏழுவருடங்கள் சிறைவாசம் அனுபவித்தவர். சிறையிலிருந்து விடுதலையான பின்னரும் தன்னுடைய கொள்கையை அவர் விட்டு விடவில்லை. தொடர்ந்து முஸ்லிம்களுக்கு எதிராக பௌத்ததேசியவாதத்தைப் போசிப்பவராகவே அவர் உள்ளார். சிறை வாசத்தின் பின்னரே 969 என்ற அமைப்பை விராது, உருவாக்கினார். 969 என்பது புத்தரின் பல்வேறு குணாம்சங்களைக் குறிப்பிடுவதாக அமைந்திருக்கின்றது. தமது இனத்தையும் மதத்தையும் பாதுகாப்பது என்பது ஜனநாயகத்தை விட முக்கியமானது என இவ்வமைப்பு பௌத்தமக்களுக்குப் போதிக்கின்றது.

இந்தப் பின்னணியிலேயே முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் தீவிரமடைந்தன. பல முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர். சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இந்த வெறியாட்டத்தை தடுத்து நிறுத்துவதற்கு அரசதரப்பு எதனையும் செய்யவில்லை, என்ற குற்றச்சாட்டு மனித உரிமை கள் அமைப்புகளால் முன்வைக்கப்பட்டது. அதிகமான இடங்களில் இந்த வன்முறை வெறியாட்டங்கள் பிக்குகளின் தலைமையிலேயே நடத்தப்பட்டது.


இது தொடர்பான தகவல்களைத் தாங்கிய ரைம் சஞ்சிகை இன நல்லுறவைப் பாதிப்பதாக அமைந்திருப்பதாக தடை செய்யப்படுகின்றது. ஆனால், இன நல்லுறவைப் பாதிக்கும் வகையில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்கும் அமைப்புகளுக்கு அரச ஆதரவு தாராளமாகக் கிடைக்கின்றது. இது தான் ஆசியாவின் அதிசயம்.

இணையம் | முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பணக்கார மாப்பிள்ளை



மனோகரன் பெயருக்கேற்ப மிக மனோகரமான, வசீகரமான தோற்றமுடையவன். நன்றாகப் படித்துமிருந்தான். திருமண வயதை அவன் அடைந்த போது, அவனுடைய பெற்றோர் அதே கிராமத்திலிருந்த மாதவி என்ற பெண்ணுடன் விவாகம் செய்து வைக்க எண்ணினர். இருவருடைய திருமணத்திற்கு நிச்சய தார்த்தம் நடக்கவிருக்கையில், ஒரு நாள் மனோகரன் சோதிடர் ஒருவரிடம் செல்ல, அவர் அவனைப் பார்த்து "நீ பணக்கார வீட்டுமாப்பிள்ளை ஆவாய்!" என்று சொல்லி அவன் மனத்தில் பேராசையை மூட்டிவிட்டார்.

சிறு வயது முதல் பணக்காரனாக ஆவது பற்றி கனவு கண்டு கொண்டிருந்த மனோகரனின் மனத்தில், சோதிடரின் சொற்கள் ஒரு புயலைக்கிளப்பின. மனோகரன் தன் பெற்றோரிடம் மாதவியை மணம் செய்ய விருப்பமில்லை என்று கூறிவிட்டான். இது நடந்து சில நாட்களில், அந்த ஊர் ஜமீன்தார் மனோகரன் வீடு தேடி வந்தார்.

அவருடைய மகள் கல்பனா மனோகரனை விரும்பியதால், அது

**அம்புலிமாமா கதைகள்**


பற்றிப் பேச மனோகரனின் பெற்றோரை அணுகியவர், தன் மகளை மணம் முடித்தால் ஐந்து ஏக்கர் நிலம் வரதட்சிணையாகத் தருவதாகக் கூறினார். அதைக்கேட்ட மனோகரனின் மனம் உற்சாகத்தில் துள்ளிக் குதித்தது. சோதிடரின் வாக்கு இத்தனை சீக்கிரம் பலிக்கும் என்று அவன் நினைக்கவில்லை. உடனே, அவன் அதற்குச் சம்மதித்தான்.

மாதவிக்கு அது தெரிந்ததும் வருத்தம் உண்டாகியது. ஒருநாள் கோயிலில் அவனை சந்தித்ததும், அவள் "ஐந்து ஏக்கர் நிலம் வரதட்சிணையாக கிடைக்கிறது என்பதால், என்னை நீ ஒதுக்குவது என்ன நியாயம்?" என்று கேட்டாள்.

"உனக்குப் பூனைக்கண்! உன்னைவிட கல்பனா நல்ல அழகி! அதற்காகத்தான் அவளைத் திருமணம் செய்ய சம்மதித்தேன்!" என்றான் மனோகரன்.

அதைக்கேட்டு மாதவி, "அடுத்த பிறவியில் நீ பூனையாகப் பிறப்பாய்!" என்று சாபமிட்டுச் சென்றாள். இது நடந்த மறுநாள், அவன் வீட்டிற்கு மாதவன் என்ற தூரத்து உறவினர் குடும்பத்துடன் வருகை தந்தார். அவர் பல ஆண்டுகளாக மன்னரிடம் பணிபுரிந்து வந்த பணக்காரர்! மனோகரனின் அழகு அவரைக் கவர்ந்ததால், அவனைத் தன் மாப்பிள்ளையாக்கத் திட்டமிட்டார்.

அவனுக்கு ஏற்கனவே ஜமீன்தாரின் மகளுடன் திருமண ஒப்பந்தம் நடைபெறவிருக்கிறது என்று அறிந்தும், மாதவன்



"திருமண நிச்சயதார்த்தம் இன்னும் நடக்கவே இல்லையே! பேசாமல் ஜமீன்தார் மகளை மறந்து விடுங்கள். என் பெண் வந்தனாவை மணம் புரிந்தால், அவனுக்கு அரசாங்க வேலை வாங்கித்தருவேன்" என்றார்.

மனோகரனின் பெற்றோர் தர்ம சங்கடத்திற்கு உள்ளனர். ஆனால் மனோகரன் மட்டும் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கினான். கிராமத்தில் விவசாயம் செய்வதைவிட அரசாங்க வேலையில் சேர்ந்து பெரிய பணக்காரனாவது பெரிய அதிர்ஷ்டம் என்று நினைத்தான். ஆகையால் அவன் உடனே வந்தனாவை மணக்க சம்மதம் தெரிவித்துவிட்டான். விடயமறிந்து கல்பனா மனோகரனைத் தேடி வந்தாள். அப்போது, மாதவனின் மகள் வந்தனாவும் உடனிருந்தாள்.

மனோகரனிடம் பேசாமல் நேராக வந்தனாவை நோக்கி அவள், "ஏற்கனவே, அவர் மாதவியை மணப்பதாக இருந்தார். ஆனால் என் அழகில் மயங்கி என்னை மணக்க சம்மதித்திருக்கிறார். நீ இப்போது அவர் மனத்தை ஏன் கலைக்கிறாய்?அவர் உன்னை மணக்க விரும்புவது உன் மூலம் கிடைக்கப் போகும் அரசாங்க வேலைக்காகத் தான்!" என்றாள் கல்பனா.

மனோகரனை சுட்டெரிக்கும் கண்களால் முறைத்துப் பார்த்த வந்தனா, "இவள் சொல்வது உண்மையா?" என்று கேட்டாள். "சீச்சீ! யார் சொன்னது? கல்பனா அழகாக இருப்பதால் அவளைத் திருமணம் செய்து கொள்ள முதலில் சம்மதித்தேன். ஆனால் அவள் மிகவும் கர்வம் பிடித்தவள். அடிபட்ட நாயைப் போல குரைப்பவள். ஆனால் [illegible] தான் உன்னைத் திருமணம் செய்து கொள்ளத் தீர்மானித்தேன்" என்றான் மனோகரன்.

அதைக் கேட்ட கல்பனா, "என்ன? நான் நாயைப் போல் குரைக்கிறேனா? நீங்கள் அடுத்த பிறவியில் நாயாய் பிறப்பீர்கள்!" என்று வசைபாடி விட்டு அகன்றாள்.

நடந்ததைக் கேட்டு மனோகரனின் பெற்றோர் கவலையுற்றனர். அவர் தாய், "வீணாகப் பெண்களின் சாபத்திற்கு ஏன் ஆளாகிறாய்?" என்று வருத்தத்துடன் கேட்க, இவர்களின் சாபம் என்னை என்ன செய்து விடும்? என்று திமிராக பதிலளித்தான். பிறகு மனோகரனின் பெற்றோர் வந்தனாவின் தகப்பன் மாதவனிடம், முதலில் மனோகரனுக்கு வேலை வாங்கித் தரும்படி கூறினார்.

அதற்கு சம்மதித்த மாதவன் மனோகரனைத் தன்னுடன் அழைத்துச் சென்றார். அரசாங்க வேலையில் மனோகரனைச் சேர்ப்பதற்கு அதிகாரிகளில் ஒருவரான தேவநாதனை அணுகி சிபாரிசு செய்யுமாறு வேண்டினார். மனோகரனின் அழகிய தோற்றத்தையும், மதிநுட்பத்தையும் கண்ட தேவநாதன் அவனைத் தன் மாப்பிள்ளையாக ஆக்கிக் கொள்ளத் திட்டம் போட்டார். அவனைத் தனியாக அழைத்து தேவநாதன், அவ்னிடம் தன் மகள் ஜலஜாவை மணம் செய்து கொள்ள வேண்டினார். அவன் அதற்கு ஒப்புக்கொண்டால் அவனுக்கு அரசாங்கத்தில் பெரிய வேலை வாங்கித் தருவதாக ஆசைகாட்டினார். உடனே, பேராசை பிடித்த மனோகரன் ஒப்புக் கொண்டான்.

விடயம் தெரிந்ததும் வந்தனா




அடிபட்ட பெண்புலியைப் போல் சீறிக்கொண்டே தன்னுடன் மனோகரனையும் அழைத்துக்கொண்டு ஜலஜாவிடம் சென்றாள். வந்தனா அவளிடம், "ஜலஜா! எத்தனை சிரமப்பட்டு இவரைத் திருமணம் செய்வதாய் இருந்தேன் தெரியுமா? நீ ஏன் அவரை ஆசைகாட்டி மனதைக் கலைக்கிறாய்? இவர் உன் மேலுள்ள பிரியத்தால் சம்மதிக்கவில்லை. உன்னால் அரசாங்க வேலை கிடைக்கும் என்பதால் இவர் உன்னை மணக்க சம்மதித்துள்ளார்" என்றாள்.

உடனே,மனோகரனைக் கோபத்துடன் பார்த்த ஜலஜா "இவள் சொல்வது உண்மையா!" என்று கேட்க, "இல்லையில்லை! எனக்கு சங்கீதம் என்றால் மிகவும் பிடிக்கும். நீ நன்றாகப் பாடுகிறாய்! உன் இசையில் மயங்கிப்போய் நான் உன்னைத் திருமணம் செய்ய சம்மதித்தேன். வந்தனாவின் குரலோ கழுதைக் குரல்! அதை என்னால் சகிக்க முடியவில்லை!" என்றான்.

"என்ன? என் குரல் கழுதைக் குரலா?" என்று நாகத்தைப் போல் சீறிய வந்தனா, "நீ அடுத்த பிறவியில் கழுதையாகத்தான் பிறப்பாய்!" என்று கூறிவிட்டு அங்கிருந்து அகன்றாள். ஒரு நல்ல நாளில் மனோகரனுக்கும், செல்வரான அரண்மனை அதிகாரி தேவநாதனின் மகள் ஜலஜாவிற்கும் திருமணம் நடைபெற்றது. திருமணம் நடந்த மறுநாள், மனோகரன் தன் மாமனாரை ஏதோ கேட்க அவர் அறைக்குள் நுழைந்தவன், அவர் மற்றொரு அதிகாரியுடன் பேசிக் கொண்டிருந்ததால் வெளியிலேயே நின்று அவர்களுடைய உரையாடலைக் கேட்டான்.

"தேவநாதா! உனக்கு நல்ல பிள்ளையாகக் கிடைக்கவில்லையா? இந்த ஏழைப்பையன்தானா உனக்குக் கிடைத்தான்?" என்று அந்த அதிகாரி அவரிடம் கேட்க, அதற்கு தேவநாதன், "என்னுடைய பெண் அகம்பாவம் பிடித்தவள்! கோபக்காரி! ஏழை வீட்டுப் பையனை மாப்பிள்ளை ஆக்கினால், அவன் பூனையைப் போல் என் பெண்ணிடம் அடங்கி நடப்பான். என்னிடம் உள்ள சொத்துக்களை நாயைப் போல் காவல்காப்பான். என் பெண் ஏவும் வேலைகளை கழுதையைப் போல் பேசாமல் கீழ்ப்படிந்து செய்வான்!" என்றார்.

அதைக் கேட்ட மனோகரனுக்கு ஆயிரம் தேள்கள் கொட்டியது போலிருந்தது. தனது நிலமை இப்படியாகும் என்று அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. சோதிடர் சொன்னது மட்டுமன்றி, அந்தமூன்று பெண்கள் இட்ட



சாபங்களும் இந்த ஜென்மத்திலேயே பலித்துவிட்டதை எண்ணி நிலை குலைந்து போனான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

# 17.07.2013-16.08.2013




மூலம், பூராடம், உத்ராடம் 1 ஆம் பாதம்

**தொட்ட காரியங்கள் அனைத்திலும் வெற்றி காண நினைக்கும் தனுசு இராசி நேயர்களே!**

**சப்தம குருவால் சஞ்சலங்கள் தீரும்! சந்தோஷங்கள் சேரும்!**

உங்கள் கனவுகள் நனவாகும் காலம் வரப்போகின்றது. ஆடி மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசி நாதன் குரு உங்கள் ராசியையே பார்ப்பதால் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

குரு மங்கள யோகம் மற்றும் குருச்சந்திர யோகம் அமையத் தொடங்கும் மாதம் என்ப தால் குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடி வரும். கடுமையாக முயற் சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். கல்யாண வாய்ப்புகள் கைகூடும். புத்திரப்பேறு முதல் புதிய கடைதிறப்பு விழாக்கள் வரை, அத் தனை காரியங்களிலும் வெற்றி கிடைப் பதற்கான அறிகுறிகள் தோன்றும்.

## எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும் எதிர்பார்த்த வாய்ப்புகள் இல்லம் தேடிவரும்

சனி மூன்றாம் பார்வையாக உங்கள் இராசியைப் பார்ப்பதால் உடல் ஆரோக் கியத் தில் மட்டும் ஒருசில தொல்லை கள் வந்து சேர லாம். உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக்கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும்.

பஞ்சம ஸ்தானத்தில் கேது சஞ்சரிக் கிறார். எனவே, பிள்ளைகளின் கல்வி நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இராகு, கேதுக்களின் ஆதிக் கம் புத்திர ஸ்தானத்தில் இருந்தால் பிள்ளைகளின் குணத்தில் திடீர் திடீ ரென மாற்றங்கள் ஏற்படலாம். பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். கைக் குக் கிடைத்த சொத்தை விற்று புதி தாக சொத்துக்கள் வாங்குவதில் ஆர் வம் காட்டுவீர்கள்.

வீடு, மனை என்று கட்டத் தொடங் கும் பொழுது குடும்ப உறுப்பினர் களில் யாருடைய ஜாதகத்தில் செவ் வாய் புலம்பெற்றிருக்கிறதோ அவர் கள் பெயரில், கட்டத் தொடங்குவதே நல்லது. பொதுவாக இம்மாதத்தின் மையப்பகுதியில் சுக்ரன் நீச்சமாகும் நேரத் தில் மிகுந்த யோகங்கள் வந்து சேரும். எதிர் பாராத தனலாபமும் கிடைக்கும்.

**சிம்ம சுக்ரனும் கன்னி சுக்ரனும்**

ஜூலை 18 ஆம் திகதி சிம்ம இராசி யில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். இதன்விளைவாக ஒருசிலருக்கு உத் தியோ மாற்றங்கள் உறுதியாகலாம். ஊதிய உயர்வோடு வரும் மாற்றத்தை ஏற்றுக் கொள்ளலாம். கடன் சுமை குறையும். வங்கிகளில் எதிர்பார்த்த கடனுதவி கிடைத்து வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். மறைமுக எதிர்ப்புகள் அகலும்.

ஆகஸ்ட் 12 ஆம் திகதி கன்னி இராசியில் சுக்ரன் நீச்சம் பெறுகிறார். இதன்விளைவாக மிகுந்த நற்பலன்கள் வந்து சேரப்போகிறது. பொதுவாக பாக்கிகள் வசூலாகிப் பரவசப்படுத் தும். கலைத்துறை சம்பந்தப்பட்டவை களால் காரியவெற்றி ஏற்படும். தொலை தூரத்திலிருந்து வரும் தகவல் தொழி லுக்கு உறுதுணையாக இருக்கும். ஒப்பந்தங்கள் தொழில் ரீதியாக அதிகரிக்கும் நேரமிது.

**கடக புதனும் சிம்ம புதனும்**

ஜூலை 30 ஆம் திகதி கடக இராசி யில் புதன் சஞ்சரிக்கிறார். 7,10 க்கு அதிபதி அஷ்ட மத்தில் சஞ்சரிக்கும் பொழுது எதிர்பாராத வாய்ப்புகள் இல்லம் தேடி வரலாம் அரசியல் மற்றும் பொதுநலத்தில் உள்ளவர்களுக்கு பதவிகள் கிடைத்து மகிழ்ச்சியடை வீர்கள். பக்கபலமாக இருக்கும் நண்பர்கள் சிக்கல்களைத் தீர்க்க முன் வருவர்.

ஆகஸ்ட் 16 ஆம் திகதி சிம்மத்தில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாகத் தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல் அகலும். பாகப் பிரிவினைகள் சுமூகமாக முடியும். பணம், ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குருதட்சிணா மூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது.

இம்மாதம் நல்ல காரியங்கள் இல் லத்தில் நடைபெறும் மாதமாகும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். கணவன்-மனைவிக்குள் கனிவு கூடும். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்கலாமா? என்று சிந்திப்பீர்கள். குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்கும் எண்ணம் மேலோங்கும். கொள்கைப்பிடிப்போடு செயற்படு வீர்கள். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகள் நனவாக, எதிர்பார்த்த இடத்திலிருந்து தொகை வந்துசேரும். மாதத்தின் மையப்பகுதியில் நட்பி னால், நல்ல காரியமொன்று நடை பெறும். சுயஜாதக ரீதியாக தெசா புத்திக்கேற்ப தெய்வங்களை வழி படுவதோடு பிரதோஷ வழிபாட்டை யும் மேற்கொள்ளுங்கள்; பிரச்சினை கள் தீரும்.

## சி வல்புரி சிங்காரம்




உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்

**எதிர்காலத்தைப் பற்றி எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருக்கும் மகர இராசி நேயர்களே!**

**இராசிநாதன் பலம்பெற்றார்! உடல்நலம் சீராகும்!**

ஆடி மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, சூரியனும் சுக்ரனும் உங்கள் இராசி யைப் பார்க்கிறார்கள். அஷ்டமாதிபதி இராசியைப் பார்க்கும் பொழுது வரவைக் காட்டிலும் செலவு கூடும். வாழ்க்கைத் தேவைகள் கடைசி நேரத்தில்தான் பூர்த்தியாகும். இரவு பகலாகப் பாடுபட்டதற்கு நன்றிகூடக் கிடைக்காமற்போகும். இருந்தாலும் நீங்கள் செய்த ஒரு பாக்கியம், குரு வின் பரிபூரண பார்வை இரண்டாம் இடத்திலும் பன்னிரெண்டாம் இடத் திலும் பதிவதுதான். எனவே, செல விற்கேற்ப வரவு வந்துகொண்டே யிருக்கும்.

## நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்யமுடியும் உடல் ஆரோக்கியம் சீராகி உற்சாகம் பெறுவீர்கள்

குறிப்பாக ராசிநாதன் வக்ர நிவர்த்தி யானது, யோகம் தரும். உடல் ஆரோக்கியம் சீராகி உற்சாகப் படுத்தும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்ய இயலும். எனவே, கடனுமயில் கண்ணும் கருத்து மாக இருப்பீர்கள். கரைந்த சேமிப்பு களை ஈடுகட்ட வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். சுக ஸ்தானத் தில் கேது சஞ்சரிப்பதால் பயணங்கள் அதிகரிக்கும். ஆயினும் அதற்கு இடை யூறாக நீங்கள் வைத்திருக்கும் வாக னம் பழுதுக்குள்ளாகிக்கொண்டே இருக்கும். விலை உயர்ந்த பொருட் களைக் கையாள்வதில் கவனம் செலுத் துங்கள்.

வீடு வாங்க வேண்டும். இடம்வாங்க வேண் டும் என்று நீங்கள் போட்ட திட்டம் முழுமையாக நிறைவேறப் போகிறது. கனவுகள் நனவாக கடவுள் வழிபாட்டை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். மனைவாங்க வேண்டும் என்று நினைப்பவர்கள் அதற்குரிய கிரகமாக விளங்கும் செவ்வாய்க்குரிய ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வரவேண்டும். தனவரவு அதிகமாக இருக்க வேண்டுமென்று விரும்புபவர் கள், உங்கள் இராசியின் அடிப்படை யில் தனாதிபதியாக விளங்கும் சனிக் குரிய கோவில்களுக்கு யோகபலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வருவது நல்லது.

**சிம்ம சுக்ரனும் கன்னி சுக்ரனும்**

ஜூலை 18 ஆம் திகதி, சிம்ம இராசி யில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். இதன்விளைவாக பிள்ளைகள் வழி யில் ஒரு பெரும் விரயம் ஏற்படலாம். தொழில் மாற்றம் குறித்த சிந் தனை கள் மேலோங்கும். அடகுவைத்த நகை களை மீட்க வேண்டும் என்று ஆசைப் படுவீர்கள். நூதனப்பொருள் சேர்க்கை உண்டு. தொழில் பங்குதாரர்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.

ஆகஸ்ட் 12 ஆம் திகதி கன்னி இராசியில் சுக்ரன் நீச்சம் பெறப்போகி றார்.

இது அவ்வளவு நல்லதல்ல. என்ன இருந் தாலும் பத்துக்கு அதிபதி நீச்சம் பெறும்பொழுது பயம் மனதைக் கவ்வும். பக்கபலமாக இருந்த வர்கள் விலகலாம். எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல் லது. இடமாற்றம், ஊர் மாற்றம், தொழில் மாற்றம், உத்தியோக மாற் றம் என்று ஏதாவது ஒரு மாற்றம் வந்து சேரலாம்.

**கடக புதனும் சிம்ம புதனும்**

கடக இராசியில் ஜூலை 30 ஆம் திகதி புதன் சஞ்சரிக்கப்போகிறார். இக்காலத்தில் மந்தநிலை மாறி மகத்து வங்கள் பிறக்கும். கடன்சுமையில் பாதிக்குமேல் குறைய வாய்ப்பு உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஒத்துழைப்போடு ஒப்பற்ற நற்பலன் களைக் காண்பீர்கள்.


ஆகஸ்ட் 30 ஆம் திகதி சிம்மத்தில் புதன் சஞ்சரிக்கும் நேரம் விபரீத ராஜ யோகம் செயற்படப்போகிறது. தொழில் மேன்மையடையும்; தொல்லைகள் தீரும்; எழிலாகப் பேச்சுவார்த்தை நடத்தி எல்லையில்லாத நற்பலன்களைக் காண்பீர்கள். வழிகாட்டியாக விளங்கு பவர்கள் உங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முன்வருவர்.

இம்மாதம் தாவர வழிபாடு தக்க விதத்தில் பலன் தரும்.

குடும்பப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். கொள்கைப்பிடிப் போடு செயற்பட இயலாது. கண வன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப் பட விட்டுக்கொடுத்துச் செல்வதே நல்லது. பணவரவு திருப்திகரமாக இருந்தாலும் மனநிம்மதி குறைவாகவே இருக்கும். ஆகஸ்ட் 12 ஆம் திகதிக்கு மேல் தொழில், உத்தியோகத்தில் கூடு தல் கவனம் தேவை. பக்கத்தில் இருப் பவர்களின் பழிச்சொல்லுக்கு ஆளா காமல் இருப்பது உங்கள் புத்திசாலித் தனமாகும். சிவாலய வழிபாடு சிறப் பினைத் தரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வடக்கின் தேர்தல் நியாயமானதாக அமையுமா...?

மூன்று மாகாணசபைகளுக்கான தேர்தல் அறிவிப்பு கடந்தவாரம் வெளியிடப்பட்டுள்ளது. வடக்கு, மத்திய, வடமேல் மாகாணசபைகளுக்கான தேர்தலில் போட்டியிட விரும்பும் கட்சிகளிடம் இருந்து இம்மாத இறுதிவாரத்தில் வேட்புமனுக்கள் பெறப்படவுள்ளன. தேர்தல் நடக்கவுள்ள மாகாணசபைகளில், 58 உறுப்பினர்களைக் கொண்ட மத்திய மாகாணசபையும், 50 உறுப்பினர்கள் கொண்ட, வடமேல் மாகாண சபையும் உள்ள போதிலும், 36 உறுப்பினர்களைக் கொண்ட- அளவில் சிறியதான வடக்கு மாகாண சபைத் தேர்தல் தான் அனைவரினதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

இன்று, சிறிய ஒரு பிரதேசத்தின் தேர்தல் உலகின் பல நாடுகளினது கவனத்தை ஈர்த்துள்ளது என்றால், அது வடக்கு மாகாணசபைத் தேர்தலாகத் தான் இருக்கும். போர் முடிவுக்கு வந்தபின்னர், நடத்தப்படவுள்ள முதலாவது மாகாணசபைத் தேர்தலாக இருப்பதால் மட்டுமன்றி, வடக்கிற்கான ஒரு நிர்வாகத்தை மூன்று தசாப்த காலப் போருக்குப் பின்னர், தெரிவு செய்வதற்கான முதலாவது தேர்தலாக மட்டுமன்றி, விடுதலைப் புலிகளுக்குப் பின்னர் வடக்கிலுள்ள தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என்ன என்பதை வெளிப்படுத்தப் போகும் தேர்தலாக இது பார்க்கப்படுகிறது. இந்தத் தேர்தலின் முடிவு என்னவாக இருக்கும் என்பது எவராலும் கணிக்க முடியாத ஒன்றாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஏனென்றால், வடக்கிலுள்ள மக்களின் மனநிலை எப்படிப்பட்டது என்பது தெளிவாகத் தெரிந்ததுதான்.

கடந்த மாதம் 13ஆம் திகதி நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தும் அறிவிப்பை வெளியிட்டிருந்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அப்போது அவர், "வடக்கு மாகாணசபைக்கு நாம் தேர்தலை நடத்த வேண்டியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் வெற்றி பெறப்போவது உறுதி. அதுதான் அரசியல் யதார்த்தம். நாம் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, என்ன நடந்தாலும் அதை எதிர்கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில் தான் எமது அரசியல் திட்டங்களை வகுக்க வேண்டும்" என்று கூறியிருந்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவ்வாறு கூறியது அமைச்சர்கள் பலருக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கலாம்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே வடக்கு மாகாணசபையை நிச்சயம் கைப்பற்றும் என்ற தனது வெளிப்படையான கருத்தை வெளியிட்டதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அமைச்சர் தினேஸ் குணவர்த்தன பாராட்டியிருந்தார்.

அதுமட்டுமன்றி, அவர் இன்னொரு விடயத்தையும் சுட்டிக் காட்டியிருந்தார்.

1982 ஆம் ஆண்டு மாவட்டசபைத் தேர்தலின்போது, ஐ.தே.க. வாக்கு கொள்ளையில் ஈடுபட்டது போன்று, வடக்கு மாகாணசபைத் தேர்தலில் நடந்துவிடக்கூடாது என்றும், அதனை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதிப்படுத்த வேண்டும் என்றும் தினேஸ் குணவர்த்தன கேட்டிருந்தார்.

இந்தக் கூட்டத்தில், கருத்து வெளியிட்ட அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும், ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகத்திற்கு வடக்கு மாகாணசபைத் தேர்தல் குறித்து அரசாங்கம் கொடுத்துள்ள வாக்குறுதியை சுட்டிக்காட்டி இந்தத் தேர்தல் நீதியாக நடத்தப்படவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

தேர்தலில் நாம் வென்றாலும் சரி, தோற்றாலும்சரி, வடக்கில் நீதியான நியமான, சுதந்திரமான தேர்தல் நடத்தப்பட்டுள்ளது என்று உலகத்துக்கு நாம் காட்டவேண்டியுள்ளது என்பதை மஹிந்த சமரசிங்க சுட்டிக்காட்டியிருந்தார்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், வடக்கு மாகாணசபைத் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்று விரும்பினாலும், அரசியல் கள யதார்த்தத்தை அது உணர்ந்து கொண்டிருக்கிறது என்பதை, இந்த அமைச்சரவைக் கூட்ட விவாதமே எடுத்துக் காட்டுகிறது.

போர் முடிந்து நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர், நடத்தப்படப் போகும் இந்தத் தேர்தல் முறையானதாக- நீதியானதாக- நேர்மையானதாக - சுதந்திரமானதாக இருக்க வேண்டும் என்பதை அரசாங்கம் விரும்புகிறதோ இல்லையோ- சர்வதேச சமூகம் அதனையே எதிர்பார்க்கிறது.

ஏனென்றால், இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

ஒன்று, இலங்கையின் தேர்தலில் முறைகேடுகள் வழக்கம் என்ற வழக்கமான கருத்து.

இரண்டாவது, முறைகேடான தேர்தல் நடத்தப்பட்டால், அது வடக்கு மக்களின் ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கை மேலும் சிதைவடைந்து போகும் என்ற அச்சம்.

ஆயுதப் போராட்டத்தின் தோல்வியின் பின்னர், நடத்தப்படும் தேர்தல், தமிழ்மக்களுக்கு நம்பிக்கையளிக்கக்கூடிய வகையில் இடம் பெறாது போனால், ஆயுதப் போராட்டத்தின் நியாயத்தன்மையை நினைவுக்கு கொண்டுவந்துவிடும். அது போருக்குப் பிந்திய நல்லிணக்கத்துக்கு ஆபத்தானது என்பதே, அமெரிக்கா போன்ற நாடுகளினது மட்டுமன்றி, இந்தியா போன்ற நாடுகளினதும் கருத்தாக உள்ளது.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டதுமே, அதை வரவேற்ற புதுடெல்லி, நீதியான சுதந்திரமான தேர்தலை உறுதிப்படுத்த வேண்டும் என்று தான் கேட்டுக் கொண்டது. அதுபோலவே, கடந்த வாரம் கொழும்பு வந்திருந்த இந்தியாவின் தேசிய பாதுகாப்பு அலோசகர் சிவ்சங்கர் மேனனும் கூட, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இதையேதான் வலியுறுத்தியுள்ளார்.

ஆக, வடக்கு மாகாண சபைத் தேர்தலை நியாயமாக நடத்தியாக வேண்டிய கட்டாயம் அரசாங்கத்துக்கு உள்ளது.

ஆனால், தமிழ் அரசியல் கட்சிகள் மட்டுமன்றி, ஐ.தே.க வும் கூட இந்தத் தேர்தல் நீதியாகவோ, நியாயமாகவோ நடத்தப்படும் என்று நம்பவில்லை.

காரணம், கடந்தகாலத்தேர்தல் வரலாறு மட்டும், அரசியல் கட்சிகள் மத்தியில் இந்த ஐயத்தை ஏற்படுத்தக் காரணமில்லை. தேர்தல் தொடர்பான அரச தரப்பின் ஈடுபாடும், இராணுவத் தலையீடுகளும் தான் இந்த ஐயத்துக்கு முக்கிய காரணம். வடக்கின் அரசியல் களத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக, இராணுவம் இருக்க விரும்புகிறது. இது போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீளவும் ஜனநாயக சூழலை ஏற்படுத்துவதற்கு மிகவும் சவாலானதொரு நிலை. இதனை சர்வதேச சமூகம் பெரும்பாலும் புரிந்து வைத்திருக்கிறது என்றே கருதலாம். இந்த நிலையில், அரசாங்கம் இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்கி, நியாயமான தேர்தலை நடத்திக் காட்டினால் தான், வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்கும்.

இராணுவத் தலையீடுகள், முறைகேடுகள் நிறைந்த சூழலில், இந்தத் தேர்தல் நடத்தப்பட்டால், அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றாலும் கூட, சர்வதேச ரீதியாக அரசாங்கமே அவமானங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். தேர்தல் முடிவு எவ்வாறிருக்கும் என்ற அரசியல் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டுள்ள அரசாங்கம், இந்தக் கள யதார்த்தத்தையும் புரிந்து கொள்ளாமல் போயிருக்காது.

-தொல்காப்பியன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் உள்ள தமிழ் கைதிகளை விரைவில் தமிழகத்திற்கு கொண்டு வருக

## மனிதநேய மக்கள் கட்சி கோரிக்கை

(சென்னை)

**இலங்கைச் சிறையிலுள்ள தமிழக கைதிகள் 11 பேரையும் இந்தியா அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு மனிதநேய மக்கள் கட்சி தமிழக அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

தமிழக அரசின் உள்துறை அலுவலகத்தில் இந்தக் கைதிகளின் கோப்புகள் தேங்கிக் கிடப்பதாலேயே தாமதமேற்பட்டுள்ளதாகவும் அக்கட்சியின் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான எம்.எச். ஜவாஹிருல்லா சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே கடந்த 2010 ஆம் ஆண்டில் கைச்சாத்தான ஒப்பந்தப்படி இந்தியாவில் தண்டனை பெற்று சிறைகளில் உள்ள இலங்கையைச் சேர்ந்த கைதிகள் இலங்கைக்கு அனுப்பப்பட வேண்டும். அங்கு அவர்கள் எஞ்சிய தண்டனைக் காலத்தைக் கழிப்பார்கள்.

அதேபோல் இலங்கைச் சிறைகளில் உள்ள தண்டனைப் பெற்ற இந்தியக் கைதிகள் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டு எஞ்சிய தண்டனை காலத்தை இந்தியச் சிறைகளில் கழிக்க வேண்டும்.

அந்த உடன்பாட்டின் அடிப்படையில் கடந்த மார்ச் மாதம் இலங்கைச் சிறையில் இருந்த 20 இந்தியக் கைதிகள் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டனர். இவர்களைத் தவிர இன்னமும் 11 தமிழக கைதிகள் இலங்கையிலுள்ள வெலிக்கடைச் சிறையிலுள்ளனர். இலங்கையிலுள்ள இந்தியத்தூதுரகம் கைதிகளை அடையாளம் கண்டு அவர்களை இந்தியா அனுப்புவதற்கான பயண ஏற்பாடுகளைச்செய்வது உள்ளிட்ட நடைமுறைகளை நிறைவு செய்துவிட்டது.

ஆனால், தமிழக அரசின் உள்துறையில் இவர்கள் தொடர்பான கோப்புகள் கடந்த 3 மாதங்களாக நிலுவையிலுள்ளமையால் இந்த 11 தமிழக கைதிகளும் நாட்டிற்கு திரும்ப வர இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, தமிழக அரசு இந்த 11 தமிழர்களும் நாட்டிற்கு திரும்ப உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனிதநேய மக்கள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் ஜவாஹிருல்லா கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்த கைதிகளில் அதிகமானோர் 60 வயதை தாண்டியவர்களாகவும் நோயாளிகளாகவும் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# பொதுமக்களிடம் ஒகஸ்ட் 9 வரை கருத்துக்கள் பெறப்படவுள்ளன

## தெரிவுக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பை மறுசீரமைப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழு பொதுமக்களினதும் பொது அமைப்புகளினதும் அரசியல் கட்சிகளினதும் கருத்துக்களைப் பெறவுள்ளதாக மேற்படி குழுவின் செயலாளரும் பிரதி பாராளுமன்ற செயலாளர் நாயகமுமான நீல் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்கள் ஒரே தேச மக்களாக வாழ்வதற்கு ஏற்ற அரசியல் மற்றும் அரசியலமைப்பு நடவடிக்கைகள் பற்றி விதந்துரைப்பதற்கென சபாநாயகரினால் அண்மையில் பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது.

குழுவின் முதலாவது அமர்வு கடந்த 9 ஆம் திகதி அதன் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் தலைமையில் கூடியது.

இதில் சகல மக்களது தனித்துவத்தை பாதுகாக்கவும் அவர்கள் கண்ணியமாகவும் பாதுகாப்பாகவும் ஒரே தேச மக்களாக வாழ்வதை உறுதிப்படுத்தவும் இலங்கை மக்களின் ஐக்கியத்தை பேணவும் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார அபிவிருத்திகளை மேம்படுத்தவும் தேவையான சிபார்சுகளை மேற்கொள்வதற்குமான பொது மக்களதும் அமைப்புகளினதும் அரசியல் கட்சிகள், நிறுவனங்களினதும் யோசனைகள் மற்றும் கருத்துக்கள் ஒகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படவுள்ளதாகவும் நீல் தெரிவித்தார்.

எந்த மொழியிலும் தமது யோசனைகளை முன்வைக்க முடியும் என்று கூறிய அவர் தேவைப்படின் குறித்த யோசனைகள் குறித்து தெரிவுக்குழு முன்பாக வாய்மூலம் யோசனை தெரிவிக்கவும் அவகாசம் வழங்கப்படும் என்றார்.

சகலரதும் யோசனைகள் கவனத்திற் கொள்ளப்படவுள்ளதோடு அவற்றை தெரிவுக்குழுவின் செயலாளருக்கு அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது. இது தொடர்பான விபரங்கள் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# வடக்கிலும் தெற்கிலும் கைவினை கிராமங்கள்

## 40 மில்லியன் ரூபாவை செலவிடும் இந்தியா

இலங்கையின் அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் கைவினை கிராமங்களை அமைக்க இந்திய அரசு தீர்மானித்துள்ளது.

இத்திட்டத்திற்கென 40 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாக கொழும்பிலுள்ள இந்திய உயாஸ்தானிகராலயம் நேற்று முன்தினம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

இலங்கையின் பாரம்பரிய கைத்தொழில் அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க இந்திய அரசாங்கம் இத்திட்டத்தை செயற்படுத்தவுள்ளது. இதன்கீழ் அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் அடையாளம் காணப்பட்ட இடங்களில் பூரண வசதியுடன் இந்த கைவினை கிராமங்கள் அமைக்கப்படவுள்ளதாக அந்த ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக அம்பாந்தோட்டையில் அடுத்த நான்கு மாதங்களில் கைவினைக் கிராமம் அமைக்கப்படவுள்ளது.

இது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று நேற்று முன்தினம் இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சிங்ஹா மற்றும் பாரம்பரிய கைத்தொழில் அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, தேசிய கலைகள் மன்ற தலைவர் புத்திகீர்த்திசேன மற்றும் பிரதி உயர்ஸ்தானிகர் பி.குமரன் ஆகியோருக்கு இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# சுயாதீன ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும்

## ஐ.தே.க.கோரிக்கை

(கொழும்பு)

சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்படாவிட்டால் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வில் பங்கேற்க வேண்டாமென உறுப்பு நாடுகளிடம் கோரிக்கை விடுக்க நேரிடும் என ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்களுக்கு முன்னதாக சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர கோரியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்படாவிட்டால் அமர்வுகளைப் புறக்கணிக்குமாறு உலக நாடுகளிடம் கோர நேரிடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதாகவும் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படுவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். 17 ஆவது திருத்தச் சட்டம் இரத்துச் செய்யப்பட்டதன் மூலம் சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவ முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்திற்கு அளித்த வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். சுயாதீன ஆணைக் குழுக்களை நிறுவுவதன் மூலமே நியாயமானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)




- 1553 - 9 நாட்களே இங்கிலாந்தின் அரசியாக இருந்த ஜேன் கிறே பதவியிழந்தாள். முதலாம் மேரி அரசியாக முடி சூடினாள்.
- 1870-பிரான்ஸ் புருசியா மீது போரை ஆரம்பித்தது.
- 1900 - பாரிசில் முதலாவது சுரங்கத் தொடருந்து சேவை ஆரம்பமாயிற்று.
- 1912 -அரிசோனா மாநிலத்தில் 190 கி.கி. எடையுள்ள விண்கல் ஒன்று வீழ்ந்து கிட்டத்தட்ட 16 ஆயிரம் துகள்களாகச் சிதறுண்டது.
- 1947 - பர்மிய தேசியவாதியான ஓங் சான் மற்றும் அவரது 6 அமைச்சர்கள் கொல்லப்பட்டனர்.
- 1980-ஒலிம்பிக் விளையாட்டுக்கள் மொஸ்கோவில் ஆரம்பமாயின.
- 1996 -ஒலிம்பிக் விளையாட்டுக்கள் அட்லாண்டாவில் ஆரம்பமாயின.

**பிறப்புகள்**

- 1893 - விளாடிமீர் மயகோவ்ஸ்கி, ரஷ்யக் கவிஞர் (இ. 1930)
- 1938 - ஜெயந்த் விஷ்ணு நர்லிகர், இந்திய அறிவியலாளர்
- 1979 - தில்லார பர்னாண்டோ, இலங்கைத் துடுப்பாட்ட அணியின் சிறப்பு வேகப் பந்து வீச்சாளர்

**இறப்புகள்**

- 1947 - சுவாமி விபுலாநந்தர், தமிழிசை ஆய்வாளர் (பி. 1892)
- 1947 - ஓங்சான், பர்மிய தேசியவாதி (பி. 1915)
- 1987 - ஆதவன், தமிழ் சிறுகதை எழுத்தாளர் (பி. 1942)

### விண்கல்



விண்வீழ்கல் என்பது ஒப்பீட்டளவில் சிறியதும் பூமிக்கு வெளியிலிருந்து பூமியின் மேற்பரப்பை அடைவதுமான பொருளாகும்.

விண்வெளியில் இருக்கும் போது இது விண்கல் என அழைக்கப்படுகின்றது. சூரிய மண்டலத்தில் பில்லியன் கணக்கில் சிறு கற்களும் உலோகப் பாறைகளும் நீந்திக் கொண்டிருக்கின்றன. இந்த விண்கற்கள் பூமியின் காற்று மண்டலத்திற்கூடாக அதிவேகத்தில் வந்தடையும் போது வளிமண்டலத்தின் உராய்வு வெப்பத்தினால் எரிந்து ஒளிரும் பாதையை ஏற்படுத்துகின்றன. அப்பொழுது இவை எரிகல் அல்லது எரி நட்சத்திரம் (எரி வெள்ளி) என அழைக்கப்படுகின்றன.

இவற்றில் சில முழுவதுமாக எரிந்து வளிமண்டலத்துடன் கலந்து விடுகின்றன. சில பூமியிலே விழுந்து பாரிய பள்ளங்களை ஏற்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடிக்கணனி பயன்படுத்துவோரே..! உங்களுக்காக.....



மடிக்கணனி (லப்டொப்) இன்று அனைவர் மத்தியிலும் வேரூன்றி விட்டது. இன்றைய போட்டி நிறைந்த உலகத்திலே வர்த்தக நடவடிக்கைகளையும் அலுவலகப் பணிகளையும் சுலபமாக மேற்கொள்வதற்காக அதிகம் லப்டொப் கணனிகள் உபயோகிக்கப்படுகின்றன.

எம்முடன் செல்லும் இடமெல்லாம் லப்டொப் கணனியை கொண்டு செல்லமுடிந்தாலும் பற்றரியின் மின்சக்தி இறங்குதல் பலருக்கு பெரும் பிரச்சினையாக உள்ளது.

இந்த பிரச்சினை வராமல் இருப்பதற்காக லப்டொப் கணனியின் பற்றரியை நன்கு பராமரித்து வந்தால் பற்றரியை பாதுகாத்துக் கொள்ளலாம். பற்றரியை பாதுகாப்பதற்காக லப்டொப்பை எப்படி பராமரிக்கவேண்டும் என பதற்கு சில அடிப்படை குறிப்புகள் இதோ...

### 1. மின் இணைப்பு தரவும்:

எப்போதெல்லாம் இயலுமோ, அப்போதெலலாம், லப்டொப் கணனியினை மின் சக்தி வழங்கும் ப்ளக் பொய்ண்ட்களில் செருகவும். எப்போதும் முழுமையான சார்ஜ் இருக்கும் வகையில், லப்டொப்பின் பற்றரிக்குத் தீனி போட்டுவிட்டால், நம் கணனி நம்மைக் கைவிடாது.

உங்கள் பவர் சார்ஜர் போல இன்னொன்றினைக் கேட்டு வாங்கி வைத்துக் கொண்டால், ஒன்றை அலுவலகத்திலும், மற்றொனறை செல்லும் இடங்களிலும் பயன்படுத்தலாம்.

தொடர்ந்து மின்சக்தி வழங்கும் இணைப்புகளில் தொடர்பினை ஏற்படுத்தி வைத்தால், பற்றரியின் வாழ்நாள் குறைந்துவிடும் பற்றரியின் வெப்பநிலை அதிகமாகி வீணாகத் தொடங்கும் என்ற உண்மைக்கு மாறான எண்ணத்தினை நீங்கள் கொண்டிருந்தால், அதனை நீக்கிவிடுங்கள்.

இப்போது கிடைக்கும் பற்றரிகள், குறிப்பாக லித்தியம் அயன் பற்றரிகள். தாங்கள் முழுமையாக சார்ஜ் ஆனவுடன், மின்சக்தியைப் பெறுவதனைத் தாங்களா கவே நிறுத்திக்கொள்ளும் திறன் கொண்டவை. எப்போதும் முழுமையாக சார்ஜ் செய்திருப்பது, பற்றரியின் திறனை அதிகப்படுத்தவே செய்திடும்.

### 2. திரையில் ஒளி அமைப்பை குறைத்திட

லப்டொப் கணனித் திரையின் ஒளித்திறன் வெளிப்பாட்டை எப்போதும் குறைவாகவே வைத்திருக்கவேண்டும். இப்போது எல்.இ.டி. பேக் லைட்ஸ் கொண்ட திரைகளே லப்டொப் கணனிகளில் பயன்படுத்தப்படுகின்றன.

இருப்பினும், லப்டொப் திரையின் ஒளி வெளிப்பாடு, அதன் பற்றரியின் வாழ்நாள் நீட்டிப்பில் முக்கிய இடம் கொண்டுள்ளது. கணனி பயன்படுத்தும் மின் சக்தியில் பெருமளவு திரையின் ஒளி வெளிப்பாட்டிற்குச் செலவாகக் கூடாது. எனவே ஒளி வெளிப்பாட்டினைக் குறைவாகவே வைத்து இயக்கவேண்டும்.

மேலும், லப்டொப் கணனியினை வைத்து பணிபுரியும் இடத்தினையும் சரியாகத் தேர்ந்தெடுக்கவேண்டும். அறையில் அதிக அளவில் வெளிச்சம் கொடுக்கும் விளக்குகள் உள்ள இடத்தைக் காட்டிலும், குறைவான வெளிச்சம் உள்ள இடத்தில், லப்டொப் கணனியினை வைத்து இயக்குவதே நல்லது.

லப்டொப் கணனி பற்றரி சக்தியில் இயங்குகையில், திரை ஒளியை மட்டுப்படுத்தி அல்லது முழுவதுமாக நிறுத்தி பற்றரியின் சக்தியைப் பாதுகாக்கும். Change advanced power settings என்பதில் கிளிக் செய்து, ஒளி வெளிப்பாட்டின் ஒளி எந்த அளவில் இருக்க வேண்டும் என்பதனை செட் செய்திடலாம்.

### 3. தவறான அப்ளிகேஷனை கண்டறிய:

பற்றரியின் சக்தியினை அதன் வாழ்நாளுக்கு முன்னரே, முடக்கிப் போடுவதில், தவறான இயக்கத்தைக் கொண்டிருக்கும் புரோகிராம்களும் காரணமாகும். இவை ப்ரசசரின் உழைப்புச் சுற்றினைத் தேவையற்ற அளவில் மிகுதியாக மேற்கொள்ளும். இதனால், அதற்கேற்ற வகையில் மின்சக்தி வீணாகச் செலவழியும்.

அதேபோல, கணனி இயக்கத்தின் பின்னணியில், தேவையில்லாமல் இயங்கும் புரோகிராம்களும், கிராஷ் ஆகி நிற்கும் அப்ளிகேஷன்களும் மின் சக்தியினை வீணாக்கும். இணைய பிரௌசர் அப்ளிகேஷன்கள் இந்த வகையில் அடிக்கடி முடங்கிப் போய், மின் சக்தியினை வீணாக்கும். ஏனென்றால், பிரவுசர்களில் உள்ள அதிகமான ப்ளக் இன் புரோகிராம்கள் மற்றும் பிரவுசரில் பதியப்பட்டிருக்கும் ஸ்கிரிப்டிங் இஞ்சின்கள் இந்த வகையில் தொல்லை கொடுப்பதாக அமைகின்றன.

நவீன சி.பி.யு.க்கள், தானாகவே, தங்களின் செயற்பாட்டிற்கான க்ளாக் ஸ்பீடை, மிகக் குறைந்த அளவிற்கு மாற்றிக்கொள்ளும் திறன படைத்தவையாக உள்ளன. ஆனால், அப்ளிகேஷன் புரோகிராம் எதுவும் செயற்படாமல் இருக்கும் நிலையிலேயே, இந்த செயற்பாட்டினை சி.பி.யு.க்கள் மேற்கொள்ளும்.

வெட்டித்தனமான புரோகிராம்களை முடக்கி வைக்கவில்லை என்றால், அவை பற்றரியின் திறனைத் தேவையற்ற வகையில் குறைப்பதனைத் தடுக்கஇயலாது. லப்டொப்பில் உள்ள வெப்பம் வெளியேற்றப் பயனபடும் சிறிய மின்விசிறிகள் திடீர் திடீர் எனத் தங்களின் வேகத்தினை அதிகப்படுத்தினால், அவை வீணாக இயங்கிக்கொண்டிருக்கும் புரோகிராம்களால் தான் எனக்.கொள்ளலாம்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது மிக எளிது. Ctrl, Alt, Delete கீகளை ஒரு சேர அழுத்தவும். விண்டோஸ் டாஸ்க் மேனேஜரை இயக்கவும். இதில், தேவையின்றி, அதிக மின்சக்தியையும், ப்ரசசரின் செயற்பாட்டு வேகத்தினையும் பயன்படுத்தும். இவற்றை அடையாளம் கண்டு நிறுத்த வேண்டும். பின்னர் நீக்கவேண்டும்.

ஒரு புரோகிராம் வழக்கமான முறையில் நிறுத்தப்பட இயலவில்லை எனில், அதன் மீது ரைட் கிளிக் செய்து, கிடைக்கும் பட்டியலில், Kill Process என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். என்ன செய்தும், புரோகிராம்கள் மட்டுப்படவில்லை எனில், கணனி சிஸ்டத்தினை ரீ ஸ்டார்ட் செய்வதே ஒரே வழி.

### 4. பின்னணியில் இயங்கும் புரோகிராம்கள்:

பற்றரி சக்தியில் இயங்குகையில், லப்டொப் இயக்கத்தின் பின்னணியில் செயற்படும் தேவையற்ற புரோகிராம்களை நிறுத்தி விடலாம். குறிப்பாக கணனி இணைய இணைப்பில் இருக்கையில், பல புரோகிராம்கள் ப்ரசசரின் சக்தியைப் பயன்படுத்தி, இணைய தளங்களைத் தொடர்புகொண்டு, பெரிய அளவிலான அப்டேட் புரோகிராம்களை டவுண்லோட் செய்து கொண்டிருக்கும். இவை பற்றரியின் சக்தியை வீணடிக்கும் என்பதால், இவற்றை நிறுத்திவிடலாம்.

### 5. தேவையற்ற சாதனங்கள்:

லப்டொப் கணனியுடன் இணைக்கப்பட்டுள்ள, பயன்படுத்தாத சாதனங்களை நீக்கிவிடலாம். உள்ளாக இணைந்த மொடம், வை-பி, புளூடூத் போன்றவை பயன்படுத்தப்படவில்லை எனில், செயல்பாட்டினை நிறுத்தி வைக்கலாம்.


மேலே தரப்பட்டுள்ள செயற்பாடுகளை நாம் மிக எளிதாக மேற்கொண்டு பற்றரியின் வாழ்நாளை அதிகரிக்கலாம்.

# நெப்டியூன் கிரகத்தில் நிலா

நெப்டியூன் கிரகத்தில் இன்னொரு புதிய நிலாவை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

சூரியக் குடும்பத்தின் நீலம் மற்றும் பச்சை நிறத்திலான கிரகம் நெப்டியூன். இந்த கிரகத்திற்கு ஏற்கனவே 13 நிலாக்கள் உள்ளன. இந்நிலையில் அப்பிள் தொலைநோக்கி மூலம் இன்னொரு புதிய நிலாவை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். S/2004 N 1 என்று பெயரிட்டுள்ள, இந்த நிலாவின் சுற்றளவு 19 கிலோமீற்றர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த நிலவானது சிறிதாக மட்டுமல்லாமல் மங்கலாகவும், பிரகாசம் இன்றியும் இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



# குழந்தைகளுக்கான இணையத் தளங்கள்



தொழில்நுட்ப வளர்ச்சியின் பிரமாண்டமான இணையத்தில் இன்றைய குழந்தைகள் அதிக ஆர்வம் காட்டுகின்றன.

அவர்களின் அறிவை வளர்ப்பதற்காகவே பல தளங்கள் இருக்கின்றன. அவைகளில் சில வருமாறு,

### 1. Kidsmart

லண்டனிலிருந்து செயற்படும் இந்த இணையதளம் குழந்தைகளுக்கு இணையம் தொடர்பான பல்வேறு விடயங்களை கற்றுத்தருகிறது. சாட்டிங், சோசியல் நெட்வொர்க் தளங்கள், இணைய பாதுகாப்பு என்று இன்னும் நிறைய விடயங்களை சின்ன சின்ன டிப்ஸ்களாக தருகிறது.

முகவரி: www.kidsmart.org.uk

### 2. National Geographic Kids

அமெரிக்காவிலிருந்து செயற்படும் அறிவியல், கல்வி அமைப்பான The National Geographic Society [National Geographic தொலைக்காட்சி இவர்களுடையது தான் குழந்தைகளுக்காக நடத்தும் தளம் இது. அறிவியல், உயிரினங்கள் போன்ற பல விடயங்களை குழந்தைகள் கற்றுக் கொள்ளலாம்.

முகவரி: www.kids.nationalgeographic.com

### 3. Busy Bee kids crafts

குழந்தைகளுக்கு கைத்தொழில்கள் செய்யக் கற்று தரும் தளம். (Craft என்றால் கைத் தொழில் என்று கூகுள் தாங்க சொல்லுச்சு)

முகவரி: www.busybeekidscrafts.com

### 4. Kids Health

மருத்துவம் பற்றி குழந்தைகளுக்கு சொல்லி தரும் தளம். "மூட்டைப்பூச்சி கடித்தால் என்ன செய்யவேண்டும்?", "நமது உடல் பாகங்கள் எவ்வாறு செயற்படுகின்றது?" என்று பல்வேறு விடயங்கள் இருக்கின்றன.

முகவரி : www.kidshealth.org/kid

### 5. Nasa Kids

NASA என்றால் என்னவென்று சொல்ல அவசியமில்லை என்று நினைக்கிறேன். குழந்தைகளுக்கான நாசாவின் தளம்

முகவரி : http://www.nasa.gov

# 100 மெகா பிக்சல் கமெரா




சீனாவைச் சேர்ந்த ஆய்வு நிலையம் ஒன்று 100 மெகா பிக்ஸெலுடைய (megapixel) CCD எனும் charge coupled device உடன் கூடிய கமெராவினைத் தயார் செய்துள்ளது.

சீன விஞ்ஞான நிலையம் எனப்படும் (CAS - Chinese Academy of Sciences) குறித்த நிலையம் தனது இந்தக் கண்டுபிடிப்புக்கான அறிவிப்பை வெளியிட்டது. மேலும் இந்த புகைப்பட மற்றும் வீடியோ கமராவே சீனாவில் இதுவரை தயாரிக்கப்பட்டவற்றில் மிக அதிக தெளிவுடன் கூடிய கமெரா எனவும் CAS அறிவித்துள்ளது. IOE3-Kanban எனப் பெயரிடப்பட்டுள்ள இக் கமெரா 10240x10240 pixel வீச்சமுடைய புகைப் படங்களை எடுக்கக் கூடியதாகும். இதைவிட மிகச் சிறியதாகவும் பாரம் குறைந்ததாகவும் உள்ள இந்த கமெராவின் நீளம் 19.3 cm என்பதுடன் 20 டிகிரியில் இருந்து 55 டிகிரி வரை எந்தவொரு வெப்பநிலையிலும் பாவிக்கக் கூடியதும் ஆகும்.

இந்தக் கமெராவின் அதியுயர் வீச்சமும் HDR எனப்படும் உயர் இயக்க வீச்சமும் காரணமாக அதிக தெளிவுள்ள புகைப் படங்கள் தேவைப்படும் துறைகளான வான்வழி மேப்பிங், நகரத் திட்டமிடல், இயற்கை அனர்த்த அவதானம் மற்றும் நுண்ணிய போக்குவரத்து வழிமுறைகள் போன்றவற்றிற்கு இது மிகவும் உபயோகப்படும் எனப்படுகின்றது. இதற்கு ஏற்றவாறு இக்கமெராவில் அதியுயர் ஆப்டிகல் முறைகளும், கட்டுப்பாட்டு முறைகளும், அதிகளவு வீடியோ மற்றும் புகைப் படங்கள் பதிவதற்கான இடவசதியும் (Storage) காணப்படுகின்றன. இத்தனை வசதிகள் இருந்தாலும் இக் கமெரா எப்போது பொது மக்கள் பாவனைக்கு வரும் என்பது தெரியப் படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடு திருடி விற்க முற்பட்ட சிறுவன் உட்பட மூவர் கைது



(யாழ்ப்பாணம்)

ஆட்டைத் திருடி விற்க முற்பட்ட சிறுவன் உட்பட மூவரை யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இம் மூவரையும் யாழ்ப்பாணம் ஒஸ்மானியா சிவில் பாதுகாப்புக் குழுவினர் கையும்மெய்யுமாக பிடித்த பின்னர் யாழ்.பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் மூன்று ஆட்டுத் திருடர்களையும் கைது செய்துள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொக்குவில் பகுதியில் நின்ற ஆடொன்றை நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் சிறிய ரக வடி வாகனத்தில் வந்த மூன்று பேர் பிடித்து அவ்வாகனத்தில் ஏற்றிச் சென்று யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியிலுள்ளவர்களிடம் விற்க முயன்றுள்ளனர்.

இவர்களின் நடவடிக்கையில் சந்தேகமுற்ற ஒஸ்மானியா சிவில் பாதுகாப்புக் குழுவினர் ஆடு யாருடையது என வினவியதோடு ஆட்டின் உரிமையாளர் யார் எனவும் கேட்டுள்ளனர். இதன்போது தடுமாற்றம் அடைந்த மூவரையும் கையும்மெய்யுமாக பிடித்து யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் சிறுவன் ஒருவனும் உள்ளான் எனவும் அச்சிறுவன் உட்பட இருவர் சுன்னாகத்தை சேர்ந்தவர்கள் எனவும் மற்றொருவர் கொக்குவிலைச் சேர்ந்தவரெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை. ஆடு கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வடிரக வாகனமும் கைப்பற்றப்பட்டு பொலிஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (அ-4)

# யாப்பு திருத்தங்களால் பிரச்சினை தீர்ந்துவிடாது

## கரு எம்.பி. தெரிவிப்பு



தற்போதைய அரசாங்கம் மேற்கொள்ளும் எந்தவொரு அரசியல் யாப்பு திருத்தத்தாலும் தேசிய பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

17 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்ட பின்னர் அரச நிறுவனங்கள் அரசியல் மயமாக்கப்படல் நிறுத்தப்பட்டது. ஆனால், இந்த அரசாங்கம் 18 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை வலுவடையச் செய்துள்ளது.

ஜனாதிபதியின் பதவிக் காலம் நீடிக்கப்பட வேண்டும் என யார் கேட்டது? யாரும் கேட்கவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி குறிப்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தின் தேவைக்கு ஏற்ப இந்த மாற்றம் செய்யப்பட்டது. இவ் அரசியல் யாப்புத் திருத்தத்தின் நோக்கம் ராஜபக்ஷ குடும்ப வேலைத் திட்டமாகும். வேறு எதுவுமில்லை.

அரசாங்கம் கொண்டு வந்த திருத்தங்கள் ஒட்டுமொத்த பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு அல்ல. தற்கால பிரச்சினையை தீர்க்கவும் தங்கள் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ளவுமே ஆகும்.

பிரச்சினைகளைத் தீர்க்க இந்த அரசாங்கம் நியமிக்கும் ஆணைக்குழு பயனற்றது. அநேக ஆணைக்குழுவின் அறிக்கைகள் வெளியிடப்படுவதில்லை. ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அரசுக்கு சாதகமாக அமையாவிடின் அவை குப்பை தொட்டிக்குள் போடப்படும்.

இன்று பிரச்சினை ஒன்றை மறைக்க வேண்டுமாயின் அரசாங்கம் உடனே ஆணைக்குழு ஒன்றை அமைக்கிறது. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அவ்வாறான ஒன்றேயாகும். தமிழ் மக்கள் 50 வருடங்களாக கோரும் அரசியல் அதிகாரத்தை அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் வழங்கிவிட முடியாது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## சனல் 4 பணிப்பாளருக்கு புலிகள் விருதாம்!

இலங்கை இராணுவத்திற்கு எதிராக சனல் 4 தொலைக்காட்சியில் திரைப்படத்தை தயாரித்த கெல்லம் மக்ரேவுக்கு கனடாவைச் சேர்ந்த புலம்பெயர் புலிகள் விருதொன்றை வழங்கியுள்ளதாக திவயினபத்திரிகை தெரிவித்துள்ளது.

கனடாவில் டொரண்டோ நகரில் நடைபெற்ற பென்டா தமிழ் விழாவில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது வழங்கப்பட்ட பின்னர் உரையாற்றிய மக்ரே,

இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல் போவதாகவும் தனது இந்தப் பயணத்தை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது எனவும் கூறியுள்ளதாகவும் அந்த பத்திரிகை தெரிவித்துள்ளது.(அ-2)

## தெரிவுக்குழு விவகாரம் குறித்து விளக்கம் கேட்டது இந்தியா

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் மாற்றங்களைச் செய்வதற்காக இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிடம் இந்தியத் தூதுவர் ஜஸ்வந்த் குமார் சின்ஹா விளக்கம் கேட்டுள்ளார்.

இலங்கைக்கான இந்தியத் தூதரக அரசியல் செயலாளர் ஆர். ரவீந்திரனுடன் இணைந்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை கடந்த வாரம் சந்தித்தபோதே இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா இது தொடர்பான விளக்கங்களைக் கேட்டுள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் எந்த மாற்றங்களையும் செய்யக்கூடாது என்று இலங்கை அரசாங்கத்திடம் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

ஆயினும் கடந்த 9 ஆம் திகதி எதிர்க்கட்சிக்களின் பிரதிநிதிகள் எவரும் பங்கேற்காத போதிலும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முதலாவது கூட்டம் இலங்கையின் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இந்நிலையிலேயே இக்கூட்டத்தில் 13 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் ஆராயப்பட்ட விடயங்கள் மற்றும் தெரிவுக் குழுவின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவரான நிமால் சிறிபால டி சில்வாவிடம் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் விளக்கம் கேட்டுள்ளார்.

இதன்போது நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் நோக்கங்கள் குறித்து நிமால் சிறிபால டி சில்வா விளக்கிக் கூறியுள்ளதாக இலங்கை அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எதிர்காலத்தில் பங்கேற்பர் எனவும் அவர் இந்தியத் தூதுவரிடம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-2)

## புதைபொருள் கொள்ளை
# குற்றச்செயல்களுக்கான அபராதம் அதிகரிப்பு

புதைபொருள் ஆராய்ச்சிப் பொருட்களை சேதப்படுத்துவது, அவற்றைக் கொள்ளையடிப்பது ஆகிய குற்றச் செயல்களுக்கான அபராதத் தொகை அதிகரிக்கப்படும் என அமைச்சர் ஜகத் பாலசூரிய தெரிவித்துள்ளார். தேசிய உரிமைகள் தொடர்பான அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதைபொருள் ஆராய்ச்சி தொடர்பான மீளாய்வுக் கூட்டம் தென் மாகாண ஆளுநர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதைபொருள் ஆராய்ச்சி தொடர்பான குற்றச் செயல்களுக்கு தற்சமயம் ஆகக் குறைந்தபட்ச அபராதமாக 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா விதிக்கப்படுகிறது. இந்த அபராதத் தொகையை 5 இலட்சம் ரூபா முதல் 50 இலட்சம் ரூபா வரை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனை பற்றி நீதி அமைச்சுக்கும் அமைச்சரவைக்கும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையின் அனுதி கிடைத்ததும் மேற்படி அபராதத் தொகை அதிகரிக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தென்மாகாண ஆளுநர் குமாரி பாலசூரிய, அமைச்சின் செயலாளர் நந்தா விக்கிரம, புதைபொருள் பணிப்பாளர் நாயகம் செனரத் திசாநாயக்க ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். (அ-2)

## தமிழ் டிப்ளோமாவை நிறைவு செய்தனர் பொலிஸார்

சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமிழ்மொழி டிப்ளோமா பாடநெறியை நிறைவு செய்து கொண்டு வெளியேறும் நிகழ்வு நேற்று முன்தினம் திருகோணமலை சீனக்குடா பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு திருகோணமலை பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் பந்துல விஜேவர்த்தன மற்றும் கிண்ணியா, மூதூர், சீனக்குடா பொலிஸ் பொறுப்பதிகாரிகள் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர். (அ-2)

## நுளம்பு பெருகக்கூடிய இடம்; 15 பேருக்கு எதிராக வழக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகராட்சி மன்றப் பகுதியில் தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வார தொடர் நடவடிக்கையில் 7 ஆயிரத்து 274 இடங்கள் பரீட்சிக்கப்பட்டுள்ளதாகவும் இவற்றில் 9 பாடசாலைகள், 2 அரச திணைக்களங்கள் உட்பட 424 இடங்கள் நுளம்பு பரவ ஏதுவாக இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அபத்தான நிலைமையில் காணப்பட்ட 15 இடங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாகவும் யாழ். மாநகர சபை பிரதம பொதுசுகாதார பரிசோதகரும் பதில் உணவுப் பரிசோதகருமான ஆ.ஜீவநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி முதல் 7 ஆம் திகதி வரையில் தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் அனுஷ்டிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த தினங்களில் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் இந்நடவடிக்கையில் ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், தொண்டர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர் என 797 பேர் பங்கு கொண்டிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கையின்போது நுளம்புக் குடம்பிகள் காணப்பட்ட 22 இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டதோடு மேலும் நுளம்பு பரவக்கூடியதாக காணப்பட்ட 22 இடங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்கு

# தனியான பிரதேச சபையை அமைக்குக

(பூநகரி)

**கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்கு தனியான பிரதேச சபையை அமைத்துத் தருமாறு கண்டாவளை பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் தி.பெருமாள், உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.**

அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலர் பிரிவுகளான பளை, பூநகரி, கரைச்சி, பச்சிலைப்பள்ளி ஆகியவற்றில் பூநகரி, பச்சிலைப்பள்ளி, கரைச்சி ஆகியவற்றுக்கு மட்டுமே பிரதேச சபைகள் உள்ளன.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பெரிய பிரதேசங்களாக காணப்படுகின்ற கண்டாவளை, கரைச்சி ஆகிய பிரதேச செயலகங்களை இணைத்து கரைச்சி பிரதேச சபை என்ற ஒரு சபையே இயங்கி வருகின்றது.

பிரதேசத்தை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்கும் மக்களின் தேவைகளை அறிந்து அதனை பெற்றுக் கொடுப்பதற்கும் பல பணிகளை பிரதேச சபை ஆற்றி வருகின்றது.

ஆயினும் ஏற்கனவே பல சமூக அமைப்புக்கள் பிரதேச சபையை தனியாக அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளன.

இவற்றைக் கருத்தில் கொண்டு கண்டாவளை பிரதேசத்திற்கு தனியான பிரதேச சபையைத் அமைத்துக் கொடுக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இப்பிரதேசம் மீள்குடியேற்றப்பட்டு 3 வருடங்கள் கடந்து விட்டன. இந்நிலையில் கண்டாவளை பிரதேச சபையை தனியாக அமைத்துத் தருவதாகக் கூறியும் 2 வருடங்கள் கடந்துள்ள நிலையில் இதுவரை அமைத்து தரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-84)

### திடீர் பரிசோதனையில்

# உணவகங்கள் வசமாக மாட்டிக்கொண்டன

### காலாவதியான பொருட்கள் தீ வைப்பு

(மல்லாவி)

மாங்குளம் பிரதேசத்திலுள்ள உணவகங்கள், பல்பொருள் விற்பனை நிலையங்களில் நேற்று வியாழக்கிழமை மதியம் 12 மணிக்கு பிரதேச பொதுச்சுகாதாரப் பரிசோதகர், முல்லை. மாவட்ட உணவு, மருந்து பரிசோதகர் ஆகியோரால் திடீர் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டது.


இதன்போது பல உணவகங்களும் ஒரு பல்பொருள் நிலையமும் பழுதடைந்த, காலாவதியான உணவுப் பொருட்களை வைத்திருந்த நிலையில் சிக்கிக் கொண்டன.

மாங்குளத்தில் உள்ள உணவகங்கள் மற்றும் பல்பொருள் விற்பனை நிலையங்களில் மக்கள் பாவனைக்கு உதவாத, பழுதடைந்த, காலாவதியான உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்கள் செய்த முறைப்பாட்டை அடுத்தே இத்திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உணவகங்களிலிருந்து பழுதடைந்த உணவுப் பொருட்கள், சுகாதார சீர்கேடான முறையில் காணப்பட்ட மாமிசப் பொருட்கள் என்பனவும் பல்பொருள் விற்பனை நிலையமொன்றில் காலாவதியான, பழுதடைந்த உணவுப் பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

பின்னர் உரிமையாளர்கள் முன்னிலையில் சுகாதார பரிசோதகர் குழுவினரால் அவை தீயிட்டுக் கொளுத்தப்பட்டதுடன் குழி தோண்டி புதைக்கவும் பட்டன. (ம-9-15)





ஜப்பான் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பங்களிப்புடன் கிளிநொச்சி நீர் வழங்கல் புனர்நிர்மாணத் திட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்வை நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஸ் குணவர்த்தன நாடாவெட்டி ஆரம்பித்து வைப்பதையும் அருகில் பிரமுகர்கள் நிற்பதையும் கலந்து கொண்ட ஜப்பான் நிறுவன உத்தியோகத்தர்களையும் மக்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

## இருவேறு விபத்துக்கள்

### அறுவர் காயம்

(குருமன்காடு)

வவுனியா நகரப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இருவேறு விபத்துக்களில் ஆறு பேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.




இச் சம்பவங்கள் தொடர்பாக தெரியவருவதாவது,

வவுனியா பூந்தோட்டம் வீதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் 5 பேர் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பூந்தோட்டத்தில் இருந்து வவுனியா நோக்கி சென்று கொண்டிருந்த முச்சக்கரவண்டி, முன்னால் சென்ற துவிச்சக்கர வண்டியை முந்திச் செல்ல முற்பட்டபோது வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியது.

இதன் காரணமாக முச்சக்கர வண்டியில் சென்ற நால்வரும் துவிச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த மாணவியும் காயமடைந்துள்ளனர்.

இவ் விபத்து தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, வவுனியா கதிரேசு வீதியில் நேற்று பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற வானுடன் முச்சக்கர வண்டி மோதியதில் முச்சக்கர வண்டி சாரதி காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளையும் வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-250)




### உதவிப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன

(பூநகரி)

பூநகரி பரம்பன்கிராய் அ.த.க. பாடசாலையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 46 மாணவர்களுக்கும் கணவனை இழந்த 39 பெண்களுக்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். திருநெல்வேலி பிரிவு ரெயன் கழகத்தினரால் உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வு பரம்பன்கிராய் அ.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளதுடன் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் வருகை தந்து மாணவர்களுக்கு புத்தகப்பை மற்றும் கற்றல் உபகரணங்களும் கணவனை இழந்த குடும்பத்திற்கு தலா 5 தென்னங்கன்றுகளும் உடுபுடைவைகளும் வழங்கவுள்ளனர்.

அத்தோடு அன்றைய தினம் பிற்பகல் இப்பகுதியில் இயங்கும் ஆதவன் முன்பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் புத்தகப்பை, சாப்பாட்டு பெட்டி என்பனவும் வழங்கப்படவுள்ளதாகவும் கழகத்தினர் அறிவித்துள்ளனர். (ம-9-84)

### பொதுக்கூட்டம்

மு/புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்தி சபை பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

எனவே, பிரதேச மக்களை இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலை பொது வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (ம-269)

### சட்டவிரோதமாக சுருக்குவலையை பயன்படுத்தியோருக்கு அபராதம்

முல்லைத்தீவு செம்மலைக் கடல் மற்றும் கொக்கிளாய் கடல் பிரதேசத்தில் சட்டவிரோதமாக சுருக்கு வலையை பயன்படுத்தி மீன் பிடித்த 9 பேருக்கு 59 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் கடந்த 16 ஆம் திகதி உத்தரவிட்டுள்ளது.

மேற்குறித்த பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் 9 சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகத்தை சேர்ந்தவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த 9 நபர்களும் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த முல்லைத்தீவு நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா 9 பேருக்கும் 59 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டதுடன் சுருக்கு வலை, படகுகள், இயந்திரங்களைப் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டார்.

இச்சட்டவிரோத மீன்பிடி சம்பந்தமாக உண்ணாவிரத போராட்டம் ஒன்றும் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்டவர்களுக்கு அபராதம்

புதுக்குடியிருப்பு நாவற்காடு பகுதிகளில் சட்டவிரோதமாக மண் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இருவருக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்ததுடன் செலுத்தத்தவறின் 8 மாத கால சிறைத் தண்டனை விதித்து கடந்த 16ஆம் திகதி தீர்ப்பளித்துள்ளது.

அனுமதிப்பத்திரமின்றி மண் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிங்கள சமூகத்தை சேர்ந்த இருவர் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த முல்லைத்தீவு நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா மேற்குறித்த தீர்ப்பை வழங்கியதுடன் மணலை பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டுள்ளார். (அ-ம)

### துணுக்காய் கல்வி வலய போட்டிகளில் மு/மாங்குளம் ம.வி. சாதனை

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வயத்திற்குட்பட்ட 60 பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற பாடசாலை சுகாதார மேம்பாடு மற்றும் பாடசாலை தோட்டம், பாடசாலை திண்மக் கழிவகற்றல், முகாமைத்துவம் ஆகியவற்றுக்கான போட்டி நிகழ்வில் கோட்டம், வலய மட்டங்களில் மு/மாங்குளம் மகாவித்தியாலயம் முதலாம் இடங்களைப் பெற்று சான்றிதழ்களையும் பணப் பரிசையும் வென்றுள்ளதாக வித்தியாலய அதிபர் ப.இரவீந்திரநாதன் அறிவித்துள்ளார்.

கோட்ட மட்டத்தில் 60 பாடசாலைகளுக்கிடையில் முதலாம் இடத்தைப் பெற்று 20 ஆயிரம் ரூபா பணப் பரிசையும் சான்றிதழையும் பெற்றுள்ளதுடன் கோட்ட மட்டத்தில் தெரிவாகிய 9 பாடசாலைகளுடன் வலய மட்டத்தில் போட்டியிட்டு முதலாம் இடத்தை பெற்று 35 ஆயிரம் ரூபா பணப் பரிசையும் சான்றிதழையும் வென்றுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார். (ம-9-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மையென்றும் தீமையென்றும் இல்லை. அவ்வித மாக்குவது மனமே.

– ஷேக்ஸ்பியர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வாக்களிக்கும் உரிமையை ஈடுபாட்டுடன் செய்தல் வேண்டும்

தமிழில் 'ஈடுபாடு' என்ற சொல்லின் பொருள் ஆழ்ந்த அர்த்தமுடையது. ஆங்கிலத்தில் சில சொற்களை அழுத்திக் கூறும் நடைமுறை நம்மவர்களிடம் இருப்பதைக் கண்ணுற்றுள்ளோம்.

ஆங்கிலத்தில் அழுத்திக் கூறப்படும் சில சொற்கள் போல தமிழில் பல சொற்கள் உண்டு. அதில் ஒன்று ஈடுபாடு என்ற சொற்பதமாகும். ஈடுபாடு என்பதன் பொருளை உணர்ந்து கொள்வதன் மூலம் ஒரு மனிதன் தன் முயற்சியில் பூரண வெற்றியைப் பெறமுடியும்.

எனினும் தமிழ் மக்களாகிய எங்களிடம் இருக்கக் கூடிய மிகப்பெரிய பலவீனம் எதிலும் பூரணமான ஈடுபாட்டைக் கொண்டிருப்பதில்லை என்பதாகும்.

அரசியல், சமூகவியல், பொருளியல் என எங்கள் வாழ்வோடு கலந்துள்ள எந்தத்துறையிலும் எங்களின் ஈடுபாடு மிகவும் மந்தமாக இருப்பதன் காரணமாகவே நாம் தோல்விகளைச் சந்திக்க நேரிடுகின்றது.

- இப்போது வடக்குமாகாண சபைத் தேர்தல் சூடுபிடித்துள்ளது.

எனினும் தமிழ் மக்களில் எத்தனை சதவீதத்தினர் வடக்குமாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கவனமுடையவர்களாக இருக்கிறார்கள் என்பது குறித்து ஆய்வு செய்தால், பெறப்படும் முடிபுகள் கவலை தருவனவாகவே இருக்கும்.

ஆக, வடக்கு மாகாணசபைத் தேர்தல் என்பது அரசியல் கட்சிகளினதும், அரசியல் ஆர்வம் உடையவர்களினதும், தமிழர்பற்றிக் கவனம் கொண்டவர்களினதும் பேசுபடு பொருளாக இருக்கிறதே தவிர,

பெரும்பாலான தமிழ்மக்கள் இது விடயத்தில் எந்தவிதமான அக்கறைப்பாட்டையும் கொண்டிருக்கவில்லையென்பது நிதர்சனமான உண்மை.

இதற்கு என்னதான் காரணம் என்றால், கடந்தகால போர் அனர்த்தங்களும் அவை நமக்குத் தந்த இழப்புகளும் எங்கள் வாழ்க்கையில்பெரும் விரக்தியை ஏற்படுத்தி விட்டமையாகும்.

வாழ்க்கையில் விருப்பில்லாதவிடத்து; தேர்தல், வாக்களிப்பு, உரிமை, வாக்காளராகப் பதிவு செய்தல் என அனைத்தும் வெறுப்புக்குரியவையாகிவிடும்.

யாராவது வாக்களிக்கட்டும் நமக்கு அதைப் பற்றிய அவசியமும் தேவையும் இல்லை என்ற நிலைமை எங்களில் பலரிடம் இருக்கிறது.

இங்குதான் தனிமனித உரிமைகள் பற்றியும் வாக்களிப்பதன் பெறுமதிபற்றியும் மக்களிடம் மீளார்வப்படுத்தலைச் செய்தாகவேண்டும்.

இங்கு கூறப்படும் விடயப்பொருள் யாருக்கு வாக்களிப்பதென்பதல்ல. யாருக்கும் வாக்களிக்கலாம். அது மக்களின் உரிமை. அதனைத் தீர்மானிப்பவர்களும் மக்களே!

நாம் கூறுவதெல்லாம் வாக்களியுங்கள் என்பதாகும்.

ஏனோதானோ என்றிராமல் மக்கள் வாக்களிக்க முன்வர வேண்டும் என்பதே நாம் இங்கு பிரஸ்தாபிக்கும் கருப்பொருளாகும்.

இதற்கு அனைத்து அரசியல் கட்சிகளினதும் பூரண ஆதரவு இருக்கும் என நம்பலாம்.

# முன்னாள் போராளிகளுக்கு இலகு கடன் வழங்கல்

## நாளை சந்திக்கிறார் அமைச்சர்

முன்னாள் போராளிகள், தொழிலற்றோருக்கு இலகு கடன் வழங்குவதற்காக புனர்வாழ்வு சிறைச்சாலை மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர நாளை சனிக்கிழமை முல்லைத்தீவுக்கு வருகைதரவுள்ளார்.

முல்லைத்தீவுக்கு வருகைதரும் அமைச்சர், சனிக்கிழமை காலை 10 மணியளவில் முல்லைத்தீவு தமிழ் மகா வித்தியாலயத்தில் முன்னாள்போராளிகளையும் தொழிலற்றோர்களையும் சந்திக்கவுள்ளார்.

பி.ப.2.30 மணியளவில் துணுக்காய் பிரதேச செயலக மண்டபத்திலும் முன்னாள் போராளிகளைச் சந்திக்கவுள்ளார்.

முல்லைத்தீவில் ஆரம்பிக்கப்படவுள்ள முதற்கட்ட இச்சந்திப்பு மாவட்ட ரீதியாக ஒவ்வொரு பிரதேச செயலக மட்டங்களிலும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ்வருடத்தில் மட்டும் முன்னாள் போராளிகளுக்கு கடன் வழங்குவதற்கு என 525 மில்லியன் ரூபாய் தமது அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் அதில் யுத்தத்தின்போது மிகக் கடுமையாக சேதமடைந்த வன்னிப் பிரதேசங்களிற்கு முன்னுரிமை வழங்கப் படவுள்ளது என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சிவலிங்கம் சதீஸ்குமார் தெரிவித்துள்ளார். (எ-4)

## புகுமுக மாணவருக்கு உளச்சார்பு பரீட்சை

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தினால் 2012/2013 ஆண்டு புகுமுக மாணவர்களுக்கான உளச்சார்பு பரீட்சைக்கான அனுமதி கோரப்படுகின்றது. அனுமதிக்கான விண்ணப்படிவங்களை www.uwu.ac.lk எனும் இணையத்தள முகவரியூடாகபெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி இம்மாதம் 23-ம் திகதியாகும். (எ-11)

## சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு விழா

சுதுமலை ஈஞ்சடி ஞானபைரவர் ஆலய அலங்கார உற்சவத்தை முன்னிட்டு நாவலர் சனசமூக நிலையத்தினரால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிப் பரீட்சைக்கான பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 4.00 மணியளவில் ஈஞ்சடி ஞானபைரவர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாவலர் சனசமூக நிலையத் தலைவர் க.லிங்கேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இவ்விழாவில், பிரதம விருந்தினராக மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சூ.ஜெயவீரசிங்கமும்,

சிறப்பு விருந்தினர்களாக சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய அதிபர் த.சண்முகசுந்தரமூர்த்தி, ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை அதிபர் தி.சிறிதரன் மற்றும் ஆசிரியர்கள் திருமதி திகழ்ஜோதி பிரபானந்தன், இ.ரஞ்சிற், கிராம சேவையாளர்கள் இ.லோகநாதன், இ.கங்காதரன் ஆகியோரும்,

மற்றும் ஓய்வுபெற்ற மேலதிக அரச அதிபர் க.துரைராசா மற்றும் க.சிங்கராசா, சி.இராசரத்தினம், தேவஸ்தான தலைவர் க.இராசரத்தினம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ)

# ஐந்து குற்றச்சாட்டுக்களில் 3 குற்றச்சாட்டுக்கள் நிராகரிப்பு

(கரவெட்டி)

வீதிப் போக்குவரத்தை மீறியதாகக் கூறி 5 குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 3 குற்றச்சாட்டுக்களை பருத்தித்துறை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

உடுப்பிட்டி பிரதேசத்தில் வீதிப் போக்குவரத்தை மீறியதாக ஒரு இளைஞனுக்கு எதிராக 5 குற்றச்சாட்டுக்களுக்கு வல்வெட்டித்துறைப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

குறித்த இளைஞன் சம்புவதினம் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற வேளை சாரதி அனுமதிப்பத்திரம், வருமான வரிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், தலைக் கவசம், பொலிஸாரின் சைகைகளைப் பொருட்படுத்தாது சென்றமை என ஐந்து குற்றச்சாட்டுக்களைப் பொலிஸார் பதிவு செய்தனர்.

இவ்வழக்கின் விசாரணை நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது மேற்குறித்த ஐந்து குற்றச்சாட்டுக்களையும் பொலிஸார் மன்றில் முன்வைத்தனர்.

இதையடுத்து குறித்த இளைஞனை நீதவான் விசாரணை செய்த போது சம்பவதினம் சாரதி அனுமதிப் பத்திரம், வருமான வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் ஆகியவற்றைத் தன் வசம் வைத்திருந்தபோதும் பொலிஸார் அதனைக் காண்பிக்கவிடாது தன்னை ஜீப்பில் ஏற்றி பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றதாகவும் தெரிவித்தார்.

இதனையடுத்து குறித்த இளைஞன் மேலுள்ள முதல் மூன்று குற்றச்சாட்டுக்களையும் நீதவான் நிராகரித்ததுடன் மற்றைய இரு குற்றச்சாட்டுகளுக்காக 4 ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

நிராகரிக்கப்பட்ட முதல் மூன்று குற்றச்சாட்டுக்களுக்கான ஆவணங்களை சட்டத்தரணி சிவநேசன் ஊடாக அவ் இளைஞன் மன்றில் சமர்ப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (அ-9-24)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### குழப்பம் செய்யாதீர்கள்

இறைவன் கூறுகின்றான்:- "குழப்பம் விளைவிப்பது, கொலையைவிட கொடியது ஆகும்..."

(திருக்குர்ஆன் 2:271)

"பூமியில் சீர்திருத்தம் ஏற்பட்ட பின்னர் அதில் குழப்பம் உண்டாக்காதீர்கள். உண்மையில் நீங்கள் இறை நம்பிக்கை கொண்டவராயின் இதில்தான் உங்களுக்கு நன்மை இருக்கிறது.

(திருக்குர்ஆன் 7:85)




இறுகிய மனத்தை இளகப் பண்ணுவது கடினமான முயற்சி எனப் பலர் கருதுவர். சிறப்பாக இறைவன் பற்றிய சிந்தனையின்றியிருப்பவர் மனம் இறுகியிருக்கும். தன்னுடைய முயற்சியாலேயே எல்லாம் நிறைவேறுகிறது என்ற முனைப்போடு இருப்பவரும் இவ்வகையினரே. அவர்கள் இறைவன் பற்றி அறிய விரும்பவும் மாட்டார்கள். மணிவாசகரும் இத்தகைய மனோநிலையிலேயே இருந்துள்ளார். அந்த நிலையிலிருந்து தன்னை மீட்க இறையருள்தான் துணை செய்யுமென நம்புகிறார். எனவே இறைவனிடம் தன்னிலைப்பாட்டை விளக்கமாக எடுத்துரைக்கிறார்.

திருக்கைலையில் எழுந்தருளியிருக்கும் மேலானவற்றுக்கும் மேலானவனே நின்னுடைய திருவுள்ளக் குறிப்பின் வழி ஒழுகுவதில் ஆசைப்படுதலின்றி எனது உள்ளக்கருத்தின்படி ஒழுகிக்கொண்டு வீட்டு நெறியை அடைய விரைகின்ற என்னைக் கைவிட்டுவிடாதே! என இறைவனை வேண்டுகிறார். பாடலில் மணிவாசகர் 3 இரட்டைக் கிளவியைப் பயன்படுத்தியுள்ளார். குதுகுதுப்பு என்பது ஆசைப்படுதல், விதுவிதுப்பு என்பது விரைவு. மதுமதுவென்பது நறுமணம் நிறைந்து இனிய மகரந்தத் தோடுகூடிய பூவின் தேன் ஒழுக்கு. முதலிரு இரட்டைக் கிளவிகளையும் தனனுடைய உணர்வு நிலையைப் புலப்படுத்தப் பயன்படுத்தியுள்ளார். மூன்றாவது இரட்டைக்கிளவி இறைவனது அருட்டிறனை விளக்கப் பயன்பட்டுள்ளது.

இனிய மதுமதுப் போன்றென்னை
வாழைப்பழத்தின்
மனங்கனிவித்து எதிர்வது எப்போது?

இதுவே மணிவாசகர் இறைவனிடம் கேட்கும் கேள்வியாகும். இங்கு இறைவன் திருவருட் செயலை ஓர் உவமை மூலம் சுட்டியுள்ளார். அடியேன் மனத்தை வாழைப்பழத்தைப் போல முழுவதும் கனிவித்து அருள வேண்டும். இறைவன் நினைவு இன்றி இறுகிக் கிடக்கும் தன் மனத்தை இறைவன்பால் நெகிழ வைக்கவும் இறையருளே தேவை. இனிய மதுமதுப்போன்று இறைவன் விளங்குவதை எல்லோருக்கும் உணர்த்தியுள்ளார். இறைவன் தெய்வ மணமும் இனிமையும் அழகும் செந்நிறமும் கொண்டவன். அடியார்கள் நறுமணமுடைய மலர்களைத் தூவி வழிபடுவதால் அந்த மலர்களின் நறுமணமும் இறைவன் எழுந்தருளியிருக்கும் இடத்தில் நிறைந்திருக்கும். இறையருள் அடியார் மீது தேனொழுக்குப்போல இடைவிடாது சொரிய வேண்டும்.

இறைவன் மனங்கனிந்த அன்பனாகத் தனக்கு முன்னரே காட்சி தந்ததை மணிவாசகர் மனத்துள் பொதிந்து வைத்துள்ளார். எனவே இறைவன் தன் திருக்குறிப்பினாலே அடியார்களுக்கு எல்லாவற்றையும் உணர்த்துபவன் என்கிறார். அப்பர் தனது பாடல்களிலே இத்திருக்குறிப்புப் பற்றி பதிவு செய்துள்ளார். அதனையே மணிவாசகரும் நின் குறிப்பே செய்து எனப் பாடலில் அமைத்துள்ளார். ஆனால் அப்பர் இறைவனை நேரிற்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

காணும் வாய்ப்பைப் பெற்றவரல்லர். இறைவன் திருக்கோயில்களுக்குச் சென்று திருவுருவங்களை மனங்கனிந்து வழிபடும்போது ஆன்மீக நிலையில் இத்திருக்குறிப்பை கண்டு வியந்தவர். மணிவாசகரோ குருவடிவாய் இறைவனை நேரிற்கண்ட போது இவ்வனுபவத்தைப் பெற்றவர். அதனால் மீண்டும் அத்திருக்குறிப்பினாலேயேதான் இறைவனால் வழிநடத்தப்பட வேண்டுமென விரும்புகிறார்.

குதுகுதுப்பின்றி நின்றென் குறிப்பே
செய்து நின் குறிப்பில்
விதுவிதுப்பேனை விடுதி கண்டாய்
விரையார்ந் தினிய
மதுமதுப் போன்றென்னை வாழைப்
பழத்தின் மனங்கனிவித்து
எதிர்வதைப்போது பயில்விக்
கயிலைப் பரம்பரனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னாபிரிக்காவுடனான ஆட்டம்;

# இலங்கை அணி அறிவிப்பு

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், இலங்கை அணிக்கு மிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலிரண்டு போட்டிகளுக்குமான இலங்கைக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

டினேஷ் சந்திமால் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள இந்தக் குழாமில், சிரேஷ்ட வீரரான திலகரட்ண டில்ஷான் இடம்பெற்றுள்ளார்.

காயம் காரணமாக அண்மையில் முடிவடைந்த மேற்கிந்தியத் தீவுகள் முக்கோணத் தொடரில் பங்குபற்றாத நிலையிலேயே டில்ஷான் இக்குழாமில் இடம்பெற்றுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளில் இடம்பெற்ற முக்கோண ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் குறித்த நேரத்துக்குள் இலங்கை அணி பந்துவீசி முடித்திருக்காத நிலையிலேயே அஞ்சலோ மத்தியூஸிற்கு 2 போட்டித் தடை விதிக்கப்பட்டிருந்தது.

அண்மையில் இடம்பெற்ற முக்கோணத் தொடரில் இடம்பெற்றிருந்த குஷால் ஜனித் பெரேரா, டில்ஹார லொக்குஹெட்டிகே, ஜீவன் மென்டிஸ் ஆகியோருக்கு இடம் வழங்கப்படாததோடு, நுவான் குலசேகர காயம் காரணமாக இடம்பெறவில்லை. திஸர பெரேரா, ஜெஹான் முபாரக் ஆகியோருக்கு இலங்கை அணியில் மீண்டும் இடம் வழங்கப்பட் டுள்ளது.

**அறிவிக்கப்பட்டுள்ள குழாம் :**

டினேஷ் சந்திமால், லஹிரு திரிமன்ன, திலகரட்ண டில்ஷான், உபுல் தரங்க, குமார் சங்கக்கார, மஹேல ஜெய வர்தன, அஞ்சலோ பெரேரா, ஜெஹான் முபாரக், ரங்கன ஹேரத், சச்சித்திர சேனநாயக்க, அஜந்த மென்டிஸ், லசித் மலிங்க, ஷமின்ட எரங்க, திஸர பெரேரா, சுரங்க லக்மால்

## ஒதுங்கினார் ஷரபோவா



ஸ்டான்போர்டு டெனிஸ் தொடரில் இருந்து, காயம் காரணமாக ரஷ்யாவின் ஷரபோவா ஒதுங்கியுள்ளார்.

உலகின் முன்னணி வீராங்கனைகள் பங்கேற்கும் 'ஸ்டான்போர்டு' டெனிஸ் தொடர், அமெரிக்காவில் ஜூலை 22-28 வரை நடக்கிறது. இதிலிருந்து விலகியுள்ளார் உலகின் 'நம்பர்-2' வீராங்கனை ரஷ்யாவின் ஷரபோவா.

சமீபத்தில் இங்கிலாந்தில் நடந்த விம்பிள்டன் தொடரில், இவரது இடுப்பு பகுதியில் காயம் ஏற்பட்டது. இது முழுமையாக குணமடையாத காரணத்தால், இத்தொடரில் இருந்து ஒதுங்குவதாக அறிவித்தார்.

## ராவிட்டிடம் விசாரணை



ஐ.பி.எல்.சூதாட்டம் தொடர்பாக ராஜஸ்தான் அணியின் தலைவர் ராகுல் ராவிட்டிடம் பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளனர்.

ஐ.பி.எல் 6 ஆவது போட்டிகளில் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக ராஜஸ் தான் ரோயல்ஸ் அணியின் ஸ்ரீசாநத், அஜித் சாண்டிலா, அன்கித் சவான் ஆகியோர் கடந்த மே மாதம் 16-ஆம திகதி கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கில் பல சூதாட்ட தரகர்களும் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் டில்லி பொலிசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர.

இது தொடர்பாக ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் தலைவர் ராகுல் டிராவிடிடம் விசாரணை நடத்த, பொலிஸ் அதிகாரிகள் குழு கடந்த 10ஆம் திகதி பெங்களூர் சென்றது. அவர்கள் டிராவிட்டின் வாக்கு மூலத்தை பெற்றுள்ளனர். இந்த வாக்குமூலம் சூதாட்ட வழக்கிற்கு கூடுதல் பலத்தை அளித்துள்ளதாக விசாரணை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# பயிற்சிப் போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றி

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், இலங்கைக் கிரிக்கெட் சபைத் தலைவர் அணிக்குமிடையிலான போட்டியல் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றுள்ளது. தென்னாபிரிக்க அணி 73 ஓட்டங்களால் இப்போட்டியில் வெற்றிபெற்றுக் கொண்டது.

கோல்ட்ஸ் கிரிக்கெட் கழக மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 271 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது விக்கெட்டுக்காக 45 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, தொடர்ச்சியாக சிறப்பான இணைப்பாட்டங்களைப் புரிந்து சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஜே.பி.டுமினி 100 பந்துகளில் 92 ஓட்டங்களையும், அல்விரோ பீற்றர்சன் 77 பந்துகளில் 43 ஓட்டங்களையும், ஏபி.டி. வில்லியர்ஸ், பஃப் டு பிளெஸிஸ் இருவரும் தலா 40 ஓட்டங்களையும், ஹசிம் அம்லா 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கைக் கிரிக்கெட் சபைத் தலைவர் அணி சார்பாக திஸர பெரேரா, தம்மிக்க பிரசாத் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும், விமுக்தி பெரேரா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர.

272 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கைக் கிரிக்கெட் சபைத் தலைவர் அணி 44.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 198 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 73 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் இலங்கைக் கிரிக்கெட் சபைத் தலைவர் அணி சார்பாக அஞ்சலோ பெரேரா 59 பந்துகளில் 46 ஓட்டங்களையு[ம்], ஜெஹான் முபாரக் 48 பந்துகளில் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக கிறிஸ் மொறிஸ், றொபின் பீற்றர்சன் இருவரும் தலா 3 விக்கெட்டுக்களையும், ஜே.பி. டுமினி, ஆரொன் ஃபங்கிசோ இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும் பெற்றனர்.

இலங்கை, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான தொடர் எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் இப்பயிற்சி ஆட்டம் இடம்பெற்றுள்ளது.

## டி.ஆர்.எஸ்.முறை குறித்து கில்கிறிஸ்ட்....

இங்கிலாந்து - அவுஸ்திரேலியா அணிகள் இடையேயான ஆசஷ் டெஸ்ட் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. நாட்டிங்காமில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இங்கிலாந்து 14 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

ஆசஷ் டெஸ்ட் தொடரில் நடுவரின் முடிவை மறு பரிசீலனை செய்யும் முறை (டி.ஆர்.எஸ்) அமுல்படுத்தப்பட்டுள்ளது. நாட்டிங்காமில் நடந்த முதல் டெஸ்டில் டி.ஆர்.எஸ். முறையில் சர்ச்சை ஏற்பட்டது.

இங்கிலாந்து வீரர் டிராட்டுக்கு டி.ஆர்.எஸ். முறையில் கொடுக்கப்பட்ட ஆட்டமிழப்பு மற்றும் ஆட்டமிழப்பு என்று நன்றாக தெரிந்தும் ஸ்டூவர்ட் பிராட் ஆடுகளத்தை விட்டு செல்ல மறுத்தது ஆகியவற்றின் காரணமாக இந்த டெஸ்ட் மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் டி.ஆர்.எஸ். முறையால் எந்த தீர்வும் ஏற்பட போவதில்லை என்று அவுஸ்திரேலிய முன்னாள் விக்கெட் கீப்பர் கில்கிறிஸ்ட் கூறியுள்ளார். இதுகுறித்து அவர் கூறும்போது, ஆசஷ் டெஸ்ட் தொடரில் டி.ஆர்.எஸ். முறை பயன்படுத்தியது சரியானதாக தெரியவில்லை. சில பிரச்சினைகள் சரி செய்யப்படலாம்.

ஆனால் ஒட்டுமொத்த தீர்வாக இல்லை. டி.ஆர்.எஸ்.முறையில் உள்ள குறைபாடுகளால் தான் இந்திய கிரிக்கெட் சபை அதை ஏற்க தயங்குகிறது என்பதை இப்போது புரிந்துகொள்ளமுடிகிறது என்றார்.

## சுவிஸ் டெனிஸ் போட்டியில் ஓய்வுபெற்ற வீராங்கனையும்

ஓய்வுபெற்ற முன்னாள் 'நம்பர்-1' டெனிஸ் வீராங்கனை சுவிட்சர்லாந்தின் மார்டினா ஹிங்கிஸ் மீண்டும் போட்டியில் பங்கேற்கிறார்.

சுவிட்சர்லாந்து வீராங்கனை மார்டினா ஹிங்கிஸ் (வயது 32) ஒற்றையரில் 5, இரட்டையரில் 9 கிராண்ட் ஸ்லாம் பட்டங்கள் வென்றுள்ளார். முன்னாள் 'நம்பர்-1' வீராங்கனையான இவர், 2007 இல் ஊக்க மருந்து சோதனையில் சிக்கினார். இதனால், டெனிஸ் அரங்கில் இருந்து விடை பெற்றார். சில தினங்களுக்கு முன் 'ஹால் ஆப் பேம்' விருதை யும் வென்றார்.

இந்நிலையில், மீண்டும் டெனிசிற்கு திரும்பியுள்ள இவர், இரட்டையர் போட்டிகளில் பங்கேற்க முடிவு செய்துள்ளர். ஜூலை 29ஆம் திகதி ஆரம்பிக்கும் கலிபோர்னியா ஓபன் தொடரில், சுலோவாகியாவின் டேனி யலா ஹண்டு சோவாவுடன் இணைகிறார்.



மார்டினா ஹிங்கிஸ் கூறுகையில், போட்டியில் விளையாடும் எனது வேகம் இன்னும் அப்படியே தான் உள்ளது. கலி போர்னியா ஓபனில் விளையாட ஆர்வமாக உள்ளேன். இத்தொடரின் (1997) ஒற்றையர், இரட்டையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்றுள்ளது நம்பிக்கை தருகிறது என்றார்.

## லாரா சிறந்த வீரர் - பொன்டிங்

நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரை விட, மேற்கிந்தியத் தீவுகள் அணியின் துடுப்பாட்ட வீரர் பிரைன் லாரா சிறந்தவர் என எண்ணுவ தாக அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் றிக்கி பொன்டிங் தெரி வித்துள்ளார். எனினும், தனது காலத்தில் சச்சின் டெண்டுல்கர், பிரைன் லாரா இருவரும் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு துடுப்பாட்ட வீரர்கள் குறித்தும் கேட்கப்பட்ட போதே றிக்கி பொன்டிங் இவ் வாறு தெரிவித்தார்.



சச்சின் டெண்டுல்கரை விட, பிரைன் லாரா அதிகமான போட்டிகளை தனது அணிக்காக வென்று கொடுத்துள்ளதாக றிக்கி பொன்டிங் தெரிவித்தார். அத்தோடு, அணித் தலை வராக சச்சின் டெண்டுல்கரை விட பிரைன் லாராவே தன்னை அதிகளவு யோசிக்க வைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.


சச்சின் டெண்டுல்கரை கட்டுப்படுத்துவதற்கு தன்னால் வழிகளைக் கண்டுபிடிக்க முடிந்ததாகத் தெரிவித்த றிக்கி பொன்டிங், ஆனால் பிரைன் லாராவைக் கட்டுப்படுத்த முடியாமலிருந்ததாகத் தெரிவித்தார்.

## தடகளப் போட்டியிலிருந்து பலர் விலகல்

உலக தடகள சம்பியன்ஷிப் போட்டி ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் அடுத்த மாதம் 10ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடைபெறுகிறது. ஊக்கமருந்து குற்றச்சாட்டில் சிக்கிய 100 மீற்றர் ஓட்டப்பந்தய வீரர்கள் அசபா பவெல் (ஜமைக்கா), டைசன் கே (அமெரிக்கா) ஆகியோர் உலக தடகளத்தில் இருந்து விலகிய நிலையில், இந்த விலகல் பட்டியலில் உலக சம்பியன் ஜமைக்காவின் யோஹன் பிளாக்கும் இணைந்துள்ளார்.

2011ஆம் ஆண்டு டெகுவில் நடைபெற்ற உலக தடகளத்தில் 100 மீற்றர் ஓட்டத்தில் சம்பியன் பட்டத்தை கைப்பற்றியவரான 23 வயதான யோஹன் பிளார்க், தசைப்பிடிப்பு பிரச்சினை காரணமாக விலகுவதாக அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் அஞ்சலோ மெத்தியூஸ் மற்றும் ஹேசானி சில்வா ஆகிய இருவரும் நேற்று திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர். கொழும்பு, கொள்ளுபிட்டியில் அமைந்துள்ள சென்.மேரிஸ் தேவாலயத்தில் இவர்களது திருமணம் சிறப்பாக நடைபெற்றது. இவர்களது திருமணத்தின் சாட்சியாளர்களான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவும் கைச்சாத்திட்டனர்.

## 5 தென்னிலங்கை....

புதிய சிஹல உறுமய, அப்புஆராச்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் கட்சி முதலான 5 கட்சிகளும் தீர்மானித்துள்ளன.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இடம் பெறவுள்ள வடக்கு, வட மேல், மத்திய முதலான 3 மாகாண தேர்தல்களிலும் போட்டியிடுவதற்கான தயார்படுத்தல்களை மேற்கொள்வதற்காக குறித்த 5 கட்சிகளின் தலைவர்கள் பேச்சு நடத்திவருகின்றனர். (எ-11)

## நகை மோசடி செய்த....

யுடன் குறைந்த வட்டியில் அதிக பணம் என்றவுடன் முந்தியடித்துக் கொண்டு நகைகளைக் கணவன்மாருக்குத் தெரியாமல் வழங்கியுள்ளனர்.

இவ்வாறு கடந்த ஒரு வருட காலமாக நகைகளைப் பெற்றுக் கொண்ட இரு கில்லாடிப் பெண்களும் நகைகளை மீள வழங்குவதில இழுத்தடிப்புச் செய்த வருவதாக நகைகளைப் பறிகொடுத்தவர்கள் தெரிவித்தனர்.

ஏமாற்றமடைந்தவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய சிறு குற்றத் தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்த்தைத் தொடர்ந்து குறித்த இரு பெண்களும் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தனர்.

விசாரணை முடிவில் மோசடி செய்த தங்க நகைகளை தவணை முறையில் நகையை பறிகொடுத்தவர்களுக்கு மீள வழங்குவதாக அவர்கள் உறுதியளித்திருந்தனர்.

எனினும் அவ்வாக்குறுதியின் படி நகைகள் எமக்கு ஒழுங்காக மீளளிக்கப்படவில்லை என ஏமாந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தமது குடும்பங்களுக்குள் குழப்பம் ஏற்படுவதாகவும் இது தொடர்பில் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-4)

## இராணுவத்தை முகா....

மாகாண சபைத் தேர்தலை இலங்கை அரசு பிற்போடுமா? அல்லது அதற்கு முன்னர் 13-வது திருத்தத்தில், மாற்றங்களை கொண்டு வருமா என்ற சந்தேகம் இந்தியாவிற்கு ஏற்பட்டுள்ளது. இதனால் இலங்கைக்கு எதிராக இந்தியா பல்வேறு கோணங்களில் பல் குழல் தாக்குதல்களையும் அழுத்தங்களையும் கொடுத்து வருகிறது.

தேர்தல் நடத்தப்படும்வரை இது நிறுத்தப்படப் போவதில்லை. இதன் ஒரு அங்கமாகவே தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியை பயன்படுத்தியுள்ள இந்திய மத்திய அரசு கச்சதீவை இந்தியா மீளப்பெற வேண்டும் என வலியுறுத்தி அவர் ஊடாக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது.

அதாவது இந்திய- இலங்கை உடன்படிக்கையை இலங்கை அரசாங்கம் இரத்துச் செய்தால் தாம் கச்சதீவை மீளப்பெறுவோம் என்ற அச்சுறுத்தலை இந்தியா இந்த வழக்கின் மூலம் விடுத்துள்ளது.

இது மட்டுமல்லாது, வடக்கில் இராணுவத்தினர் முகாம்களுக்குள் முடக்கப்பட வேண்டுமென்ற அழுத்தமும் தொடரும். இதற்கு பொதுநலவாய நாடுகளின் அமைப்பும் ஆதரவு வழங்கும். சிவில் நிர்வாகம் வடக்கில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற விடயத்தை கொண்டே இந்த அழுத்தம் கொடுக்கப்படும் என தெரிவித்தார். (எ-11)

## கூட்டமைப்பின் கூட்டம்....

தேசிய கூட்டமைப்பில் அங்கததுவம் வகிக்கும் 5 கட்சிகளில் இருந்தும் வேட்பாளர் தெரிவு செய்வதில் குழப்பநிலை ஏற்பட்டதால் மீண்டும் இன்று கூடி தீர்மானம் எடுக்கவுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மேலும் கூறினர்.

இந்த தேர்தலில் போட்டியிடுவதற்கு யாழ் மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் வேட்பாளர் தெரிவு மற்றும் கட்சிப் பங்கீடு போன்றவற்றில் அனைத்துக் கட்சிகளும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதுடன் யாழ் மாவட்டத்தில் அங்கத்துவக் கட்சிகளின் பங்கீடு தொடர்பில் இழுபறிநிலை காணப்படுவதால் இறுதித்தீர்மானம் எடுப்பதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாக கூட்டமைப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக இந்த தேர்தலில் தொடர்பில் போட்டியிடுவதற்கு கட்சிகளுக்கிடையில் நடந்த கலந்துரையாடலில் தமிழரசுக் கட்சிக்கு 9 பேரும், சுரேஸ் பிரேமச்சந்திரனின் ஈபிஆர்எல்எப் சார்பில் 4 பேரும் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் 3, ரெலோ அமைப்பின் சார்பில் 3 பேரும் புளொட் அமைப்பின் சார்பில் 2 பேரும் என்று கட்சிப் பங்கீடு வழங்க தீர்மானிக்கப்பட்டது.

இதனை சில கட்சிகள் ஏற்றுக்கொள்ளாத நிலையில் இறுதித் தீர்மானம் எட்டமுடியாததையடுத்து கூட்டம் நிறைவு பெற்றது. (எ-11)

## ரூ.109 கோடி....

யடையும்.

24 வருடங்களுக்குப் பின்னர் ஓர் ஆசிய நாட்டில் இவ்வாறான மிக முக்கியத்துவம் வாய்ந்த உச்சி மாநாடு நடைபெறுகின்றது.

53 நாடுகளில் தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இம்மாநாட்டுக்கான ஏற்பாடுகளில் எந்தவிதமான ஒளிவு மறைவுகளும் இல்லை. இதில் கலந்து கொண்டு தகவல்கள் சேகரிக்க சகல ஊடகங்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர, புலம்பெயர்ந்தவர்களுடன் இணைந்து இந்த மாநாட்டைக் குழப்பி நாட்டைக் குட்டிச்சுவராக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். இது மிகவும் கவலைக்குரியது.

எனினும் எந்த வகையான சவால்களையும் எதிர்கொண்டு இந்த உச்சி மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடிக்க அரசு உறுதி பூணடுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.(எ-11)

## கருணாநிதியை....

விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழக அரசு சார்பில் ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடரப்பட்டுள்ள நிலையில் திராவிட முன்னேற்ற கழக தலைவர் கருணாநிதியும் ஒரு மனுவை தாக்கல் செய்தார்.

இம்மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம், மத்திய அரசுக்கு பதிலளிக்க நோட்டீஸ் அனுப்பி வைத்துள்ளது.

இந்நிலையில் கச்சதீவு விவகாரத்தில் திராவிட முன்னேற்ற கழக தலைவர் கருணாநிதி செய்த துரோகங்கள் என்று கூறி தமிழக முதல்வர் ஜெயலலிதா "நீண்ட" அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அதிமுக சார்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், திமுக தலைவர் கருணாநிதி மேற்கொள்ளத் தவறிய நடவடிக்கைகளை ஜெயலலிதா பட்டியலிட்டுள்ளார்.

அதுமட்டுமன்றி அரசியல் இலாபம் தேடிக்கொள்வதற்கான முயற்சி என்றும் தனது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.(எ-11)

## ஈழப் போர் வெடிக்கும்....

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசு மாகாண சபைத் தேர்தலில் வெற்றிப் பெறுவதற்காக மக்களை ஏமாற்றி வருகிறது. எனினும் அரசாங்கம் நினைப்பதை செய்து விட முடியாது.

நடைபெறவுள்ள வட மாகாண சபைத் தேர்தலை உலகநாடுகளே அவதானித்துக் கொண்டிருக்கின்றன. இந்த விடயத்தில் அரசாங்கம் நாட்டின் மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்ற முடியாது.

இதுவரை வடக்கின் பொலிஸ் அதிகாரத்துடன் தேர்தலை நடத்துவதாக அரசு கூறவில்லை. இந்த விடயத்தில் அரசாங்கத்திற்கு அக்கறையில்லை என்பதை காண முடிகிறது.

அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள், மாகாண சபைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களையும் தமது எதிர்ப்புக் கோஷங்களையும் எழுப்பி வந்தனர், எனினும் இந்தியா அவர்களின் வாய்களை அடைத்துவிட்டது.

எதனை செய்தாவது வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் அரசாங்கத்தினர் செயற்படுகின்றனர். இதன் காரணமாக அவர்கள் மக்களிடம் கெஞ்சி வாக்குகளை கேட்கின்றனர்.

தொடர்ந்தும் ஆட்சியை தம்மால் நடத்த முடியாது என்று அரசாங்கத்திற்கு புரிந்து விட்டது. தேர்தலில் தோல்வியடைந்தால், குடும்ப அரசியல் பாதிக்கப்பட்டுவிடும் என்பதும் ஆட்சியாளர்களுக்கு தெரியும். இதனால் பொய்களை கூறி, மக்களை ஏமாற்றி தேர்தலில் வெற்றி பெற நினைக்கின்றனர்.

மேலும் இலங்கையின் அரசியல் வரலாற்றிலேயே மிகவும் மோசமான ஒரு ஆட்சியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஆட்சி காணப்படுகிறது.

இந்த மோசமான ஆட்சியாளர்கள் மக்களை ஏமாற்றி மக்களின் பணத்தை கொள்ளையடித்து நாட்டை பாதாளத்திற்கு இட்டுச் சென்றுள்ளதோடு சர்வதேசத்தையும் ஏமாற்றி ஆட்சி நடத்தி வருகின்றனர்.

அதனை மேலும் தொடர்வதற்கு எவரும் இடமளிக்கமாட்டார்கள் எனவே மிக விரைவில் ஆட்சி மாற்றம் ஒன்றினை எதிர்பார்க்க முடியும இதற்கு மக்களே துணையாக இருப்பார்கள் என தெரிவித்தார்.(எ-11)

## கவிஞர் வாலி....

பின்னடைவு ஏற்பட்டது.தீவிர சிகிச்சை பயனளிக்காமல் நேற்று மாலை ஐந்து மணி அளவில் அவர் இறந்தார்.

ரங்கராஜன் என்ற இயற்பெயர் கொண்டவாலி பிறந்து, வளர்ந்தது திருவரங்கத்தில். தன் நண்பர்களின் துணையுடன் 'நேதாஜி" என்னும் கையெழுத்துப் பத்திரிகையைத் தொடக்கினார். அதன் முதல் பிரதியை வெளியிட்டவர் எழுத்தாளர் கல்கி.

வாலிக்கு ஓவியத்திலும் ஆர்வம் மிகுந்திருந்தது. நன்றாகப் படம் வரையும் திறமையும் இருந்தது. அந்தக் காலகட்டத்தில் ஆனந்த விகடனில் ஓவியங்களை வரைந்து கொண்டிருந்த மாலியைப் போலவே தானும் ஒரு ஓவியராக வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தவரிடம் அவருடைய பள்ளித் தோழர் ஒருவர் 'மாலி"யைப் போல நீயும் சிறந்த சித்திரக்காரனாக வரவேண்டும் என்றுகூறி "வாலி" என்னும் பெயரைச் சூட்டினார் என்று கூறப்படுகிறது.

வாலி ஏறத்தாழ ஐந்து தசாப்தங்களாக தமிழ்த் திரையுலகில் முக்கியமானதொரு ஆளுமையாக விளங்கினார். இவ்வளவு நீண்ட காலம் நிலைத்து நின்ற திரைப்படப் பாடலாசிரியர் வேறு எவரும் இல்லை என்கிறார் திரைப்பட ஆய்வாளர் வாமனன்.

வாலி பத்தாயிரம் பாடல்களுக்கும் மேல் எழுதியதாகக் கருதப்படுகிறது.

2007ம் ஆண்டில் பத்மசிறி விருது பெற்ற வாலி பாண்டவர் பூமி, கிருஷ்ண விஜயம் மற்றும் அவதார புருஷன் போன்ற கவிதை நூல்களையும் படைத்துள்ளார்.

அவரது மறைவிற்கு திரையுலகப் பிரமுகர்கள் பலர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். (எ-11)


A/L [2015]

தொழில் நுட்பத்துறை

ஆரம்பம் :-
20.07.2013 சனி 10.00 மணி

D.C.M.
யாழ்நகர்

(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)

(C-4057)



2015 BIOLOGY EXAM MARKS LIST 5th
SCIENCE CORNER

| பெயர் | புள்ளி | பாடசாலை |
|---|---|---|
| M. சுலக்ஷனா | 95 | J/VGHS |
| R. தமயந்தி | 94 | J/HLC |
| K. தனுசியா | 93 | J/VGHS |
| J. பிரியங்கா | 90 | J/VGHS |
| S. நவநீதா | 90 | J/VGHS |
| J. டிஜீர்த்தனா | 88 | J/HLC |
| C. யாழினி | 88 | J/VGHS |
| S. பிரணவி | 88 | J/UGC |
| A. பிலோமினி | 87 | Mu/PCC |
| R. தனேஷ் | 86 | St/JC |
| S. நாகசாயினி | 86 | J/VGHS |
| M. மாதுரி | 85 | J/CGC |
| S. மிதுசா | 84 | J/CGC |
| M. தனுஷியா | 83 | J/VGHS |
| N. சரண்யா | 83 | J/VGHS |
| S. அபிராமி | 82 | J/UGC |
| R. கீர்த்திகா | 82 | J/CGC |
| K. யாழினி | 82 | J/VGHS |
| K. தர்மிலா | 80 | J/VGHS |
| S. தனன்சிகா | 80 | Mu/PCC |
| C. அக்சாயினி | 79 | J/VGHS |
| S. மாதுளா | 79 | J/VGHS |
| T. சிந்துஜன் | 78 | J/MHC |
| S. அனோவன் | 77 | JHC |
| R. கீர்த்திகா | 77 | J/VGHS |

2015 Class Time - Batch - I சனி, ஞாயிறு காலை 7.00 -காலை 8.20
Batch - II சனி, ஞாயிறு மாலை 3.00 -மாலை 4.30

சு. பொன்திவாகரன்

(C-4055)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 5 புலமைப்பரிசில்

மாணவர்களுக்கான "புகழின்"

## வழிகாட்டற் கருத்தரங்கு - 2013

இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
காலம் : 21-07-2013 (காலை 9.00 - 3.30 மணிவரை)

கருத்தரங்கில் அலசப்படும் விடயங்கள் :-

- மீதி உள்ள ஒரு மாத காலத்தில் கற்கவேண்டிய விடயங்கள், வினைத்திறனான கற்றலுக்கான நுட்பங்கள்.
- பரீட்சைக்கால நடைமுறைகள் மற்றும் பரீட்சைக்கால உடல் உள நலம் பேணல் தொடர்பான ஆலோசனைகள்.

நுழைவுக் கட்டணம் 300/=

(3408)

உங்கள் அனுமதியை முன்கூட்டியே உறுதிப்படுத்துங்கள்.
கருத்தரங்கு அன்றும் மண்டப வாயிலில் நுழைவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

---

465,000 (நாலு இலட்சத்து அறுபத்தையாயிரம்) மட்டும் செலவிட்டு,
**பல இலட்சங்களைச் சம்பாதிக்கும் வாய்ப்புக்கள்!**

UK, Australia, New Zealand, Singapore, Malaysia, China என விரும்பிய நாட்டில்
**3 ஸ்டார் 5 ஸ்டார் ஹொட்டேல்களில் கௌரவமான தொழில்**

உலகின் முன்னணி கப்பல் நிறுவனங்களுடன் இணைந்து, உலகம் முழுவதும் சுற்றியபடி இலட்சக் கணக்கில் சம்பாதிக்கும் கப்பல் வேலைவாய்ப்புக்கள்

## விளக்கக் கருத்தரங்கு & உடனடி அனுமதி

காலம்: 20.07.2013 சனிக்கிழமை காலை 9 மணி
இடம் : சிகரம் விரிவுரை மண்டபம்
இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

முற்பதிவுகளுக்கு
தொ.பே.: 021 222 00 11
நேரடி: 0773 616 798

---

# ஜனாதிபதி....

தெரிவித்தார்.

அத்துடன் இந்த சந்திப்பில் கலந்து கொண்டவர்கள், அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்ததாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

எனினும் இந்த சந்திப்பில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் கலந்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-11)

---

## A/L வரலாறு 2013

### மாபெரும் கருத்தரங்கு

வளவாளர்கள் R.M.சத்தியன் M.Ed (விரிவுரையாளர்)
S.பத்மன் M.A. (History)
M.சுஜிகரன் (B.A.)
S.S.தாஸ் - B.A. (Hons)

இடம் : D.M.I. யாழ்.நகர்
காலம் : 21.07.2013 (ஞாயிறு)
22.07.2013 (திங்கள்)
நேரம் : காலை 8 மணி முதல் 12 மணிவரை
மாலை 1 மணி முதல் 5 மணிவரை
கட்டணம் 500/-

இடநெருக்கடியைத் தவிர்ப்பதற்காக வரையறுக்கப்பட்ட அளவிலேயே அனுமதிகள் வழங்கப்படும்.

---

## தொழில்சார் கற்கை நெறி கருத்தரங்கு

**இடம் :** Spectra Skills 19, Stanley Road, (Peoples Bank, 2 nd Floor) Jaffna.

**காலம்:** 22.07.2013 திங்கட்கிழமை, காலை 9 மணி முதல் 12 மணிவரை

இவ் இலவச அறிமுகக் கருத்தரங்கில் Computing, Banking, Accountancy, HRM (IPM), Hospilatity, Management, English மற்றும் ஏனைய தொழில்துறை சார் கற்கை நெறிகள் தொடர்பான தகவல்கள் வழங்கப்படுவதுடன் பதிவுகளும் இடம்பெறும்.

இக் கற்கை நெறிகளுக்கு பதிவு செய்யும் மாணவர்களில் 3 பேருக்கு வெகுமதி மிக்க பரிசில்களும் ஏனையோருக்கு புலமைப் பரிசில்களும் காத்திருக்கின்றது. இக்கருத்தரங்கிற்கான உங்கள் வருகையை நேரடியாகவோ தபால் மூலமோ அல்லது தொலைபேசி மூலமோ 21.07.2013 இற்கு முன் உறுதிப்படுத்தி கொள்ளுங்கள். (சி-4048) தொ.பே: 021 222 1422/ 1423

---

## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

### கருத்தரங்கு (இலவசம்)

காலம் : 20.07.2013 - சனி மாலை 1.00
A/L [2015] அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடத்துறை

## தொழிநுட்பவியல்

- Engineering Technology
- Bio Systems Technology
- Science for Technology

இப்பாடத்துறை தொடர்பான சகல விடயங்களும் உள்ளடக்கிய கருத்தரங்கு இத்துறை சார்ந்த விரிவுரையாளர்களால் நடாத்தப்பட உள்ளன.

(C-4045)

NOTE

இந்த இலவச கருத்தரங்கில் இத்துறைசார்ந்த சகல பாடசாலை மாணவர்களும் பங்குபற்றி பலன் அடையுமாறு கேட்டுக் கொள்கின்றோம். அன்றைய தினம் வருகை தரும் மாணவர்களுக்கு கையேடுகள் இலவசமாக வழங்ப்படும்.

---

Shakthy **microtec** Computer wholesaler
Hotline: 0779120842

Rs.13,000/- Rs.14,000/- Rs.15,000/-
19"-Rs.7,000/-
17"-Rs.6,000/-
15"-Rs.5,000/-

Branded கணனிகள், மடிக் கணனிகளை (Labtop) 13000 ரூபா முதல் 35000 வரையில் பெற்றுக்கொள்ளலாம்.

100ற்கு மேற்பட்ட கணனிக் கொள்வனவிற்கு விஷேட விலைக்கழிவு

Head Office: 4500, Sheppard Ave, East, unit 27, Toronto, ON, M1S 1V2, Canada.
Branches: No.191/1, Grand pass Road, Colombo - 14
No.170, Palaly Road, Vigneswara Building, Kondavil East, Jaffna. Hotline : 0779120842 (C-3567)

---

**NEC** மணிக்கூட்டு வீதி, யாழ்நகர். (பெருமாள் கோயில் அருகில்)


A/L 2015 தொழில்நுட்ப பிரிவு

- Science for Technology — By - N. EASAN B.Sc, PGDE
- Engineering Technology — By - P. THEESAN B.Sc

ஆரம்பம் : 20.07.2013 சனி 8.00 மணி
அனுமதிக்ளை உடன் பதிவு செய்யவும் 0774696695
(C-4056)

---

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 31 . 05 . 1961

மறைவு 17 . 07 . 2013

மல்லாகம் கோட்டைக்காட்டை பிறப்பிடமாகவும்
சுவிஸ் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர்

## இராசையா உதயமனோகரன்

ஆலய வாசலில் வந்தீர், திருப்பணிக்கு உதவினீர்!
மீண்டும் வருவேன் என்று கூறினீர்
காத்திருந்தோம் வருவீரென்று கலங்கவிட்டு
சென்று விட்டீரே - இல்லை
இறைவன் பாதம் அடைந்து விட்டீர்.

அன்னாரின் பிரிவால் துயர் உற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

சுன்னாகம் மயிலணி வடக்கு
அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி சமேத
அண்ணமகேஸ்வரர் தேவஸ்தானம்.


ஆலய பரிபாலன சபையினர்.

[3404]

---

தற்போது யாழ் நகரில்...

ரூபா 75000.00 (குறைந்த பட்சம்) மாத வருமானம் தரும் தொழில் வாய்ப்புக்களை உத்தரவாதப்படுத்தும் 6 மாத தீவிர பாடநெறி



இலங்கையில் BCAS CAMPUS மாத்திரமே வழங்கும்

## CAD & BS With MEP

Computer Aided Design & Building Studies
Mechanical Electrical & plumbing

மிக வேகமாக வளர்ந்து வரும் உலகளாவிய கட்டட நிர்மாணத்துறையில் கணணி பட வரைஞர்களுக்கும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்குமான வேலை வாய்ப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன. கணணி முறைப் படம் வரைதலில் சிறப்புத் தேர்ச்சியும் (Expert knowledge in CAD) கட்டட நிர்மாணத் தொழில் நுட்பங்கள் தொடர்பான அடிப்படை அறிவும் கொண்டோர்களுக்கான ஏராளமான தொழில் வாய்ப்புக்கள் மத்திய கிழக்கிலும் ஏனைய நாடுகளிலும் காணப்படுகின்றன. அதேவேளை கூடுதல் வருமானமும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் கடந்த 14 வருடங்களுக்கும் மேலாக உயர்கல்வி வாய்ப்புக்களையும் தொழிற் பயிற்சிப் பாடநெறிகளையும் வழங்கிவரும் முன்னணி நிறுவனமான BCAS CAMPUS மாத்திரமே வழங்கும் CAD & BS பாடநெறி உடனடித் தொழில் வாய்ப்பை உத்தரவாதப்படுத்தும் மேற்குறிக்கப்பட் திறன்களைப் பெற்றுத் தருவதோடு சர்வதேச அங்கீகாரம் கொண்ட இரட்டைத் தகைமைகளையும் பெற்றுத் தருகிறது. CAD & BS பாடநெறியினைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் அனைவரும் உடனடித் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள அதே வேளை பெரும்பான்மையானவர்கள் BCAS CAMPUS இன் உதவியுடன் மத்திய கிழக்கில் CAD Draughtsman, Construction Supervisor, Junior Quantity Surveyors, Land Surveying Assistant ஆகிய தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர்...

**Duration : 6 Month**
பாடநெறி முடிவில் இரட்டைத் தகைமைகள்
- Professional Diploma in CAD
- Certificate in Building Studies.

**BCAS CAMPUS** BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

Building Careers - Transforming Lives

www.bcas.lk | ISO 9001:2008 CERTIFIED | 14 Years of Trust & Excellence in Higher Education

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.